Downloaded from https:// www.studiestoday.com

# மேனிலை இரண்டாம் ஆண்டு

# சிறப்புத்தமிழ்

## வகுப்பு

## XII

HIGHER SECONDARY COURSE
TAMIL - OPTIONAL
Second Year

கேரளஅரசு
கல்வித்துறை

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2015

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

*Prepared by* State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala.
*Website* www.scert.kerala.gov.in *e-mail* scertkerala@gmail.com

*Typeset and design by* SCERT Computer Lab
*To be printed in quality paper - 80gsm map litho (snow-white)*

© Government of Kerala • Department of Education • 2014

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

*மாணவச் செல்வங்களே!*

**மொ**ழி என்பது மனிதனை ஒருங்கிணைக்கச் செய்யும் கருவியாக மட்டுமன்றி மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் ஊடகமாகவும் திகழ்கிறது. மொழியின் இனிமையும் ஆற்றலும் அதனைப் பயன்படுத்துவோரின் தன்மையைப் பொறுத்தே அமையும். மொழி வாயிலாகப் பண்பாடு, கலை, இலக்கியம் ஆகியவற்றைக் கற்று, காலத்திற்கு ஏற்ப அவற்றைத் திறம்படப் பயன்படுத்த வேண்டும். காலச் சூழலுக்கு ஏற்ப மொழியில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு. அவற்றை அறிந்து, மொழி அமைப்பினை நன்கு புரிந்து, அதனைக் கையாளும் திறனை மாணவர்கள் பெற வேண்டும். அத்துடன் வாழ்வியல் மதிப்பீடுகளையும் புரிந்துகொண்டு அவற்றைத் தங்கள் வாழ்க்கையில் பின்பற்ற முயலவேண்டும். இந்நோக்கில் கற்றல் அடைவு களுக்கு ஏற்பப் பாடப்பகுதிகளும் செயல்பாடுகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றை நன்கு கற்று மாணவர்கள் பயனடைய வாழ்த்துகிறேன்.

வாழ்த்துகள்,

**முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்**
இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவனந்தபுரம்

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# Textbook Development Team

## Std XII - TAMIL - OPTIONAL

### Members

Allipathumma K., HSST, GHSS, Kumily, Idukki.
Dr. Jeeva Latha S., HSST, Govt. Tamil HSS, Devikulam, Munnar, Idukki.
Dr. Jeya Krishnan P., HOD, Dept. of Tamil, University of Kerala.
Dr. Kamala Selvaraj, Principal, Grace College of Education, Padanthalumoodu.
Dr. Karunanidhi M., HSST, Govt. Tamil V & HSS and TTI, Chalai, Tvpm.
Dr. Kumar S., HSST, Govt. CPM HSS, Peermedu, Idukki.
Dr. Manickaraj K., Asst. Prof., University College, Tvpm.
Manoharan N., Asst. Prof., Govt. College, Chittur, Palakkad.
Mohanraj E., HSST, St.Sebastian's HSS, Cheenthalar.
Narayana Perumal K., HSST(Rtd.), Govt. Tamil V & HSS and TTI, Chalai, Tvpm.
Singh M.B., HSA (Rtd.), Govt. Tamil V & HSS and TTI, Chalai, Tvpm.
ment Committee
Dr. Vijayan A., Asst. Prof., Govt. College, Chittur, Palakkad.
Dr. Vishnukumaran T., Asst. Prof., Dravidian University, Kuppam, Andra Pradhesh.

### Experts

Dr. Gomathy Nayagam E., Guest Lecturer, University of Madras, Chennai.
Dr. Karthikeyan A., Prof.(Rtd.), Tamil University, Thanjavur.
Dr. Nainar M., Reader (Rtd.), University College, Thiruvananthapuram.
Dr. Parasuraman T., Prof., PILC, Pondicherry.
Dr. Rajaram S., Prof. (Rtd.), Tamil University, Thanjavur.
Dr. Ratnasabapathy P., Prof.(Rtd.), Chennai.
Dr. Sethupandian T., Prof. (Rtd.), M.K. University, Madurai.
Dr. Veerappan P., Prof. (Rtd.), NCERT, Mysore.

### Artists

Nandhakumar, Artist, Parishakal, Palakkad.
Rakesh Nair, Artist, Neyyardam.

### Academic Co-ordinator

Dr. Sahaya Dhas D., Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# உள்ளடக்கம்

அலகு 1. இயற்கையும் சுற்றுச்சூழலும் ............ 7 - 34
- அழகே ஆனந்தம் ........ 8
- சிதைந்த ஓவியம் ........ 12
- வருமுன் ........ 20

அலகு 2. வேர்வைத்துளிகள் ........ 35 - 60
- இன்றுவரை ........ 36
- உயரப் பறக்க ........ 42
- மலரும் மனம் ........ 51

அலகு 3. மனிதகுல மேம்பாடு ........ 61 - 84
- அன்பின் விதைகள் ........ 62
- சமதர்மச் சிந்தனைகள் ........ 68
- யாவரும் கேளிர் ........ 77

அலகு 4. மொழியும் சமூகமும் ........ 85 - 107
- மொழி வளர்ச்சி ........ 86
- மொழிப்பற்று ........ 93
- மொழி இழப்பு ........ 100

அலகு 5. அறிவின் வாயில்கள் ........ 109 - 136
- எழுதும் கலை ........ 110
- வலைப்பூக்கள் ........ 120
- ஒளியும் இருளும் ........ 127

சொல்லகராதி ........ 137

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

***Members***

***Experts***

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அலகு 1

# இயற்கையும் சுற்றுச்சூழலும்

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் இன்று உலக மக்கள் கவனத்தை ஈர்த்துள்ளது. மனிதனும் இயற்கையும் சம்பந்தப்பட்ட எல்லாவற்றிலும் சுற்றுச்சூழல் பாதிப்பு இணைந்துள்ளது. அன்றாடத் தேவைகளை நிறைவு செய்ய மனிதன் இயற்கையைச் சூறையாடத் தொடங்கினான். இயற்கை விதிகளை மீறினான். இயற்கையின் தேவைகளைப் புறக்கணித்தான். இதன் விளைவாக இயற்கை அழிந்தது. தன்னை வாழவைக்கும் சூழலை அழிப்பது தன்னையே அழித்துக் கொள்வதற்குச் சமம். சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டால் மட்டுமே மனித சமூகம் வளமுடன் வாழ முடியும். இந்நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இவ்வலகு அழகே ஆனந்தம், சிதைந்த ஓவியம், வருமுன் என்னும் மூன்று கருத்தலகுகளாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- ✦ படைப்பிலக்கியங்களில் இடம்பெறும் உவமை, உருவகம், உள்ளுறை, தொன்மம், குறியீடு, படிமம் முதலானவற்றைக் கண்டறிகிறார்கள். அவை பற்றிக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- ✦ இயற்கை மற்றும் சுற்றுச்சூழலின் பாதுகாப்பையும் தேவையையும் அறிந்து சொற்பொழிவுக் குறிப்பு தயாராக்குகிறார்கள்.
- ✦ ஐந்திலக்கணம் அறிகிறார்கள்; பயன்படுத்துகிறார்கள்.
- ✦ பத்திரிகைச் செய்திகள், துணுக்குகள் எழுதுகிறார்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# அழகே ஆனந்தம்



## எழிலோவியம்

சிட்டுகள் இசைக்கும்; வான
இருளினில் தெளிவு பாயும்;
மொட்டுகள் நுகர வண்டு
முன்பின்னாய்ப் போட்டி போடும்
கட்டினைக் குலைக்கும் கீழ்வான்
வைகறைக் குளிர்ந்த காற்றுப்
பட்டுடல் மகிழும்; காலை
ஓவியம் பார்! பார்! தம்பி!

தொடுவான மதிலுக் கப்பால்
தோன்றிடும் அழகைக் காண
நடுவினில் துளைத்த சந்தோ,
அகண்டமோ, நடுவி ளக்கோ



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கடலிடை எழுந்த காலைக்
கதிரவன்? கதிரின் வீச்சுப்
படுமிட மெல்லாம் பொன்! பொன்!
பார்எழி லோவி யத்தை!

ஆயிரம் வண்ணம் காட்டும்
அடிவானப் பெருமு கில்கள்
பாய்கதிர் ஒளிம றைக்கும்!
பலமலை குன்றைச் சுற்றிப்
போய்விழும் ஓடை போலத்
தோன்றிடும் புதுவெள் ளத்தில்
மாய்கதிர் செக்கர் வானம்
எழிலோவி யம்பார் தம்பி!

களிமயில் அகவும்; புள்ளிக்
கருங்குயில் பாட்டி சைக்கும்
விளித்திடும் துணைபி ரிந்த
புள்ளினம்; விளாம ரத்தில்
ஒளித்துண்ணும் அணிலோ, கிள்ளை
ஒளிமூக்கை மிளகா யென்று
களித்துண்ணப் பாயும்; காட்டில்
காண்எழில் ஓவி யத்தை!

– கவிஞர் வாணிதாசன்

## அழகின் சிரிப்பு



### அந்திப்பொழுது

உச்சியில் இருந்த வெய்யோன்
ஓரடி மேற்கில் வைத்தான்.
நொச்சியின் நிழல் கிழக்கில்
சாய்ந்தது! நுரையும், நீரும்
பச்சையும், பழுப்பு மான
பலவண்ண முகில்கள் கூடிப்
பொய்ச்சான்று போல, யானை
புகலும்; பின் மலையைக் காட்டும்.
எத்தனை பெரிய வானம்
எண்ணிப்பார் உனையும் நீயே
இத்தரை, கொய்யாப் பிஞ்சு
நீஅதில் சிற்றெ றும்பே
அத்தனை பேரும் மெய்யாய்
அப்படித் தானே மானே?
பித்தேறி மேல்கீழ் என்று
மக்கள்தாம் பேசல் என்னே!

– பாவேந்தர் பாரதிதாசன்

**கவிஞர் வாணிதாசன் (1915–1974)**



புதுவையைச் சார்ந்த இவரது இயற்பெயர் எத்திராஜ அரங்கசாமி. பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்களுள் ஒருவராகச் சுட்டப்படுபவர். தமிழச்சி, கொடிமுல்லை, பொங்கல் பரிசு, எழிலோவியம், வாணிதாசன் கவிதைகள் என்பன இவர் இயற்றிய நூல்களுள் சில.

**செயல்பாடுகள்**

- இயற்கை அழகு என்னும் தலைப்பில் கவிதைகள் எழுதி அதனடிப்படையில் கவியரங்கம் நிகழ்த்துங்கள்.
- அழகின் சிரிப்பு கவிதையில் பயன்படுத்தப்பட்டுள்ள உவமைகளைத் தொகுத்து எழுதுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## நெய்தலிற் புகுந்த வெள்ளம்

**தா**ன் புகுந்த நெய்தல்நிலப் பகுதிகளை எல்லாம் நிலைகலங்கி மயங்கிப் போகுமாறு செய்தது ஆற்றுப் புதுவெள்ளம். மலர் மிகுந்த நெய்தற் பூக்களை எல்லாம் கசக்கி உதிர்த்தது. இரு கரைகளிலும் இருந்த மணல்மேடுகள் வெள்ளத்தால் கரைந்து சரிந்தன. அந்த வேளையிலே அம்மேடுகளிலே இருந்த நீர்ப்பறவை இனங்கள் எல்லாம் பறந்து ஓடின.

ஆறு பட்டினத்திற்குள்ளும் நுழைந்தது. அலைகளால் மோதிக் கொண்டு பட்டினத்திற்குள் அதனைத் தடுத்து மீண்டும் பட்டினமாகப் படைக்க முடியாத வகையிலே அதனைத் தன்னுள் ஆழ்த்தியது. மக்கள் தமக்கோர் புகலிடம் கிடைத்திடாமல் உழன்று வெள்ளத்தை இகழ்ந்தனர்.

மழைக் கொடுமையினால் தம் இலை முதலியனவற்றை உகுத்து நின்ற கானற் சோலைகளை எல்லாம் அழித்தது. கடலுள் புகுந்து கடல் நீரை இரண்டாகப் பிளந்து சென்று எதிர்த்து வரும் அலைகளையும் தாக்கி வலியழியச் செய்தது. உப்பளத்தினுள் புகுந்து அங்கே இருந்தவரை எல்லாம் அதனை விட்டு விரட்டியது. மேலும் அந்தக் கடற்பாங்கான இடத்திலிருந்தவரை எல்லாம் பெரிய மணல்மேடுகளிலே ஒன்றுகூடுமாறு செய்தது.

தகுதியுடையோனாகிய பரந்த கடலின் இறைவனாகிய வருணனைத் தொழுது போற்றி வழிபடும் நேர்த்திக்கடன் போன்ற முறைமையிலே, அவ்விடத்தைச் சார்ந்து, சுறவுக்கோடு நட்ட, நானிலப் பொருள்களையும் படையலிட்டு, அவன் சுறவுகளின் மேலாக வந்து காட்சி தரவும், அவனை அணுகியதும், தன் வேகமெல்லாம் அடங்க, கடலினுள் மெதுவாகப் பாய்ந்து கலந்தது, ஆறு.

புகுந்த நெய்தலை மயக்கியே – மலர்
மிகுந்த நெய்தலைக் கயக்கியே
புடையிற் புளினஞ் சரியவே – அதன்
இடையிற் புளினம் இரியவே.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

புகுந்து நுழையப் பட்டினம் - நிரை
முகந்து நுழையப் பட்டினம்
படைத்தி டாமே நிகழவே - நிலை
கிடைத்தி டாமை இகழவே

உகுந்த தண்டலை நீக்கியே - புனல்
வகுந்த தண்டலை தாக்கியே
உப்பளத் தாரை யோட்டியும் - புனல்
அப்பளத் தாரை யீட்டியும்

தகுந்த டங்கடல் இறைவனைத் தொழ
மகிழ்ந்தி டுங்கடன் முறையினில்
சார்ந்து சுறவு நேர்ந்து - குறுக
வார்ந்து வெள்ளம் ஊர்ந்ததே.



**-முக்கூடற்பள்ளு**

**முக்கூடற்பள்ளு**
96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று பள்ளு இலக்கியம். தமிழில் பல்வேறு பள்ளு இலக்கியங்கள் தோன்றினாலும் அவற்றுள் சிறந்து விளங்குவது முக்கூடற்பள்ளு. இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூல் உழவர் பெருமக்களின் வாழ்வியல் கூறுகளைப் பாடுபொருளாகக்கொண்டது.

### செயல்பாடுகள்

- முக்கூடற்பள்ளு - நூல் குறிப்பு எழுதுங்கள்.
- நெய்தலில் புகுந்த வெள்ளக் காட்சியைத் தொலைக்காட்சி நேர்முக வர்ணனையாக அமையுமாறு வெளியிடுங்கள்.
- வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த பத்திரிகைச் செய்திகளைச் சேகரியுங்கள்.
- கவிதையை வர்ணனைக் கட்டுரையாக வடிவ மாற்றம் செய்யுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

௨

# சிதைந்த ஓவியம்



## தாத்தா தொலைந்து போனார்

பஸ் ஹாரன் சப்தம் கேட்டது.

சொக்கன் திரும்பிப் பார்த்தார். விகாரமான படத்தைப் பார்த்து மிரண்டு போன சிறுபிள்ளை மாதிரி ஆகிப்போனார்.

குழந்தையம்மாள் மகளிர் கல்லூரிப் பெயர் தாங்கிய பேருந்து பாரி மளிகையைக் கடந்து சென்றது. மூட்டை முடிச்சு மனிதர்களும் ரோட்டோரக் கடைகளும் வாடிக்கையாளர்களை அழைக்கும் கூக்குரல்களும் அழுகிப்போன காய்கனிகளும் பயனற்றுத் தூக்கி வீசப்பட்ட காகிதச் சுருட்டல்களும் கடைகளின் கழிவுநீரும் பேரமும் பதுக்கலும் ஏமாற்றுமாய் ஒரு குட்டி இந்தியாவை ஞாபகப் படுத்தும் கடைவீதி.

வழக்கமாகப் போக்குவரத்து இல்லாத அந்த வீதியில் அழகும் பொலிவும் மிக்க வித விதமான கல்லூரி மாணவிகளை அள்ளிச்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

செல்லும் பேருந்தை வயது வித்தியாசமின்றி எல்லாக் கண்களும் துரத்தின.

சொக்கன் வெறித்துப் பார்த்தார். மூன்று மாதங்களுக்கு முன்னால் கழிந்துபோன சம்பவங்கள் கண்ணை மறைத்தன.

அன்று புதன்கிழமை. பொன்னு கெடச்சாலும் பொதன் கிடைக்காது. காலண்டரைப் புரட்டி அமாவாசை. அஷ்டமி, நவமி கரிநாள் பார்த்தார். சுபமுகூர்த்த சுபதினம் எனக் கட்டம் கட்டிக் கூறியது. கூடவே ஆலங்கோட்டை பாலுத்தேவர் மகளுக்குக் கல்யாணம். மனைவி செண்பகம் சொல்லவும் சரியான நாள்தான் என்று முடிவு செய்தார்.

சொக்கனின் தாத்தாவுக்கு நாலு ஏக்கர் பூர்வீகச் சொத்து. அசேஷத்துல பூர்வீகம் என்றால் தாத்தாதான் ஞாபகம். அதற்கு முன்னால்.... தெரியாது. தாத்தாவுக்கு ரெண்டு பிள்ளைக. அப்பாவும் சித்தப்பாவும். சித்தப்பா சின்ன வயசிலேயே இலவச கப்பலேறிச் சிங்கப்பூரு போயிட்டதா அப்பா சொல்லும். எழுபது வருஷத்துல எந்தத் தகவலும் இல்லை. நாலு ஏக்கர் சொத்தும் அப்பாவுக்கு வந்துடுச்சு.

அப்பாவுக்கு ரெண்டு பிள்ளைக. சொக்கனும் ராமாயியும். அப்பா இருக்கிறப்பவே ராமாயிக்குக் கல்யாணம். பதினொரு கிடாவெட்டி, ஏழு கிராமத்தையும் கூட்டித் திருமக்கோட்டைக்கு அப்பா அனுப்பியதுல தாத்தாவோட பூர்வீக சொத்துல ரெண்டு ஏக்கர் மாடி வீட்டுக்காரனுக்கு வித்தாச்சு.

ரெண்டு ஏக்கர் நிலமும் ஒன்பது எருமை மாடுகளும் அப்பா கண்ணுக்குட்டிகளா வாங்கின காளைகளும் தாத்தாவோட கூண்டு வண்டியும்தாம் சொக்கனின் சொத்து.

இப்பல்லாம் ஒரு பருவ சாகுபடிதான். தாத்தா காலத்தோட குறுவை, தாளடியெல்லாம் போச்சு. கடைமடை பாய்ச்சல்தான். சோழகர் இருக்கிறதுனால சிஎம்பி வாய்க்கால் எப்படியும் தண்ணீர் வந்துரும்.

ரெண்டு கொழு கலப்பகட்டி நாலு சாலு அடிச்சா சோத்த அள்ளி சாப்புடலாம். அப்படியாப்பட்ட மண்ணு.. அந்த வாசனை அதுவும் உரம் போடுறதுக்கு மோப்பம் புடிச்சா கிறங்கித்தான் போகணும்.

## பூமி கீதம்

என்னவாகிவிட்டது என் மழைக்கு?
என்னவாகிவிட்டது என்
இயற்கைக்கு?
என்னவாகிவிட்டது என் நிலவுக்கு?
என்னவாகிவிட்டது என் சூரியனுக்கு?
என்னவாகிவிட்டது
பசுமை.யாக இருந்த என் பூமிக்கு?
இதையெல்லாம் எப்படி நான்
திரும்பப் பெறுவேன்?

**மைக்கேல் ஜாக்ஸன் (எர்த் சாங்)**
(தமிழில்: கவிஞர் பழநிபாரதி)



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ரேடியோவிலெ என்னென்னமோ உரம். பூச்சி மருந்தெல்லாம் சொல்றாங்க. புதுசு புதுசா நெல்லெல்லாம் கண்டுபிடிச்சிருக்கிறதா சொல்றாங்க.

சொக்கன் சீமை உரம் போட்டதேயில்லை. அவரோட எருமைகள் போடற சாணம் ஒரு வேலிக்குப் போதும். ரெண்டு ஏக்கரு தானே? மில்க் ரொட்டியும் புட்டிப்பாலும் சாப்புட்டுச் சினிமாவுல வர புள்ளைக மாதிரி கருகருன்னு தினவா வளரும்.

கதிர் விட்டுத் தளதளன்னு கர்ப்பிணிகள் மாதிரி குலை தள்ளுறப்போ பக்கத்து வயக்காரனெல்லாம் திட்டிப் போட்டுறானுவன்னு கோமாளிப் பொம்மை நட்டுத் திட்டி விரட்டுறது வழக்கம்.

மாடி வீட்டுக்காரன் பையன்கூட எதோ காந்திக்க கிராமம் இருக்காம்ல... அங்க விவசாயத்துன்னே படிச்சு வந்துரக்கானாம். சிரிப்பாதான் வருது. பரம்பரையா மம்மட்டி புடிக்கிறவன் நிலத்துல அடிவச்சா தானா வருது. படிப்பாம் படிப்பு.

அவன்தான் சொல்றான். நாம வச்சிருக்க விதை போட்டா பழுதா யிடும். சாகுபடி காணாது இப்பப் புதுசா கல்சர் ஜெ– ஜென்னல்லாம் வந்துருக்கு போடுங்கன்னு.

அதுக்கு விவசாய ஆபீஸருக்கிட்ட கையெழுத்த வாங்கணுமாம்.

விதையப் போயி கிலோ கணக்குல வாங்குவாங்களா... தாத்தா காலத்துலேருந்து கோட்டை கட்டித்தான் பழக்கம். ஒரு கலம். ரெண்டு கலம், மூட்டைன்னு.

கதிர்விட்டு, முற்றி, சாயப்போற சமயத்துல கலப்பு. களை இல்லாம வளப்பமா உள்ள இடத்துல வட்டம் போட்டுத் தனியா அறுத்து, தூத்தி, தூசுதும்பட்ட இல்லாம கோடை வெயில்ல போட்டுக் கோட்டை கட்டியாச்சின்னா... ஒரு நெல்பழுதாப் போகுமா?...ம்கூம்..

சொக்கனுக்குப் புதுசுல நம்பிக்கை இல்ல. எல்லாம் தாத்தாதான். அப்பாவைவிட தாத்தாதான். தாத்தா மாதிரி மீசை, குடை, தடி, கூண்டுவண்டி, தரையில படுக்கை, சுருட்டு.

மாடி வீட்டு ராமு டவுன்ல நடந்த தேவர்மகன் படத்துக்கு அழைச்சுட்டுப் போனதுலேயிருந்து சொக்கனோட தாத்தா மாடல் ரொம்ப ஸ்டாங்காயிடுச்சு.

சொக்கன் எப்பவும் நடவு நட்டு. பயிர் காய்விடுற சமயத்துல புடுச்ச மழை... பேய் மழையாகி வெள்ளம் வந்து மாவட்டமே மூழ்கிடுச்சு.

சொக்கன் நிலம் கொஞ்சம் மேடு. சீக்கிரமே தண்ணீ வடிஞ்சிடுச்சு பாதி தண்ணீல போகப் பாதி நெல்லு வீடு வந்துச்சு.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சோறு ஆக்குனா கசப்பு வாயில வைக்க முடியல. சொக்கனோட மனைவி செண்பகம் உலை வைக்கிறப்பெல்லாம் திட்டித் திட்டியே நெல்லையெல்லாம் சாப்பாட்டிலேயே தீர்த்தாச்சு.

சொக்கன் விதை நெல்தேடி. புதன் கிழம அதுவும் நல்ல நாள் தேடி. எப்போதும் விதை தெளிக்கிற ராசியான கோவிந்து மச்சானைத் தேடி, வயலுக்குப் புறப்படத் தாமதமானது. பக்கத்து வயல்காரர்களெல்லாம் விதை தெளிச்சு பத்து, பதினைந்து நாள் பயிராகிவிட்டது.

கலப்பையைத் தூக்கிக் கொண்டு காளை மாட்டைக் கோவிந்து மச்சான் ஓட்டிச் செல்ல மண்வெட்டியோடு சொக்கன் நடந்து போனார். முதல் நாளே விதை நெல்லை வயலுக்குக் கொண்டு போய் வைத்திருந்தார்.

ஆளுருட்டி வாய்க்காலைத் தாண்டி வரப்பில் ஏறினார். வயலருகே ஒரே வட்டம். மேனி தெரிய கோவணங்கட்டி வயலில் நிற்கும் விவசாயி களையே பார்த்துப் பழகிப் போனவருக்கு வெள்ளாமை நிலத்தில் சலவை போட்ட வெள்ளை வேட்டி மனிதர்கள் கூடியிருப்பது ஆச்சரியமாய் இருந்தது.



தண்ணீ பாய்ச்சல் தகராறுல எவனும் வெட்டிக்கிட்டு சாய்சுட்டானுவளா? இல்ல ஏதும் புதையல் கிதையல் கெடைச்சுருக்கா? யோசித்தபடியே முத முதல்ல நிலத்துல நெல்லு போடறப்ப... கலகம் கிலகம் ஆயிடப்படாது. நீ இங்கேயே நில்லு நான் போய்ப் பார்த்துட்டுக் கூப்படறேன்" கோவிந்து மச்சானிடம் கூறிவிட்டுச் சொக்கன் வயலை நோக்கி நடந்தார்.

வாங்க... வாங்க... உங்களதான் எதிர்பாத்துக்கிட்டு இருக்கோம். நம்ம மனோகர் அய்யா வந்திருக்காங்க.

சாராயம் காய்ச்சி விற்றுப் பெரிய மனுஷனாகி இன்று ஒரு கட்சியின் ஒன்றியச் செயலாளராக இருக்கும் ராமராஜ் பத்தடி முன் வந்து வரவேற்றார்.

சொக்கன் தடுமாறிப் போனார். பல ரக கார்கள். அரசாங்க ஜீப், பைக்குகள்... தொந்தியும் பிதுங்கிய முழியுமாய் முரட்டு மனிதர்கள், பருந்தைக் கண்டுவிட்ட தாய்க்கோழி மாதிரி வயல்காரர்கள். என்ன நடக்குமோ! கடவுளை வேண்டினார் சொக்கன்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஐயா... இதுல ஒரு கையெழுத்துப் போடுங்க... வி.ஏ.ஓ.

எதுக்குங்க, ஐயா, எதும் மான்யம் கீனியம் தர்றீங்களா... போன வருஷந்தான் வர்ணபகவான் எல்லாத்தையும் கொண்டு போய்ட்டான். இந்த வருஷமாச்சும்... யாரையும் பார்க்காமல் மண்ணைப் பார்த்தே சொக்கன் பேசினார்.

பெரியவங்களே... நம்ம மனோகர் அய்யா லேடீஸ் காலேஜ் திறக்கப் போறாங்க. நம்ம ஜில்லாவுல பல பேரு கேட்டுக் கிடைக்கல. முதலமைச்சரே நம்ம அய்யாவுக்கு ஆர்டர் கொடுத்திருக்காங்க. டவுனுக்குப் பக்கத்துல இந்த ஏரியாதான் நல்லா இருக்கு. பணத்துக்குத்தான் வெளில விக்கிற ரேட்ட விடக் குழிக்கும் பத்து ரூபா சேர்த்துத் தர்றாங்க. எல்லாரும் ஒத்துக்கிட்டுக் கையெழுத்துப் போட்டுட்டாங்க.... நீங்கதான் பாக்கி....

ஆர்.ஐ. அனுபவத்தோடும் அரவணைப்போடும் பேசினார்.

விளையற நிலமுங்க... அப்பன் பாட்டன் காலத்துலேருந்து சோறு போடற பூமிங்க இதுவெறும் மண்ணு மட்டுமில்லைங்க..., எங்க சொகம், துக்கம், கனவு, பரம்பர பரம்பரையா வர்ற வாழ்வு எல்லாமுங்க. யாங்க அய்யா.. தப்பா நினைக்கப்படாது. நீங்க பெரியவங்க... கலேசு வேற இடத்துல கட்டக் கூடாதுங்களா?

சொக்கன் ஒவ்வொரு வார்த்தையாகத் தேடித் தேடிப் பேசினார். முழங்கால் முட்டும் சேற்றில் காளைகளை விரட்டுற கால்கள் ஆடின.

ஏய்... பெரிசு! பெரிசா புத்திமதி சொல்லாத! ஐம்பது ஏக்கரும் வாங்கியாச்சு... ஒழுங்கா மருவாதியா கையெழுத்துப்போடு... கையெழுத்து, பெரிய கையெழுத்து.. வண்டி மசதான வையி வையி,.. மனோகரு அய்யா... நாளைக்கே பூஜை போடப்போறாரு... வயக்காடா கெடந்த இடத்துல... ஜல் ஜல்னு சுடிதாரு மிடியோட இளவட்டம்.... சுத்தறதப் பார்க்கலாம்.. போடு கிழவா...

"மரியாதையோடு அழைத்து வந்தவன் பேசுறதப் பார்த்தா,... கொஞ்சம் முரண்டு புடிச்சாலும் அடி தப்பாதோ,... "

சொக்கன் நினைத்துக் கொண்டார்.

"நிலத்துக்குப் பணம் வேணுமா வேணாமா...

"பொண்டாட்டி புள்ளையோட ஊருல குடும்பம் நடத்தணுமா...

உசிரோடு வீட்டுக்குப் போவணுமா...

எங்களை பகைச்சிட்டா ஏ.எஸ்பி நிலைமையே என்னாச்சு தெரியுமா?"

மனோகரிடம் விசுவாசம் பெற கைத்தடிகள் விதவிதமாய்க் கர்ஜித்தார் கள்.

"பொம்பள காலேஜு வந்தா நம்ம புள்ளையல்லாம் படிக்கும்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நம்ம புள்ளய படிச்சு வந்தா காலேஜுல வேல கிடைக்கும்.

நம்ம ஊர்பேரு நாடு பூராத் தெரியும்

நம்ம புள்ள காலேஜ் ஆரம்பிக்குது

நாம இடங்கொடுக்காம யாரு கொடுப்பா?"

விவசாயிகள் ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்வது மாதிரி சொக்கனுக்குச் சொன்னார்கள்.

தன்னைச் சுற்றி ஒரு இரும்பு வளையம் இருப்பதாய்ச் சொக்கன் உணர்ந்தார்.

கொண்டாங்கய்யா....

இந்தாங்க.... வாங்கிக்குங்க....

சொக்கன் இடது கையால் நங் நங்கென்று விரல் பதித்தார். சாகும் தருவாயில் குத்திட்டு நரைத்த தாடியோடும் நூல்கட்டிய மூக்குக் கண்ணாடியோடும் ஒழுகும் வாணியோடும் உலகம் மறந்து நார்க் கட்டிலில் கிடந்த தாத்தாவின் உருவம் நிழலாடியது.

### தேடல்...



'மரம் வெட்டிய கோடாரி
பார்த்துக் கொள்
கடைசி மழைத்துளி...'

'வீட்டுக்குள் குரோட்டன்ஸ்
தொட்டிக்குள் மீன்கள்
வானம் தொலைத்த நகரம்'

**- கவிஞர் அறிவுமதி**

ஏய்... வீணாப்போனவனே... நடுரோட்ல நின்னு கனாக்காணுறியா... ஓராமா போடா... மூதேவி....

தள்ளுவண்டிக்காரன் எரிச்சலாய்க் கத்தினான். சொக்கன் கடைத்தெருவில் நிற்பதை உணர்ந்தார். நான்- வீணாப்போனவன்தான்- மூதேவி நான்... நா..ன்...வீணாப்... மூ..தே...

குடை இல்லை.. தடி இல்லை.. கூண்டு வண்டி இல்லை.. மனதுள் பொத்திப் பொத்திக் காத்த தாத்தா இல்லை. தோளில் கிடந்த துண்டை எடுத்து வாயில் அமுக்கிக் கொண்டு சூடுபட்ட மாடு மாதிரி சொக்கன் நடந்துபோனார்.

**-இரா. காமராசு**

**இரா. காமராசு** தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கவிஞர். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறையில் பணியாற்றி வருகிறார். மகளுக்குச் சொல்ல, பால்ய சிநேகிதன், குழந்தைகளைக் கொண்டாடுவோம் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

**செயல்பாடுகள்**

- தாத்தா தொலைந்து போனார் எனும் கதை சுட்டிக்காட்டும் நகரமயமாதலின் விளைவுகளைத் திரட்டி நகரமயமாதலின் நன்மை, தீமைகள் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்புகளாக எழுதுங்கள்.
- கதைத் தலைப்பு கதையுடன் பொருந்தும் சூழலை விளக்கி எழுதுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## கூவம் என்னும் வார்த்தை



சில சமயங்களில்
நதிகள் செத்துப்போகும்

பூமியைச் சாகடிக்க
குளோரஃப்ளோரா கார்பன்

நதிகளுக்குக் கழிவுகள்

நதியெனில்
கங்கையும் ஒன்றுதான்
கூவமும் ஒன்றுதான்

இந்த நதியின் கால்களை
முடமாக்கியது
யாருடைய சாபமோ
பொய்கள் உயிருடனிருக்க
உண்மை ஊர்வலமாய்ப் போகிறது
நகரெங்கும் பிணம்போல

உயிர்ப்பிக்க முடியுமா
கூவத்தை

நட்சத்திரங்கள் நிலவு ஆகாயம்
இன்னும்
முகம் பார்க்கின்றன கூவத்தில்

ஆயிரம் கைகளால்
அசிங்கப்படுத்திய நதியை
ஒரு கையால்
ஒரே ஒரு முறை சுத்தப்படுத்து

அதன் வயிற்றுக்குள்ளிருக்கும்
பிளாஸ்டிக் கழிவுகளை
அப்புறப்படுத்து

எத்தனையோ திருவிழாக்கள் உண்டு
நதிவிழா கொண்டாடு
உன் சந்ததிகளுக்கு
சிறுசிறு மீன்கள் துள்ளும்
பளிங்குநதியை கொடுத்துவிட்டுப் போ



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



நகரவாசிகளை
கூவத்திற்குத் தெரியும்
யார் திருடர்கள்
யார் சர்வாதிகாரிகள்
யார் வன்முறையாளர்கள்
யார் கொடுங்கோன்மையாளர்கள்
யாரால் அதன் கருப்பை
சிதைக்கப்பட்டதென்று

அதன் வாக்குமூலங்கள்
பதிவாகாதவாறு
மொழியைச் சாகடித்துவிட்டோம்

சைகைகள்கூட
செய்ய முடியாதவாறு
கரங்கள் மொண்டியாக்கப்பட்டன

கூவம் என்கிற வார்த்தை
உங்களுக்குப்
புளித்துப் போயிருக்கலாம்

ஒளிந்திருக்கும்
கழிவுப்பாதைகள்
வெளியே தெரிந்தால்
ஒவ்வொரு மனிதனும்
கூவம்தான்.

**–கோசின்ரா**



**கோ. இராஜேந்திரன்** என்பது இவரது இயற்பெயர். மத்திய தணிக்கைத்துறையில் பணிபுரிந்து வருகிறார். இவரது கவிதைத் தொகுப்புகள் என் கடவுளும் என்னைப் போல கறுப்பு, பூனையின் கடவுள். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க விருதும், பாரதி தமிழ் இலக்கிய விருதும் பெற்றுள்ளார்.

**செயல்பாடுகள்**

- கவிஞர்கள் சமூக விழிப்புணர்வோடு இருக்கிறார்கள் எனும் கருத்தை வெளிப்படுத்தும் கூவம் எனும் கவிதையின் ஆசிரியரைப் பாராட்டிக் கடிதம் வரைக.
- ஒளிந்திருக்கும் கழிவுப்பாதைகள் வெளியே தெரிந்தால் ஒவ்வொரு மனிதனும் கூவம் தான் – எனும் கவிதை வரிகளின் பொருள் நயம் பாராட்டி எழுதுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

௩

# வருமுன்



## இயற்கைப் பேரிடர்களும் பாதிப்புகளும்...

வெள்ளம், பூகம்பம், எரிமலை, புயல், சுனாமி, நிலச்சரிவு முதலிய இயற்கைப் பேரிடர்கள் ஏற்படச் சுற்றுச்சூழல் பாதிப்புகளே முக்கிய காரணங்களாகும். வெள்ளம் ஏற்படுவதால் மேல்மண் அரிக்கப்படுகிறது. மண்ணின் மணம் குறைகிறது. மரங்கள் வேரோடு அழிகின்றன. நீரினால் பரவும் நோய்கள் ஏற்படுகின்றன.

பூகம்பத்தினால் கட்டிடங்கள், கோபுரங்கள் இடிந்து உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. போக்குவரத்துச் சாலை மற்றும் இரயில் பாதைகள் துண்டிக்கப்படுகின்றன. தாவரங்கள் மற்றும் விலங்குகள் உயிருடன் புதைகின்றன. பூகம்பத்தால் நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன. காடுகள் அழிகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிக்கான சபை 1992ஆம் ஆண்டு சுற்றுச்சூழலுக்காக உலக நாடுகளின் தலைவர்களை அழைத்து நடத்திய உச்சி மாநாடு ஒரு வரலாற்று



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

முக்கியத்துவம் வாய்ந்தது. அந்தப் புவி உச்சி மாநாட்டில் முக்கிய சிக்கல்கள் ஆய்வு செய்யப்பட்டன.

புவி வெப்ப உயர்வுக்கு மூல காரணமாக இருப்பது காற்றின் மாசுபாடு ஆகும். குறிப்பாக கார்பன்-டை- ஆக்ஸைடு காற்று மண்டலத்தில் அதிகமாவதற்குத் தொழிற்சாலைகளும், வாகனங்கள் வெளியிடும் புகையும் முக்கிய காரணம். பணக்கார நாடுகள் காற்றின் மாசுபாட்டை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே, மேலை நாடுகள் அதிலும் அமெரிக்கா தனது எரிபொருள் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று புவி உச்சிமாநாட்டில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் அப் போதைய அமெரிக்க ஜனாதிபதி பேசும்போது, அமெரிக்கர்களின் வாழ்க்கை முறையில் எரி பொருள்களைக் குறைத்துக்கொள்ளும் பேச்சுக்கே இடமில்லை என்று ஆணவமாகப் பதிலளித்தார்.

பசுமையான ஒரு உலகத்தைப் படைத்திட உலக நாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டியவற்றைச் செயல்திட்டம் 21 எடுத்துரைக்கிறது. அதனால் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஏழை நாடுகள் மற்றும் வளரும் நாடுகள் தங்கள் நாட்டின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கப் பணக்கார நாடுகள் நிதியுதவி செய்ய வேண்டுமெனப் புவி உச்சி மாநாட்டில் விவாதித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் திட்டத்திற் கான நிதியுதவி, தொழில்நுட்ப உதவி போன்ற வற்றை மேலைநாடுகள் இன்றுவரை செய்ய வில்லை.

### நகரம்

ராட்சஸ அனகோண்டாக்களாக
நெளியும் ரயில்கள்
உண்டு உமிழ்ந்த உடல்கள்
தத்தம் ஆன்மாக்களைத் தேடி
அலைகின்றன தெருத்தெருவாக

கிறுக்கல்களாய் அமைந்த சாலைகளில்
நுழைந்ததும்
பித்தேறி அலறி ஓடுகின்றன
வாகன மந்தைகள்

கடிகார வட்டத்திற்குள்
முட்கள் வாட்களாய்ச் சுழல,
தமது தலைகளைக்
காத்துக் கொள்ளும் அவசரத்தில்
முட்களை முந்திக்கொண்டு
ஓடுகின்றன முகங்கள்

மனித மனங்களின் கீழும்
பாதாளச் சாக்கடையின்
சலசலப்பு

**- நந்தலாலா**

மேலும் புவி உச்சி மாநாட்டின் மற்றொரு முக்கிய அம்சம் உலகின் இயற்கை வளங்களைப் பங்கிடுவதிலும், பயன்படுத்திக் கொள்வதிலும் சமத்துவ நிலை வேண்டும் என்பதாகும். உலகின் 80 விழுக்காடு இயற்கை வளங்களை மேலை நாடுகளே அனுபவித்து வருகின்றன. இயற்கை வளங்களை அனுபவிக்க அனைவருக்கும் சம உரிமை இருக்க வேண்டும். ஆனால் சம உரிமை மறுக்கப்படுகிறது. பொருளாதார வளர்ச்சி என்பதும்,



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தொழில் வளர்ச்சி என்பதும், இயற்கைச் சூழலைப் பாதிக்காத வகையிலும், நிலைத்த நீடித்த வளர்ச்சி கொண்டதாகவும் இருக்க வேண்டும். ஆனால் உலகமயமாக்கலைத் தீவிரப்படுத்த நிர்ப் பந்திக்கும் வளர்ந்த நாடுகள் சுற்றுச்சூழலைப் பொறுத்தவரை எதிர்மறையாகச் செயல்படுவதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

மேலை நாடுகள் அபாயகரமான கழிவுகளை வளரும் நாடு களுக்கும், ஏழை நாடுகளுக்கும் விலைக்கு விற்றுவிடுகின்றன. இதைக் கட்டுப்படுத்த 1992ஆம் ஆண்டில் பேசல் உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டது. இதில் 148 நாடுகள் கையொப்பமிட்டுள்ளன. இதன்படி அபாயகரமான கழிவுகளை ஏழை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை நியாயப்படுத்துவதாக உள்ளது எனச் சுற்றுச்சூழல் நிபுணர்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் பேரில் அபாயகரமான சில கழிவுகளை ஏற்றுமதி செய்வதை அறவே தடுக்கக்கூடிய திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஆனால், இந்தத் திருத்தத்தை இதுவரை 26 நாடுகள் மட்டும் ஏற்றுக்கொண்டுள்ளன. உலகமயமாக்கலின் மிக அபாயகரமான அம்சம் சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் பல்வேறு தொழிலகங்களை இந்தியா போன்ற ஏழை நாடுகளில் அமைப்ப தாகும்.

கடந்த பத்தாண்டுகளில் உலகின் பல இடங்களில் போர் ஏற்பட்டுள்ளது. ஈராக் மீது அமெரிக்காவினர் நடத்தி வரும் போர், ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்காவின் தாக்குதல் ஆகியவற்றால் நீரும், நிலமும் மாசடைந்துள்ளன. வேதியியல் மருந்துகளாலும், பெட்ரோலியப் பொருட்களாலும் மக்கள் கடுமையான உடல்நலப் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். உலகின் வல்லரசு நாடுகளால் நடத்தப்படும் போர்களினால் சுற்றுச்சூழல் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது.

மாசுபடுத்துகின்ற கழிவுகளைச் சுற்றுச்சூழலைப் பாதிக்காத மற்றும் தீங்கு விளைவிக்காத பொருள்களாக மாற்ற வேண்டும். கழிவுகளை மறுசுழற்சி செய்யவேண்டும். எரிபொருளுக்காகப் பயன்படும் முன்னோடிப் பொருள்களை மாற்றம் செய்ய வேண்டும். வளிமண் டலத்தில் வெளியிடும் சிறு தூசுகளைக் கட்டுப்படுத்த வடிகட்டும் சாதனங்கள் வடிவமைக்கவேண்டும். தொழிற்சாலைகளிலிருந்து கழிவுகளை வெளியேற்றுவதற்கு முன் சுத்தப்படுத்தி வெளியேற்ற வேண்டும். பூச்சிக்கொல்லிகள், வேதி உரங்கள் மற்றும் கதிரியக்கப் பொருள்களைப் பயன்படுத்தக்கூடாது.

நகரங்கள் மற்றும் தொழிற்சாலைகள் திட்டமிட்டுக் கட்டப்படும் போது சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டும். மரங்கள் நடவும்,



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தோட்டங்கள் மற்றும் பூங்காக்கள் அமைக்கவும் திட்டமிடுதல் வேண்டும். சுமார் 33 விழுக்காடு பசுமையான வேலி(Green Belt) அமைக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். துரிதமான மற்றும் திட்டமிட்ட வளர்ச்சியினாலும் மக்கள் தொகை பெருக்கத்தாலும் உண்டாகும் சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட நோய்கள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். கூட்டுச் செயல்பாடு மூலம் சீர்கேட்டைத் தடுத்துப் பாதுகாப்பது அவசியம்.

புவிப்பரப்பின் மீது இயற்கை மற்றும் மனிதச் செயல்பாடுகளால் ஏற்படும் பேரழிவுகளைத் தவிரப் பலவிதமான மாசுகளும் அதன் தரத்தைக்கெடுக்கின்றன. நகரங்களும், தொழிற்சாலைகளும் பல மில்லியன் டன் கணக்கான கழிவுகளைப் புவிப்பரப்பின் மீது கொட்டி அதனை நாசப்படுத்தி வருகின்றன. இந்திய விவசாய நிலங்கள் வேதி உரங்களாலும், பூச்சிக்கொல்லி மருந்துகளாலும் பாழடிக்கப்படுகின்றன. இவை நீர், நில, வான் வளங் களை மட்டுமின்றி, உணவுத் தானியங்கள், காய்கறிகள் போன்ற மனிதன் உட்கொள்ளும் அனைத்து உணவுப் பொருட்களின் தரத்தையும் கெடுத்து வருகின்றன. சுற்றுச்சூழல் மாசுபட்டு வருவதால் உலகிலுள்ள அனைத்து உயிர்களின் வாழ்வே கேள்விக்குறியாக உள்ளது. இயற்கை யாகவும், மனிதச் செயல்களாலும் உண்டாகும் வனத் தீ, வன அழிப்பு, மாசு முதலியவற்றால் மனித இனம் மட்டுமின்றி, உலகிலுள்ள அனைத்து உயிரினங்க ளும் அவற்றின் வாழிடங்களும் பாழ்படுகின்றன.



தொழிற்சாலைகளின் மாசுகளால் உலகில் ஈடுகட்ட முடியாத பல்வேறு பின்விளைவுகள் ஏற்பட்டுள்ளன. உலகம் வெப்பமாதல், அமில மழை, வளி மண்டல ஓசோன் படல ஓட்டை, துருவப் பனிப்பாறைகளின் உருகல், கடல் மட்டம் உயருதல் முதலியவற்றால் உலகில் பல்வேறு சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படுகின்றன. தனிமனிதனும், அமைப்புகளும், நிறுவனங்களும் நாளுக்கு நாள் அதிகமாகி வரும் சுற்றுச்சூழல் பிரச்சனைகளுக்கும், அருகிவரும் வளங்களுக்கும் தார்மீகப் பொறுப்பேற்றுக்கொண்டு மாசு ஏற்படுவதைக் குறைக்கவும், இப்பூவுலகிலிருந்து அவற்றை அறவே ஒழித்திடவும், மனித இனம் வாழவும் நற்செயல்களைச் செய்ய முன்வர வேண்டும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்துப் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும், ஊழியர்களுக்கும், கிராம மக்களுக்கும், பெண்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சுற்றுச்சூழல் பிரச்சனைகள் குறித்து நாளிதழ்களிலும், வானொலியிலும் தொலைக்காட்சியிலும் தீவிரமான பிரச்சாரம் செய்திட வேண்டும்.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் தனிநபர்களுக்கும், அமைப்புகளுக்கும் நடுவண் அரசும், மாநில அரசும் ஆதரவு நல்கிட வேண்டும். மேலும். நிதி உதவி செய்திட வேண்டும். இந்தியாவிலும், உலகின் பல பகுதிகளிலும் அரசுசாரா நிறுவனங்கள் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்துத் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன. அரசு அவற்றை ஆதரித்து நெறிப்படுத்திட வேண்டும்.

சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, பணிப்பட்டறைகள், விவாதங்கள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் முதலியவற்றை அரசு நிறுவனங்களும், அரசுசாரா நிறுவனங்களும் நடத்திட வேண்டும். தொழில்நுட்ப வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் மற்றும் அரசியல் அதிகாரம் முதலியவற்றைக் கொண்டு சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பொருட்களை அழிப்பதற்கு மனித இனத்திற்கு எந்தவொரு உரிமையுமில்லை என்பதை உணர வேண்டும். தன்னுடைய அன்றாட மற்றும் மிக முக்கியமான தேவைகளுக்கேயன்றி மற்ற தேவைகளுக்கு இயற்கைக்கு ஒவ்வாத எந்தவொரு செயலையும் செய்தல் கூடாது.

எந்தவொரு வளர்ச்சிப் பணியின் போதும் பூமியின் உன்னதமான தன்மையினை உணர்ந்து அதனை எந்த விதத்திலும் பாதிக்கச் செய்யக்கூடாது. இந்திய நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங் களும் தொழிற்சாலைகளும் சுற்றுச்சூழலைக் கெடுத்து நாசப்படுத்தி வருவதற்கு எதிராக மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், வெகுமக்களின் எதிர்ப்புப் போராட்டங்களில் பெண்களை அதிக அளவில் அணி திரட்டிடவும் வேண்டும்.

சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களையும் அவை பற்றிய தகவல்களையும் சேகரிப்பதிலும் அவை பற்றிய ஆய்வு செய்வதிலும் அக்கறை செலுத்திட வேண்டும். சுற்றுச்சூழல் குறித்த கல்வியைப் பள்ளி, கல்லூரிகளில் கற்பித்திட அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சுற்றுச்சூழலைப் பாதுகாத்திடப் பின்வரும் கருத்துகளை நாம் கவனத்தில் கொண்டு செயலாற்ற வேண்டும்.

- மக்கள் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்த அறிவினைப் பெற வேண்டும்.
- மாசுபடுதலைக் குறைக்கவும், தடுக்கவும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- விவசாயிகள் இயற்கை உரங்கள் மற்றும் உயிரிய பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்த வேண்டும்.
- அளவுக்கு அதிகமான புகைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டைத் தடுக்க வேண்டும்.
- பிறந்த நாள், திருமண நாள், நினைவு நாள் விழாக்களின்போது மரக்கன்றுகள் நடவேண்டும்.
- உலகச் சுற்றுச்சூழல் தினம், புகையிலை எதிர்ப்பு தினம், வனப்பாது காப்பு தினம், புவி பாதுகாப்பு தினம் முதலிய தினங் களின் நிகழ்ச்சிகளில் பொதுமக்களைப் பங்கேற்கச் செய்திட வேண்டும்.
- சூரிய சக்தியைப் பயன்படுத்த வேண்டும்.
- மழைநீர்ச் சேகரிப்பைக் கண்டிப்பாக அமைத்திட வேண்டும்.
- சுற்றுச்சூழல் பாதிப்புகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவும் போராடவும் வேண்டும்.



இயற்கையன்னை மிகவும் அழகானவள், அவளைப் போற்றிப் பேணிப் பாதுகாத்திட வேண்டும். இயற்கையிடமிருந்து பெறும் வளங்களைப் பாதுகாத்திட வேண்டும். மரங்கள், காற்று, தூய்மைப் படுத்திகளாகவும், மழை கொடுப்பவைகளாகவும், ஆக்ஸிஜன் தருபவகைளாவும் இருக்கின்றன. ஆகையால் நாம் மரங்களைப் பாதுகாக்க வேண்டும். மலைகள், ஆறுகள், குளங்கள், காடுகள், கடல்கள் ஆகியவற்றில் கண்மூடித்தனமான மாற்றங்களை ஏற்படுத்தக் கூடாது. அனைத்து உயிரினங்களுக்கும் நம்மைப் போலவே வாழ்வதற்கு உரிமை உள்ளது. நாம் அவற்றை



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மதிப்பதுடன், அவற்றுடன் ஓர் இணக்கமான வாழ்வைக் கொண்டிருக்க வேண்டும். இயற்கையன்னைக்கு நெகிழி (பிளாஸ்டிக்) போன்ற செயற்கைப்பொருட்களின் சிதைத்தல் செயல் பெரும்பாரமாக அமைகிறது. ஆகவே கூடுமானவரை நெகிழிப் பொருட்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

எளிய வாழ்க்கை முறையால் இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டும். நமது வாகனங்கள் மற்றும் தொலைக்காட்சி, வானொலி ஒலியைக்(இரைச்சலை) குறைக்க வேண்டும். மின் பயன்படுத்தலின் மிகைப் பயன்பாடுகளைக் குறைத்திட வேண்டும். மண் பாதிப்படையும் செயல்களைத் தவிர்த்திட வேண்டும். காடுகளின் அழிப்பைக் குறைத்திட வேண்டும்.

இன்றைய சமூக, தொழில் வளர்ச்சியில் அறிவியல் செயல்பாடு என்பது தவிர்க்க இயலாததாகும். அறிவியல் வளர்ச்சிப் போக்கில் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கவும், கட்டுப்படுத்தவும் வேண்டியது மிகவும் அவசர அவசியமானதாகும். பன்னாட்டு, ஏகபோக நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு பெரிய நிறுவனங்கள் சுரண்டலுக்காகவும், தங்களின் இலாபத்திற்காகவும், சுற்றுச்சூழலை மாசுபடுத்தி மக்களைப் பலியாக்குவதை அனுமதிக்க முடியாது. மனித உயிருக்கு ஆபத்தும், தீங்கும் விளைவிக்காத, சுற்றுச் சூழலைப் பாதிக்காத அறிவியல் வளர்ச்சிதான் நமக்குத் தேவை. நீடித்த நிலையான வளர்ச்சி சமூகத்திற்கு மிக அவசியம். மக்களின் விழிப்புணர்வு மூலம் சுற்றுச்சூழல் பாதிப்பிலிருந்து இப்பூவுலகைப் பாதுகாப்போம்.

**– பி. தயாளன்**

நன்றி – பசுமைத்தாயகம்
(சுற்றுச்சூழல் மாத இதழ்)

**செயல்பாடுகள்**

- சுற்றுச்சூழல் மாசடைதலைத் தவிர்க்கும் வழிமுறைகளைச் சமூகத்திற்கு அறிவிக்கும் பொருட்டுச் சொற்பொழிவுரை ஒன்று தயார்செய்யுங்கள்.
- 'சுற்றுச்சூழல் பாதுகாப்பு' எனும் தலைப்பில் கருத்தரங்கம் ஒன்றினை நடத்துவதற்கான கட்டுரை தயார்செய்யுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com


Downloaded from https:// www.studiestoday.com

# விழிப்பு

தெரு வெறிச்சோடிக் கிடந்தது. வழக்கமாகக் காணப்படும் சந்தடி ஜன நடமாட்டம் இன்றி அதிசயமாய், அமைதியாய் இருந்தது.

வெயிலைப் பொருட்படுத்தாமல் வாசப்படியில் அமர்ந்து தெருவைப் பராக்குப் பார்த்துக்கொண்டிருந்த கைலாசத்துக்கு அலுப்புத் தட்டியது. எழுந்து உள்ளே போகலாமா என்று நினைத்த நொடியில் ஒன்றின்பின் ஒன்றாகத் தெருக்கோடியில் நுழைந்த நாய்கள் அவன் கவனத்தை ஈர்த்தன.

தெரு நாய்கள்தாம். ஒன்று கறுப்பு. அடுத்தது பழுப்பு. முன்னால் வந்தது கொஞ்சம் சோனியாக 'நே' என்று இருந்தது. பின்னால் வந்த பழுப்பு நாய், சைஸில் பெரிசு – ஆனால் கறுப்பு நாய் கம்பீரமாய், ஒருவித அதிகார முகபாவத்துடன் நடக்க, பின்னால் வந்த பெரிசு குழைந்து கொண்டு, லேசாக அசடு வழிய வருகிற மாதிரி கைலாசத்துக்குப் பட்டது.



உதடுகள் சுணுங்க, பற்கள் விகாரமாய் வெளிப்பட்ட கறுப்பு நாய் பின்னதைப் பார்த்து 'வள்' என்று விழுந்ததையும், லட்சியம் பண்ணாமல் அவ்வப்போது நெருங்கி வந்து முதலாவதை முகரவும் ஸ்பர்சிக்கவும் இரண்டாவது முனைய...

அவன் வீட்டுக்கு எதிர்சாரியிலிருந்து குப்பைத் தொட்டியின் அருகே வந்ததும் பெண் நாய் டபக்கென்று ஏறிச் சற்றுமுன் யாரோ விசிறிவிட்டுப் போன எச்சில் இலையை அவசரமாய் மூக்கால் பிரித்து மிச்சத்தை உண்ட நாழிகையில், ஆண் நாய் கனகாரியமாய்க் காவல் காக்கிற மாதிரி அதே அசட்டுக்களை மாறாமல் வாலை ஆட்டிக்கொண்டே 'க்கம் க்கம்' என்று குரல் கொடுத்தபடி குப்பைத் தொட்டியை ஒட்டி நின்றது.

ஓரிரு நிமிஷங்களில் மிச்சத்தைத் தின்று முடித்ததும் கீழே குதித்துப் பெண் நாய் ஓட, ஆண் நாய் தன் முகர்தல் ஸ்பர்சித்த லுடன் மறுபடி அதைத் தொடர்ந்தது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சைக்கிள் நிறைய அலுமினியப் பாத்திரங்களைக் கட்டியபடி. எதுவும் புரியாமல் குரல் கொடுத்துக்கொண்டே பாத்திரக்காரர் ஒருவர் சென்றார்.

எண்ணெய் காணாத செம்பட்டை முடி, கிழிந்த அழுக்கான உடைகள், அதைவிட அழுக்கான சாக்கு, கையில் ஒரு இரும்புக் கம்பி சகிதம் வந்த பெண்மணி குப்பைத் தொட்டி அருகே வந்து அதனுள் இருந்த குப்பைகளை வெளியே வாரி இறைத்தார். பின்னர்த் தனக்கு வேண்டிய பேப்பர்களை மட்டும் இரும்புக் கம்பியால் குத்தி எடுத்துச் சாக்குப் பைக்குள் போட்டார்.

அவர் தூக்கி எறிந்த எச்சில் இலைகள், கிழிந்த பிளாஸ்டிக் பைகள், துண்டுக் காகிதங்கள் காற்றில் இங்கும் அங்கும் பறக்க முற்பட, கைலாசத்துக்குள் சட்டென்று அத்தை எட்டிப் பார்த்தார்.

அத்தை என்றால் இவனுடைய சொந்த அத்தை இல்லை. புதுசாக அறிமுகப்படுத்தப்பட்ட நண்பன் நாணாவின் அத்தை. படித்தவர். இதமாகப் பேசத் தெரிந்தவர். வித்தியாசமானவர். முக்கியமாய் இளைய தலைமுறையினரின் மனசைப் புரிந்துகொண்டு பழகுபவர். இத்தனை வருஷங்களாக நாக்பூரில் இருந்த நாணா தற்சமயம் அத்தை வீட்டில் தங்கி ஸி.ஏ செய்ய வந்திருக்கிறான். நண்பன் சுரேஷ் மூலம் மூன்று மாசங்களுக்கு முன் நாணா பரிச்சயமாக அவன் வீட்டுக்குப் போய்வரும் கைலாசத்துக்கும், இந்த மூன்று மாசங்களாய் அத்தை நெருக்கமானார்.

அத்தைக்கு வயது 45. திருமணம் செய்து கொள்ளாமல் தனித்து வாழ்கிறார். பகல் பூராவும் தனியார் கம்பெனியில் அக்கௌண்டன்டாக உத்தியோகம். மாலையிலும், சனி, ஞாயிறு இதர விடுமுறை நாட்களிலும் கண் தெரியாத இரண்டு பசங்களுக்கு ஸ்க்ரைபாக உதவி, தொழு நோய் கண்டு பயப்படத் தேவையில்லை. ''மல்டி ட்ரக் தெரபி'' மூலம் அதைக் குணப்படுத்துவது வெகு எளிது என்று ஊர் ஊராகச் சென்று கூட்டங்களில் பேசி, சென்னையை அழகுபடுத்தும் முயற்சியில் இறங்கி இருக்கும் இயக்கத்தோடும், காவேரியைச் சுத்தமாக்குவோம் என்கிற கூட்டத்தோடும் அயராது இணைந்து செயல்பட்டு....

இத்தனையை மனசில் வைத்துக் கொண்ட, அத்தைக்கு கதர் புடவை சுற்றி, நரைத்த தலையும், குங்குமப்பொட்டும், கையில் குடையுமாய்க் கற்பனை செய்ய முனைந்தால் ஏமாற்றம்தான்.

அத்தைக்கு அவரை 'சமூக சேவகி' என்று குறிப்பிட்டால் பிடிக்காது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

“நம் உடம்பை, நம் வீட்டை நம் உடைமைகளைச் சுத்தமாக அழகாக வைத்துக்கொள்ளப் பாடுபடுகிறோம். ஆனால் தான் சுவாசிக்கும் காற்றை, வசிக்கும் தெருவைப் பராமரிக்க ஒருவர் முன்வரும்போது மட்டும் எதனால் அவருக்குச் சமூக சேவகி பட்டம்? ம்? இப்படிக் கூட்டம் கூட்டி ஒதுக்கிப் பேசு வதனாலேயே நமக்கெல்லாம், எது நம் கடமை, பொறுப்பு என்பதுகூட மறந்துபோய் எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தை, அடுத்தவரைக் குறை சொல்லும் குணம் வந்துவிட்டது. தெருவில் சின்னதாக ஒரு குழி இருந்து, அதில் ஒரு குழந்தை தடுக்கி விழுந்ததும் நாம் என்ன செய்கிறோம்? முதல் மந்திரியிலிருந்து கார்ப்பரேஷன் கடைநிலை ஊழியர் வரை திட்டித் தீர்க்கிறோம். அப்புறம் அத்துடன் நம் வேலை முடிந்தது என்று சும்மா இருந்து விடுகிறோம். ரைட்? இதைத் தவிர்த்து ஒரு கூடை மண்ணை எடுத்துவந்து அந்தக் குழியில் போடுவது பிரச்சினைக்கு நம்மாலான உதவியாக இருக்கும் என்று எத்தனை பேர் செயல்படுகிறோம், இல்லை நினைத்துத்தான் பார்க்கிறோம்? ம்......”



புருவங்கள் முடிச்சுப் போட, தீவிரமான அக்கறையுடன் அத்தை ஒருதரம் பேசியது நினைவுக்கு வர, எழுந்து போய்ப் பறக்கும் காகிதங் களைப் பொறுக்கி, குப்பைத் தொட்டியில் போடலாமா என்று கைலாசம் நினைத்தான். ஆனால் கூடவே

“ஆமாம் – நான் சுத்தம் செய்வதால் மட்டும் இந்தத் தெரு சுத்தமாகி விடப்போகிறதாக்கும்!” என்கிற ஆயாசம் எழத் திரும்பி சுவரில் சாய்ந்து உட்கார்ந்தான்.

படிக்கட்டுகளில் அந்தக் கோடியில் லேசாக வெடிப்பு கண்டிருந்த தரையில் சாரியாய் எறும்பு ஊர்வலம்....

கறுப்புப் பிள்ளையார் எறும்புதான்...

புருபுருவென்று சதா ஓடிக்கொண்டே இருக்கும் சுறுசுறுப்பான எறும்புகள்...

“இந்தப் பிள்ளையார் எறும்புகளுக்கு இருக்கிற சுறுசுறுப்புல சமர்த்துல, பொறுப்புல பாதிகூட இந்தக் காலத்துப்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பிள்ளைகளுக்கு இருக்கிறதில்லை" என்று இரண்டு நாட்கள் முன் அதே எறும்புக் கூட்டத்தைப் பார்த்துவிட்டுப் பேப்பரும் கையுமாய் உட்கார்ந்திருந்த அப்பா விமர்சித்தது நினைவுக்கு வர, கைலாசம் 'ப்ச்' என்று கோபத்துடன் சூள் கொட்டினான்.

பிறகு, அந்தக் கோபம் மாறாமலேயே முன்னால் நகர்ந்து எறும்பு ஊர்வலத்தின் நடுவில் விரலால் ஒரு கோடு இழுத்தான். மோப்ப சக்தியின் உதவியுடன் ஒன்றின் பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்த எறும்புகளின் ஊர்வலம் தடைப்பட்டுப் போக திடுமென உண்டான குழப்பத்துடன் எறும்புகள் தாறுமாறாக இங்கும் அங்கும் ஓடின. குட்டியாக ஒருவித மகிழ்ச்சியை உண்டாக்க, கைலாசம் பொந்துக்கு அருகில் இன்னொருதரம் கோடு கிழித்து, இன்னும் கொஞ்சம் குழப்பத்தை மற்ற எறும்புகள் நடுவிலும் ஏற்படுத்தினான்.

"டே கைலாசம்... சாப்பிட வாயேண்டா... மணி பன்னிரண்டாவுது...."

உள்ளிருந்து ஒலித்த அம்மாவின் குரல் காதில் விழாத மாதிரி கைலாசம் தொடர்ந்து எறும்புகளையே வெறித்தான். பின்னர்ப் பார்வையைக் குப்பை பொறுக்கும் பெண்மணியிடம் வீசினான்....

வேண்டியதைப் பொறுக்கிக் கொண்டு விட்ட நிறைவுடன் அவள் நகர, இந்தக் குப்பைத் தொட்டிதான் எத்தனை பேருக்கு வேண்டியதாக இருக்கிறது என்கிற நினைப்பில் கோபம் குறைந்து அவனுக்குச் சிரிப்பு எழுந்தது.

எச்சில் இலைக்காக வரும் நாய்கள்...

துண்டுப் பேப்பர்களை நாடி வரும் பெண்மணி....

அப்புறம் அப்பா....

''நா, அந்தக்கால இண்டர்... ஆனாலும் முனைஞ்சு வேலை தேடினதுல படிச்சு முடிச்ச மறு மாசமே கையில வேலை, சம்பளம்... ஆனா; நீ? வேண்டாத லொட்டு லொசுக்கு சொல்லிட்டு, குண்டு சட்டில குதிரை ஓட்டற! உன்னால யாருக்கு ஆதாயம்? ஏதுடா, அப்பா இத்தனை கஷ்டப்படறாரே, நாம கை கொடுப்பம்னு துளி அக்கறை கிடையாது... இருந்தா, இப்படி வர்ற வேலை எல்லாம் "ஆ அது என் படிப்புக்கு ஏத்தது இல்லை...' இதவிட உசந்த வேல எனக்கு வரும் -னு நொட்டாங்கு அடிப்பியா? எல்லாம் நா செஞ்ச பாவம்டா... போன ஜன்மத்துப் பாவம்... பேசாம டிகிரி, மத்த ஸர்டிபி கேட்டுகளைக் கிழிச்சு குப்பைத் தொட்டில போட்டுடு... உன்னோட தொடர்ந்து முட்டிக்காம நா வாய் மூடிக்கிட்டாவது இருப்பேன்."



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

குப்பைத் தொட்டியில் போடு – கிழித்து எறி – இதைத் தவிர வேறு பேச்சே கிடையா….

“டே… உனக்கென்ன காது செவிடா? தொண்ட கிழியக் கத்தறது கேக்கல? வந்து சாப்டுட்டு போயேண்டா….”

அம்மாவின் தொனியில் இப்போது அலுப்பும், கோபமும் கலந்து ஒலிப்பதைப் புரிந்துகொள்ள முடிந்தாலும், கைலாசம் எழுந் திருக்கப் பிடிக்காமல் அப்படியே சலனமில்லாமல் அமர்ந் திருந்தான்.

அப்பா வீட்டில் இருந்தால், ஏண்டா, சாருக்கு கொட்டிக்கறதுக்குக் கூட வெத்தலை பாக்கு வச்சு அழைக்கணுமா? என்று நக்கலாய்க் கேட்டிருப்பார் – நிச்சயம்.

எத்தனை தரம், என்னவெல்லாம் கேட்டாகி விட்டது.

வேகமாக வீசிய காற்றில் அழுக்கு பிளாஸ்டிக் பேப்பர் ஒன்று பறந்து வந்து கடைசிப் படிக்கட்டில் ஒட்டிக்கொண்டது.

“நம் உடம்பை, நம் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் நாம், நம் வீட்டுக் குப்பையைத் தெருவில் கொட்டுவதை ஏன் தடுக்க மாட்டேன் என்கிறோம்? ஏனென்றால் தெரு நம்முடையது என்கிற அக்கறை இல்லை – அதானே? அடுத்தவர்களைப் பற்றின கரிசனம் நமக்குக் குறைந்து வருகிறது… கேரிங் அண்ட் ஷேரிங்… அக்கறையும் பகிர்ந்து கொள்ளுதலும் மறந்துவிட்ட மனசு குறுகிப்போய் சுயநலம் தலை எடுப்பதில் ஆச்சரியம் என்ன?”

மீண்டும் அத்தையின் பேச்சுகள் நினைவுக்கு வர ஒருவிதத் தவிப்பு உண்டாயிற்று.

**இறந்தகாலம்**

சந்தடியற்ற
ரயில் நிலையத்தில்
பரிச்சயமற்ற அவரும் நானும்
இந்த இடத்தில்
ஒரு பெரிய அரச மரம்
உண்டு தெரியுமா என்றார்
ஏகப்பட்ட சிட்டுக் குருவிகள்
அடைகிற சத்தம்
கேட்டிருக்கிறீர்களா என்றேன்
அவர் இறந்த காலத்தில் குனிந்து
பழுப்பு இலைகளைப் பொறுக்க
நான் மூச்சிழுத்து
நுகர்ந்து கொண்டிருந்தேன்
பறந்து போன எச்சச் சொட்டுகளை
தண்டவாளங்கள்
விம்மிக்கொண்டிருக்க…

**– கல்யாண்ஜி**

பிளாஸ்டிக் பேப்பரை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டு விடலாமா?

தொடர்ந்து யோசிக்கும் முன்னர் தெருமுனையில் ஒரு சிகப்பு வண்டி எண்.இ.118 திரும்ப, யார், பாபுவா என்கிற ஆர்வத்துடன் முன்னால் சாய்ந்து பார்த்தான்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இல்லை... இரண்டாவது வீட்டு வாசலில் நின்று யாரையோ இறக்கிவிட்டபின் வண்டி புறப்பட்டுச் சென்று மறைந்தது.

பாபுவின் அப்பா பெரிய புள்ளி. கோயமுத்தூரில் மில்.எக்ஸ்போர்ட் பிஸினெஸ் என்று தடபுடல் வாழ்க்கை. எண்.இ.118 ஐ போன பிறந்த நாளுக்கு முப்பதாயிரம் ரூபாய் பிரிமியம் கொடுத்து பாபுவுக்கு பரிசாக வாங்கித்தரும் அளவுக்குப் பணத்தில் புரள்பவர்.

அப்பாவின் அலுவலகத்தில் வேலை பார்க்கிறேன் என்று பாவ்லா காட்டிவிட்டு, துளி அவகாசம் கிடைத்ததும் வண்டி, பணத்துடன் பாபு வந்துவிடுவான். பாபு, நாணா, சுரேஷ், கைலாசம் – அத்தனை நண்பர்களும் ஒன்று சேர்ந்துவிட்டால் அப்புறம் அவர்கள் பாஷையில் சொல்வது மாதிரி சுத்தாக்ஸ்.

“என்ன வேலை கிடைத்ததற்கு ஸெலிப்ரேஷனா”

“எஸ் அத்தை”

“என்னென்ன செய்தீர்கள்?”

அத்தை புரிந்துகொள்வார்கள் என்கிற தைரியம் உண்டென்பதால் நாணா உண்மையைச் சொன்னான்.

அத்தை சீண்டுபவரோ, வெற்றுக்குப் புத்தமதி சொல்ல முனைபவரோ அல்ல... அக்கறையுடன் பேசுபவர் என்கிற வித்தியாசம் நினைவில் இருக்க, அன்று நால்வருமே வாய் அடைத்துத்தான் நின்றார்கள்.

அத்தை எழுந்து கதவருகில் சென்றார். திரும்பி நம்பிக்கை நிறைந்த குரலில் ஆனால் மென்மையாய்க் கேட்டார்.

“நீங்கள் எல்லாமே அதிபுத்திசாலிகள் – தீவிரமாய் யோசிக்கத் தெரிந்தவர்கள். ஸோ, நான் ஒரு கேள்வி கேட்கட்டுமா? உங்களைப் பெற்றவர்கள் சம்பாத்தியத்தில் இப்படி எல்லாம் செலவழிப்பது உங்களுக்கு உறுத்தவில்லை? டோண்ட் யூ ஆல் ஃபீல் கில்டி அபௌட் இட்?”

அத்தை பேசின பிறகு ரொம்ப நேரத்துக்கு நால்வரும் மௌனித்ததும் இந்தப் பத்து நாட்களாக சிகரெட்டைக் கையால் நிம்மதியாய் தொடமுடியாதபடி உள்ளே என்னமோ உறுத்துவதாக பாபுவே சொன்னதும் இப்போது ஞாபகத்துக்கு வர, இருப்புக் கொள்ளாமை அதிகமாக, கைலாசம் எழுந்து நின்றான்.

கோடு போட்டதினால் உண்டான குழப்பம் மறைந்து மறுபடியும் தங்கள் ஊர்வலத்தைக் கர்மசிரத்தையுடன் எறும்புகள்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மேற்கொள்வதைப் பார்த்தவாறு கைகளைத் தலைக்கு மேல் உயர்த்திச் சோம்பல் முறித்த நிமிஷத்தில், மீண்டும் அம்மா இன்னும் கொஞ்சம் கத்தலாக அழைப்பது காதில் விழுந்தது.

எறும்பு ஊர்வலத்தில் நாலு எறும்புகள் கஷ்டப்பட்டு ஒரு அரிசியைப் பொந்துக்கு அருகில் இழுத்துச் செல்வதைப் பார்த்த போது காரணம் புரியாமல் ஒரு நமநமப்பு எழக் கைலாசம் சட்டென்று குனிந்தான். ஆள்காட்டி விரலால் அந்த அரிசியை லேசாகச் சுண்டிவிட்டான். அரிசி இரண்டடி சென்று மூலையில் விழ, எறும்புகள் உணவைப் பறிகொடுத்த கவலையோடு என்னவோ ஏதோ என்று பயந்து தறிகெட்டு ஓடிய காட்சி சின்னதாக ஆனால், குரூரமான மகிழ்ச்சியை உள்ளுக்குள் பரப்புவதை உணர முடிய, மெல்ல நடந்து வீட்டுக்குள் சென்றான்.

சமையல் அறையில் சாப்பிடத் தட்டை வைத்து விட்டு காத்திருந்த நாழிகையில் மதியச் சிற்றுண்டிக் காக வெங்காயம் அரிந்துகொண்டிருந்த அம்மா, இவனைக் கண்டதும் சிடுசிடுத்தாள்.

“ஏண்டா, இப்படி எதுக்கும் உபயோகமில்லாம இருந்து இருக்கிறவங்க கழுத்த அறுக்கறே? மணி பன்னிரண்டு ஆச்சு... காலாகாலத்துல சோத்துக் கதைய முடிச்சாதான் மேக்கொண்டு வேலை ஆகும். நாலு மணிக்கெல்லாம் பரிமளாவப் பெண் பார்க்க வரப்போறாங்க... அவங்களுக்கு டிபன் பண்ணியா கணும்... பெரியப்பாவை ஆஸ்பத்திரில சேர்த்திருக் காங்களாம்... அங்கே ஒரு நடை போயிட்டு வரணும்... என்னால முடியாட்டியும் ஆறு சாத்துக்குடி பழங்கள வாங்கிட்டு நீ போயிட்டு வரக்கூடாது? மாசக் கடைசி இங்க முழி பிதுங்குது... இப்ப பாத்து மேலமேல வேண்டாத செலவெல்லாம்...”

குறைப்பட்டு, குறைப்பட்டு... பட்டு சுட்ட கத்தரிக்காய் மாதிரி சுணங்கிப் போய்விட்ட அம்மாவின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கப் பிடிக்காமல் கைலாசம் சாப்பிட உட்கார்ந்தான்.

சோற்றைப் பிசைந்து குழம்புடன் கலந்து உருட்டி, கவளத்தை வாயருகே கொண்டு போனபோது சொடேரென்னு மனசுக்குள் சவுக்கு ஒன்று சொடுக்கியது.

## நதி



நதியில் துவைத்தது போய்
நதியைத் துவைக்க வேண்டியதாயிற்று

ஒன்றுகலக்கச் செல்லும்
நதிகளுக்காகப் பிரிந்து கிடக்கிறோம்

அணைகட்டிய
மன்னர்களை மறந்து
அணை உடைப்பதில்
மன்னர்களாகிவிட்டோம்

கெண்டை விளையாடிய
இடத்தில்
கிரிக்கெட் விளையாட்டு

சொற்களஞ்சியத்தில்
இருக்கிறது
நெற்களஞ்சியம்

**- விவேகா**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

"கேரிங் அண்ட் ஷேரிங்... அக்கறையும் பகிர்ந்துகொள்ளுதலும் மறந்துவிட்ட நிலையில் மனசு குறுகிப்போய், சுயநலம் தலை எடுப்பதில் ஆச்சரியம் என்ன?"

வாயில் போட்ட சாதத்தை விழுங்க முடியாமல் மீண்டும் மீண்டும் சவுக்கு வலிக்க வலிக்க உள்ளுக்குள் சொடுக்கியது....

தொண்டைக்குழிக்கு மேல் கட்டை ஒன்று வைத்து அடைத்து விட்ட மாதிரி சோறு இறங்க மறுத்தது.

கையை உதறிக்கொண்டு எழுந்தான். 'டே...' என்ற அம்மாவின் கத்தலை லட்சியம் பண்ணாமல் வாசலுக்கு வேகமாய்ச் சென்றான். மூலையில் கிடந்த அரிசியைத் தேடி எடுத்து, பொந்தருகில் குனிந்து மெல்ல, கவனமாய் உள்ளே போட்டான். சின்னக் குரலில் 'ஸாரி' என்று முனகிவிட்டு நிமிர்ந்து வாசப்படியில், தெருவில் இங்கும் அங்கும் கிடந்த பிளாஸ்டிக் பேப்பர் துண்டங்களை அவசரமாய்ப் பொறுக்கிப் பந்தாகச் சுருட்டிக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, மீண்டும் உள்ளே வந்து என்னவாயிற்று உனக்கு? என்கிற பார்வையுடன் நின்ற அம்மாவை நிமிர்ந்து பார்த்தான்.

வழக்கமாகத் தென்படும் சுணக்கம் புலப்படாமல் அந்த களைத்துப் போன முகத்தைப் பார்க்கப் பாவமாக இருக்க, ரொம்ப நாட்களுக்குப் பிறகு நீயும் நானும் சேர்ந்து சாப்பிடலாமாம்மா? என்றான் இதமான குரலில்.

**–சிவசங்கரி**

**சிவசங்கரி**



தமிழ் நாவலாசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர்; இதழாசிரியரும் ஆவார். நாவல்கள் மட்டுமின்றிப் பயண நூல்களையும் படைத்துள்ளார். திரிவேணி சங்கமம், திரிசங்கு சொர்க்கம், கப்பல் பறவை, ஆகியன இவரது நாவல்கள். மனம் கவர்ந்த மலேசியா, பிரதமருடன் ஒரு பயணம் என்பன இவரது பயணநூல்கள்.

## செயல்பாடுகள்

- 'விழிப்பு' எனும் கவிதைத் தலைப்பு இக்கதைக்கு மிகப் பொருத்தமே – விமர்சனக் கட்டுரை எழுதுங்கள்.
- 'விழிப்பு' – எனும் தலைப்பில் சிறுகதை ஒன்றை எழுதுங்கள்.
- பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களைத் தடுப்போம் எனும் கருத்தை வலியுறுத்தும் வாக்கியங்கள் எழுதி விளம்பரப்படுத்துங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அலகு 2

# வேர்வைத்துளிகள்

தனி மனிதனின் வளர்ச்சி மட்டுமன்றி, ஒரு சமுதாயத்தின், ஒரு நாட்டின் வளர்ச்சியும் தொழிலை அடிப்படையாகக் கொண்டது. இன்று நாம் காணும் புதிய உலகம் தொழில் வளர்ச்சியின் காரணமாக விளைந்தது ஆகும். ஆனால் உலகைச் சமைக்கும் தொழிலாளியின் நிலை வருந்தத்தக்கது.

மாறிவரும் காலத்திற்கு ஏற்பத் தொழில் வளர்ச்சிக்கு நவீனத் தொழில் நுட்பங்கள் அவசியம். இல்லையேல், சில பாரம்பரியத் தொழில்கள் முற்றிலுமாக அழிந்துவிடும். மேனாட்டுத் தொழில் நிறுவனங்களின் வருகையால் அழிவின் விளிம்பில் நிற்கும் பாரம்பரியத் தொழில்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

தொழில் வளர்ச்சிக்குப் புதிய மனித வளம் இன்றியமையாதது. எனவே மனித வளம் பெருகவும் அதனைச் சரியான முறையில் பயன்படுத்தவும் முயல வேண்டும். இக்கருத்துகளை மாணவர்கள் பெறும் வகையில் இன்றுவரை, உயரப்பறக்க, மலரும் மனம் என்னும் மூன்று கருத்தலகுகளில் இவ்வலகு அமைக்கப்பட்டுள்ளது.

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- மாறிவரும் தொழில்நுட்பங்களின் நிறை, குறைகளைக் கண்டறிந்து கருத்தரங்கக் கட்டுரைகள் எழுதுகிறார்கள்.
- நவீனத் தொழில்நுட்பங்கள் நமது பண்பாட்டின் மீதும் தாக்கம் செலுத்தியுள்ளது என்பது குறித்துக் குறிப்புரை எழுதுகிறார்கள்.
- தொழில்கள் தொடர்பான விளம்பரங்கள், முத்திரை வாக்கியங்கள் எழுதுகிறார்கள்.
- பாடப்பகுதி சுட்டிக்காட்டும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்கிறார்கள்; கட்டுரை எழுதுகிறார்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# இன்றுவரை...



## என்று புவி காணும்?

மாடிவீடு களமைத்து
 வாழவழி செய்துதந்தோன்
வாடுகிறான் வெம்பனியில் குளிரில் - அவன்
 வாடுவதை என்று புவி காணும்?

வானத்து நிலவொளியின்
 மென்மையன்ன நல்லிழையில்
ஆனஉடை நல்குமருந்தோழன் - அவன்
 அரையுடையை என்று புவி காணும்?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நிலந்திருத்தி நெல் விளைத்து
நீணிலத்தை வாழுவிப்போன்!
உலர்ந்த வயிற் றோடுலவுகின்றான் - அவன்
உடலுலர்வை என்று புவிகாணும்?

இன்னல்நிறை ஆழியில்
இறங்கி நல்ல முத்தெடுத்து
மன்னுலகினுக்களிக்குந் தோழன் - அங்கு
மாய்வதனை என்று புவிகாணும்

பாம்பு, புலி வாழுகின்ற
பாறை பலவுங்குடைந்து
ஆம்வகையில் பாதை செயுந்தோழன் - படும்
அல்லலினை என்று புவிகாணும்?

**- கவிஞர் சாமிபழனியப்பன்**



**கவிஞர் சாமிபழனியப்பன்**

கவிஞர் சாமி பழனியப்பன் புதுக்கோட்டை மாவட்டத்தில் பிறந்தவர். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிடம் எழுத்துப்பணி உதவியாளராகப் பணியாற்றியவர். தமிழ்ச் சான்றோர்களுடன் சமகாலத்தில் பழகியவர். சிரிக்கும் வையம், புரட்சி இலக்கியம், மலரும் தமிழகம், காதல் உள்ளம், பாரதியும் பாரதிதாசனும், மாம்பழக் கவிச் சிங்கம் போன்ற அரிய நூல்களைத் தமிழுக்குத் தந்தவர். தமிழக அரசின் பாவேந்தர் விருதினைப் பெற்றவர்.

**செயல்பாடுகள்**

- இப்பாடல் வரிகள் காட்டும் உணர்வுகளை விமர்சனக் குறிப்பாக எழுதுங்கள்.
- ‘அன்றிலிருந்து இன்றுவரை தொழிலாளிகள் நிலையில் மாற்றமில்லை’ – விவாதித்துக் குறிப்பு எழுதுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## நீவாடுகளுடன் ஒரு ஆட்டம்

கடல் நீரோட்டம் என்பது எவ்வளவு பெரிய சக்தி. அதைப் புரிந்துவைத்திருப்பது எவ்வளவு பெரிய அறிவியல் என்பதை தோமையர் மூலமாக அறிந்துகொண்டேன். குமரியில் கடலில் காணாமல்போன மீனவர்களைத் தேடும் பணி நடந்து கொண்டிருந்தபோது, நான் தோமையரைச் சந்தித்தேன். கடலில் மீனவர்கள் இப்படித் தவறும்போது அவர்களை மீட்கும் நடவடிக்கைகளில், நம்முடைய கடலோரப் பாதுகாப்புப் படையினர் முழு அக்கறையோடு ஈடுபடுவதில்லை என்று குற்றம் சாட்டினார் தோமையர்.

“பேரு என்னவோ மீட்புப் பணின்னு பேரு. நடத்துறது என்னவோ நாடகம். குமரியில் ஒருத்தன் வுழுந்தா பாகிஸ்தான் கடக்கரை வரைக்கும் தேடணும். அதான் அசலான அக்கறை. நீவாடுன்னா சும்மா இல்ல பாத்தியளா என்றார்.”

நான் கேட்டேன்..., ஐயா.. ஒருத்தரை எங்கே தவற விட்டோமோ... அந்தப் பகுதியைச் சுத்திதானே தேடணும்? தவிர தமிழ்நாட்டுல தவறின ஒருத்தரை பாகிஸ்தான் கடற்கரையில ஏன் தேடணும்?

“தம்பி நெலத்துல ஒருத்தரைத் தவற விட்டோம்னா, அந்தப் பகுதியைச் சுத்தித் தேடறது முறையா இருக்கலாம். இது கடல்லோ? மனுஷன் பொழைச்சுக் கெடந்தா, இங்கேயே சுத்துப்பட்ட எதாவது கரையில ஏறியிருக்கலாம். இல்லேன்னா, சவத்தைக் கடல் கரையில தள்ளியிரும். கடலம்மா தேவையில்லாத எதையும் உள்ளே வெச்சுக்கமாட்டா, பாத்தியளா...

இதுவரைக்கும் நூத்தியம்பது பக்கம் பேரு குமரி மாவட்டக் கடக்கரையில மட்டும் காணாமப் போயிருக்கான். ஊர்க்காரங்க தேடயில, சுத்துப்பட்டு கடலைச் சலிச்சுடுவாங்க. பெறகும், வருஷக் கணக்கா சவம் கூடக் கெடைக்கலையின்னா, என்ன அர்த்தம்? நாம தேடுற மொறை சரியில்லேன்னுதானே அர்த்தம்? நீவாடு தெரியாதவன் மீனவனில்லே. இந்தக் கடல் பாதுகாப்புப் படையில எத்தனை பேருக்கு நீவாடு தெரியும்? நீங்க கடல் பாதுகாப்புப் படையில, ஒவ்வொரு எடத்துலேயும் பாதிக்குப் பாதி மீனவனைப் போடச் சொல்லுங்கங்கிறேன் பெறவு, ஒரு மீனவன் இங்கே காணாமப் போக மாட்டான்.”

ஐயா, நீங்க எப்படி நீவாடு பார்ப்பீங்க? எனக்குக் கொஞ்சம் காட்டுவீங்களா?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

“இது என்ன பெரிய சாதனை? இருங்க, உங்க கண்ணுக்கு எதுக்க நீவாடைக் காட்டுறேன் என்றவர். படகை வேகமாகச் செலுத்தலானார். குறிப்பிட்ட ஒரு பகுதியை நெருங்கியதும் படகின் இன்ஜினை அணைத்தார் ஆச்சரியம்! நீரோட்டத்தின் போக்குக்கேற்பப் படகு தானே ஓட ஆரம்பித்தது. ஒரு கட்டத்தில் பேய் பிடித்தாற்போல அது வேகம் எடுத்தபோது, பதறிப் போனேன். தோமையர் இன்ஜினை முடுக்கிவிட்டு, படகின் போக்கை மாற்றலானார்.

“அந்தக் காலத்துலயே நம்மாளு நீவாடை நாலு விதமா பிரிச்சு வெச்சுருக்கான். பாத்தியளா... அரநீவாடு...கரைக்கணைச்ச நீவாடு, சோநீவாடு, வாநீவாடு. அதாவது கரையிலேர்ந்து ஆழ்கடல் ஓடுற நீவாடு அரநீவாடு, ஆழ்கடல்லேர்ந்து கரைக்கு ஓடுற நீவாடு. கரைக்கணைச்ச நீவாடு. மேற்குலேர்ந்து கிழக்கே ஓடுற நீவாடு, சோநீவாடு. கிழக்குலேர்ந்து மேற்கே ஓடுற நீவாடு வாநீவாடு.



ஒரு கடலோடி இந்த நீவாடை வகை பிரிச்சுப் பாக்கத் தெரிஞ்சுவெச்சிருக்கிறது ரொம்ப முக்கியம். அப்பம்தான் எந்த நீவாட்டுக்கு எந்த மீன் அகப்படும்னு தெரியும். எந்த நீவாட்டுல போனா, சீக்கிரம் போய்ச் சேரலாமுனு தெரியும். இந்த வள்ளம்னு இல்லை. எவ்வளவு பெரிய கப்பலாயிட்டு இருந்தாலும் சரி. நீவாட்டுல ஒட்டினா, சுளுவா ஓடும். எரிபொருளும் மிச்சம், நேரமும் மிச்சம். நீவாடோட சேர்த்து காத்தும் சுழட்டுச்சு, எந்தக் கப்பலையும் சுழட்டிச் சொருகிரும் பார்த்துக்கங்க” என்றார்.

அன்றிரவு விடுதிக்குத் திரும்பியதும் நீரோட்டத்தைப் பற்றிப் படிக்க ஆரம்பித்தேன்.

**கடலின் உந்துசக்தி**

பெரியவர் சொன்னதைப் போலக் கடல் நீரோட்டத்தை அறிந்து கொள்வது என்பது எவ்வளவு பெரிய அறிவியல் என்பது அதைப் பற்றித் தேடத் தேடத் தெரிந்தது. கடல் பயணங்களுக்கு மட்டும் அல்ல. கடலின் உயிரியக்கத்துக்கே மிகப் பெரிய உந்துசக்தி நீரோட்டம்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஒரு திசையை நோக்கிய தொடர்ச்சியான கடல்நீர் இயக்கத்தையே நீரோட்டம் என்று சொல்கிறோம். (நம் கடலோடிகள் மொழியில் நீவாடு) விஞ்ஞானிகள் நீரோட்டத்தைப் பல வகைகளாகப் பிரிக்கிறார்கள். நம்மவர்கள் நான்கு வகைகளுக்குள் அதை அடக்குகிறார்கள்.

இந்த நீரோட்டங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இயல்பைப் பெற்றிருப்பதாகச் சொல்கிறார்கள். உதாரணமாக, மேற்கு நோக்கிய கடல் நீரோட்டங்கள் அனைத்தும் விரைவானவை. ஆழமானவை. மிகக் குறுகிய பரப்பிலானவை. ஏராளமான நீரைக் கொண்டு செல்பவை. இவற்றுக்கு நேர் எதிரானவை கிழக்கு நோக்கிய நீரோட்டங்கள். இவை குளிர்ந்த நீரை பூமியின் மத்தியப்பகுதிக்குக் கொண்டு சேர்ப்பவை. ஆழம் குறைவானவை. அகலமானவை. சில வேளைகளில் இந்த நீரோட்டம் ஆயிரம் கி.மீ. பரப்புக்குக் கூட விரிந்து செல்லுமாம்.

### படைப்பாளி



இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும்
இலக்கணம் படித்தவன் தொழிலாளி
உருக்குப் போன்ற தன் கரத்தை நம்பி
ஓங்கி நிற்பவன் தொழிலாளி

கல்லைக் கனியாக மாற்றும் தொழிலாளி
கவனம் ஒருநாள் திரும்பும்
நல்லவர் வாழும் புதிய சமுதாயம்
நிச்சயம் ஒரு நாள் அரும்பும்
வாழ்க்கை என்றொரு பயணத்திலே – பலர்
வருவார் போவார் பூமியிலே
வானத்து நிலவாய்ச் சிலர் இருப்பார் – அந்த
வரிசையில் முதல்வன் தொழிலாளி

– ஆலங்குடி சோமு.

கடலில் நீரோட்டம் உருவாகப் பல காரணங்கள் காற்று, புவியடுக்கில் ஏற்படும் சலனங்கள், பூமியின் சுழற்சியால் ஏற்படும் அசைவுகள், கடல்நீரின் அடர்த்தியிலும் வெப்ப நிலையிலும் ஏற்படும் மாறுபாடுகள் சூரியன் – சந்திரன் போன்றவற்றின் ஈர்ப்புச்சக்தியால் கடல்பரப்பில் ஏற்படும் மாற்றங்கள் போன்றவை இந்தக் காரணங்களில் முக்கிய மானவை.

### பல்லாயிரம் மைல் பயணம்

கடலுக்குள் ஆயிரக்கணக்கான மைல்கள் நீண்டு பாய்ந்து செல்லக்கூடியவை இந்த நீரோட்டங்கள். கடலுக்குள் ஓர்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஆறுபோல, ஒரு கன்வேயர் பெல்ட் போலச் சுழன்று கடல்வாழ் தாவரங்களையும் ஏனைய உயிரினங்களையும் கனிம வளங்களையும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக் கொண்டு சேர்ப்பதில் நீரோட்டங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. சில வகை மீன்கள் பல்லாயிரம் மைல் வலசை செல்கின்றன. அல்லவா. அதுவெல்லாம் நீரோட்டத்தின் உதவியாலேயே சாத்தியமாகிறது.

தவிர, ஆழ்கடலில் வாழும் உயிரினங்களையும் சில வகைக் கடல் தாவரங்களையும் இந்த நீரோட்டங்கள்தான் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டு சென்று, கடலின் உற்பத்திக் கேந்திரத்தை உயிர்ப்போடு வைக்கின்றன. உலகின் பல இடங்களில் கடலின் தட்பவெப்ப நிலையை மாற்றுவதில் மட்டுமல்ல. நிலத்தின் தட்பவெப்ப நிலையை மாற்றுவதிலும் நீரோட்டங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு.

தோமையர் சொன்ன வார்த்தைகளைக் கடலுக்குள் மீனவர்கள் காணாமல்போகும் சூழலோடு பொருத்திப் பார்த்தேன். "நீவாடோட சேர்த்து, காத்தும் சுழட்டுச்சு, எந்தக் கப்பலையும் சுழட்டிச் சொருகிரும் பாத்துக்கங்க."

ஒரு பெருங் கப்பலே ஈடுகொடுக்க முடியாத மாபெரும் சக்தியின் முன் சாதாரணமான கட்டுமர மீனவர் எம்மாத்திரம்? ஒரு சாண் வயிற்றை நிரப்பத்தான் எத்தனையெத்தனை சக்திகளுடன் ஒரு கடலோடி போராட வேண்டியிருக்கிறது? எத்தனையெத்தனை வித்தைகளைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது?

**– சமஸ்**

நன்றி : "தி இந்து" தமிழ் நாளிதழ்

**செயல்பாடுகள்**

- வெவ்வேறு தொழில்களில் (துணி நெய்தல், பாய்நெய்தல், பானை வனைதல்) பயன்படுத்தப்படும் தொழில் நுட்பங்களைத் திரட்டி, பட்டியலிடுக.
- தொழில்நுட்பங்களால் தொழில் வளர்ச்சி பெறுகிறதா, வீழ்ச்சி அடைகிறதா என்பது குறித்துப் பட்டிமன்றம் நடத்துங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# ௩

## உயரப் பறக்க



### ஈமக்கலயம்

அப்ப எங்க
பாளையத்து சந்தையினா
பதினெட்டுப் பட்டியும் கூடுமுங்க
மண்பான யேவாரம் சூடு பறக்குமுங்க


ஆத்தாளுக்கு நேந்துக்குற
ஆயிரங்கண் பான
வீரபாண்டி திருவிழாவுல
எடுத்துவர்ற தீச்சட்டி
கார்த்திக மாசம்
வெளக்கேத்தும் கிளியாஞ்சட்டி



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கோழியூட்ட எந்துருச்சு
நெல்லவிக்கும் தாழிப்பான
ஆத்தா சிறுவாட்டுக் காசெடுத்து
மாடுகள தண்ணிக்கிவிடுற
மண்குலுதாடி



அடுப்பெரிக்க மண் அடுப்பு
ஒலவைக்க மண்சட்டி
மூடிவைக்கிற ஒலம்படி
சேத்துவைக்கிற உண்டியலு

குடிதண்ணிக்கு மண்குடம்
கலனித்தண்ணிக்கு
ஊரல்பான
செத்தாலும் ஈமச்சடங்குக்கு
கலயம்

சாமி சோலியாகட்டும்
சாவு சோலியாகட்டும்
எங்களுக்கு எல்லாமே
மண்ணுதாங்க

இப்பவும் எங்க
பாளையத்து சந்தையினா
பதினெட்டுப்பட்டியும்
கூடுதுங்க
பிளாஸ்டிக்குட யேவாரம்
சூடுபிடிக்குதுங்க

**– அருண்பாரதி**

தற்காலப் புதுமைக் கவிஞர்களில் ஒருவர். வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர். இக்கவிதை 2010 இல் வெளியான 'தை' இதழிலிருந்து எடுக்கப்பட்டது.

### செயல்பாடுகள்

- 'இப்பவும் எங்க ........
  ....... சூடுபிடிக்குதுங்க'
  – இப்பாடல் வரிகள் காட்டும் உணர்வுகளை விமர்சனக் குறிப்பாக வெளியிடுங்கள்.
- தொழில் மற்றும் தொழிலாளர் நிலை குறித்துப் புதுக்கவிதைகள், கதைகள் படைத்து வகுப்பு மலராக வெளியிடுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# நெசவுத் தொழில்நுட்பம்

ஆடைகளை உற்பத்தி செய்வதற்கு உதவும் நுட்பம் நெசவுத் தொழில்நுட்பம் ஆகும். பஞ்சு உற்பத்தி, விசைத்தறி பயன்பாடு, சாயமிடல் போன்ற செயல்பாட்டு நுட்பங்கள் நெசவுத்தொழில் நுட்பத்தில் அடங்கும்.

### தமிழர்களும் நெசவுக்கலையும்

நெசவுத் தொழில்நுட்பத்தை ஒரு கலையாகவே தமிழர்கள் பாவித்துப் பின்பற்றி வந்துள்ளனர். பருத்தியிலிருந்து நூல் நூற்றலையும், கைத்தறியையும், தையலையும் பண்டைக்காலம் தொட்டே தமிழர் அறிந்திருந்தனர். தமிழர்கள் இத்துறையில் கொண்ட தொழில்நுட்பத்தையும், ஈடுபாட்டையும் தமிழர் நெசவுக்கலை குறிக்கின்றது.

### மகாவம்சத்தில் நெசவு

இலங்கையின் வரலாற்றின் முற்பட்ட நூலான மகாவம்சத்தின் கூற்றின்படி, இலங்கைக்கு விசயனும் அவனது நண்பர்கள் 700 பேரும் தம்பபண்ணி எனும் இடத்தை வந்தடைந்ததன் பின்னர், விசயனின் நண்பர்கள் அவ்விடத்தில் தோன்றிய ஒரு பெண்ணை (யாக்கினி) பின் தொடர்ந்து ஒவ்வொருவரும் செல்கின்றனர். அங்கே குவேணி அவர்களைப் பொய்கை ஒன்றில் சிறை வைக்கின்றாள். கடைசியாக அவர்களைத் தேடி விசயன் செல்லும் போது, ஒரு மரத்தடியில் துறவி வடிவில் குவேணி நூல் நூற்றுக்கொண்டிருக்கின்றாள் எனும் தகவல் விசயன் இலங்கைக்கு வரும் முன்பே இலங்கையில் நெசவு கைத்தொழில் பற்றிய அறிவு இருந்துள்ளதை வெளிப்படுத்துகிறது.

### பல்வேறு பிரிவுகள்

நெசவுத்தொழில்நுட்பம் பண்டைய காலந்தொட்டே தமிழர்களின் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. நெசவுத் தொழில்நுட்பத்தைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. இயற்கையான பஞ்சுத்துணி நெசவுகள் (பருத்தி இழை, சணல், மூங்கில் மற்றும் பல)
2. செயற்கை இழை பஞ்சுத்துணி நெசவுகள் (பாலியஸ்டர், விஸ்கோஸ் மற்றும் பல)



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

3. மிருக உரோம நெசவு (உல் எனப்படும் ஆட்டிழை மற்றும் பல)

### பருத்தி இழை நெசவுத் தொழில்நுட்பம்

பருத்தி இழை நெசவுத் தொழில்நுட்பம் பல படிகளை உள்ளடக்கியது.

1. பஞ்சடித்தல் (ஜின்னிங்)
2. நூல் நூற்றல் (ஸ்பின்னிங்)
3. நூலைப் பதப்படுத்துதல், சாயப்படுத்துதல் மற்றும் நெசவிற்குத் தயார்படுத்துதல்
   (புராஸஸிங், டையிங் மற்றும் வீவிங் பிரிபரேசன்)

### பஞ்சடித்தல்

விவசாயிகளிடமிருந்து வாங்கிய பருத்தியை இயந்திரம் மூலம் விதை நீக்கிப் பஞ்சு தனியே பிரித்தெடுக்கப்பட்டுப் பொதிகளாக்கப்பட்டு நூற்பாலைகளுக்கு அனுப்பும் முறை.

### நூல் தயாரிப்பு

நூற்றல் என்னும் நூற்பு தொழில்நுட்பம் மிக மிக எளிதானது. அவற்றை மிக எளிதாகத் தமிழில் சொல்வதென்பது பல சிக்கல்களை உள்ளடக்கியது... காரணம் பல சொற்களுக்குத் தமிழ் வார்த்தைகளைத் தேடுவதில் உள்ள சிரமம்தான்.



முதலில் நூல்களை அதன் இயல்புக்குத் தகுந்தவாறு பகுப்பது என்பது மிக முக்கியம். நூல்களைப் (yarn) பொதுவாக எண்ணிக்கை (count) என்ற காரணியால் பகுப்பார்கள்.

பல்வேறுவிதமான துணிகளுக்குப் பல்வேறு விதமான நூல்கள் தேவை. நீங்கள் கடையில் சென்று போர்வையும், மேலாடையும் வாங்குகிறீர்கள். இரண்டும் ஒரே மாதிரியாகவா இருக்கிறது? இல்லையே... பிறகு வேறுபாடு எதில்? அங்கேதான் இந்த நூலின் எண்ணிக்கை வருகிறது. அந்தந்த நூலின் எடைக்குத் தகுந்தாற்போல் அந்த நூலின் எண்ணிக்கை குறிக்கப்படுகின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நல்ல கனமான நூல் (Coaser count) போர்வைக்கும், மெல்லிசான நூல் (finer count) மேலாடைக்கும் பயன்படுத்தப்படுகிறது.

**நூலின் எண்ணிக்கை**

நூல் எண்ணிக்கைகளில் பலவிதங்கள் உண்டு. ஆனாலும் அதிகமாகப் புழக்கத்தில் உள்ள ஆங்கில எண்ணிக்கை (English count) முறையையே நாம் எடுத்துக்கொள்வோம்.

**ஆங்கில எண்ணிக்கை**

இந்த வகை கவுன்ட் முறையில் பொதுவான நூலின் நீளம் 'யார்ட்' (கஜம்) என்ற அளவையில்தான் (1 மீட்டர் = 1.09 யார்ட் கஜம்) அளக்கப்படுகிறது. அதேபோல் நூலின் எடை பவுன்ட் (pound) என்னும் அளவையில் தான் குறிப்பிடப்படுகிறது. (1 கிலோ கிராம் = 2.2 பவுன்ட்)

ஆக, ஒரு பவுன்ட் நூலை எடுத்து எடை போட்டு, அதில் எத்தனை 840 யார்ட். நீளமுள்ள நூல்கள் இருக்கிறதோ அதுவே அந்நூலின் கவுன்ட் (எண்ணிக்கை).

இன்னும் விரிவாகச் சொன்னால், 10 என்பது ஒரு நூலின் கவுன்ட் (எண்ணிக்கை) என்றால் அதே நூலை ஒரு பவுன்ட் எடுத்து நீளத்தை அளந்தோமானால் மொத்த நீளம் 8400 யார்ட்ஸ் (yards-கஜம்) என்பதாம்.

பொட்டல்புதூர் கிராமத்தில் இருவகையான நெசவுத்தொழில்கள் பிரசித்திப்பெற்றவை.

**ஒன்று : கைத்தறி ஆடைகள் நெய்தல்**

கைத்தறி நெசவுத் தொழில் ஒரு குறிப்பிட்ட (முஸ்லீம்) சமுதாயத்தின் குடும்பத் தொழிலாகவே இருக்கும். ஆண் பெண் மற்றும் சிறுவர், சிறுமியர் ஆகிய குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் கைத்தறி நெசவுத் தொழிலுக்கான தங்களது பங்களிப்பைச் செலுத்துவார்கள்.

இக்கிராமத்தில் வாழும் முஸ்லீம் சமுதாயத்தில் 60 சதவீதம் வரை கைத்தறி நெசவுத் தொழிலிலேயே தங்கள் வாழ்வாதாரத் தேவைகளைத் தேடிக்கொண்டார்கள். அதில் தன்னிறைவும் பெற்றார்கள். ஒரு வீட்டிற்கு இரண்டு கைத்தறிகள் பொருத்தப்பட்டிருக்கும். முஸ்லீம்கள் வசிக்கும் தெருக்களுக்குள் பகலில் நடந்தால் தெருவின் இறுதிவரை கைத்தறிகளின்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இயக்கத்தின் சல்லட் - புல்லட் என்ற ரீங்காரச் சத்தத்தைத் தொடர்ந்து கேட்டுக்கொண்டே நடக்கலாம்.

வேஷ்டி, கைலி, துண்டு, சேலை மற்றும் இரண்டாம், மூன்றாம் தர பட்டாடைகளும் கைத்தறியில் நெய்து ஆடைகள் ஆக்கப்படும். பொட்டல்புதூர் கிராமத்தில் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு கைத்தறி ஆடைகளின் நெசவுத் தொழில் மிக ஓங்கி இருந்தது. நவீன இயந்திரத்தறி ஆடைகளின் வரவுக்கு முன்பு கைத்தறி ஆடைகளுக்கு நல்ல வரவேற்பும் இருந்தது. (இதை விட்டால் வேறு வழியில்லை).

கம்ப்யூட்டர், கிராபிக்ஸ் என ஆடைகளில் நவீனங்கள் புகுந்த பின் கைத்தறி ஆடைகளின் உற்பத்தி இருந்த அளவிற்கு விற்பனையில் பெரும் தேக்கம் ஏற்பட்டது. விளைவு, கைத்தறி நெசவைக் கைவிடும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு ஒவ்வொரு குடும்பமும் கைத்தறி உழைப்பிற்கு முழுக்குப் போட்டு வேறு தொழிலுக்கு மாறிக் கொண்டார்கள்.



ஆயினும் பொட்டல்புதூர் கிராமத்தில் இன்றும் ஒரு சில கைத்தறிகளின் சத்தம் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது. பல தலைமுறையாகச் செய்து வந்த கைத்தறித் தொழிலைக் கைவிட மனமில்லாமலும், வேறுதொழில் ஏதும் தெரியாது என்பதாலும் முதுமையான நெசவாளிகள் சிலர் இன்னும் கைத்தறி யில் உழைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

என்னதான் ஆடைகளில் நவீனங்கள் புகுந்து மக்களை ஆக்கிரமித்தாலும், கைத்தறி ஆடைகளை விரும்பும் மக்களும் இருக்கிறார்கள் என்பதையும் மறுக்க முடியாது.

**இரண்டு : கைத்தறிப்பாய்கள் நெய்தல்**

ஆடைகள் நெய்தல், பாய்கள் நெய்தல் இவ்விரண்டு தொழிலும் ஒரே குடும்பத்தில் செய்யப்படுவதில்லை. கைத்தறி ஆடைகள் நெய்யும் குடும்பத்தில் பாய்கள் நெய்வதற்கான கைத்தறி அமைக்கப்படுவதில்லை. கைத்தறிப் பாய்கள் நெய்யும் குடும்பத்தில் ஆடைகள் நெய்வதற்கான கைத்தறி பொருத்தப்படு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வதில்லை. இரண்டு நெசவுத் தொழிலிலும் ஒரு குடும்பம் ஈடுபட்டுக் குழப்பிக் கொள்வதில்லை. இருவேறுபட்ட கைத்தறிகளை அமைப்பதற்கான இடவசதியை வீடு கொண்டிருக்கவில்லை.

கைத்தறி ஆடை நெசவு நலிந்தது போல் கைத்தறிப் பாய் நெசவும் சற்றுச் சரிந்து விழத்தான் செய்தது. முதல் தர, இரண்டாம் தர, மூன்றாம் தரப் பாய்கள் மற்றும் வண்ணக் கலரில் மணவறைப் பாய் என்று பாய்களின் நெசவுகள் நடந்த பொட்டல்புதூர் கிராமத்தில் சில பாய் நெய்யும் தறிகளைத் தவிர மற்றவைகள் கைவிடப்பட்டன. அதற்குப் பதிலாகப் பாய் கட்டும் சிறு தொழில் மேற்கொள்ளப்பட்டது.

**பணிமனையில் உருவானது**

**செயல்பாடுகள்**

- நெசவுத் தொழில்கள் தொடர்பான சொற்களைச் சேகரித்துச் சொல்லகராதி தயார் செய்க.
- 'ஒரு தொழில் அழிந்தால் மொழி அழியும்' – விவாதித்துக் குறிப்பு எழுதுங்கள்.

## ஆயத்த (ரெடிமேட்) வீடுகள்

ஒரு வீடு கட்ட எவ்வளவு காலம் பிடிக்கும்? நான்கு மாதத்தில் இருந்து ஆறுமாதம் வரை ஆகலாம். அதற்கும் மேலும் கூட காலம் பிடிக்கும். இந்தப் புதிய தொழில்நுட்பத்தை நீங்கள் பயன் படுத்தினால் ஒரு நாளில் நான்கு வீடு கட்டலாம் என்கின்றனர் கெவின் மூர். நியூசிலாந்தைச் சேர்ந்த கட்டிடப் பொறியாளரான இவர் இந்த ஆயத்த வீட்டுத் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தார்.

கட்டுமானத் துறையில் ஆகும் செலவுகளைக் கட்டுப்படுத்த ஒரு புதிய தொழில்நுட்பம் கொண்டு வர வேண்டும் என மூர் தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார். தனது பல ஆண்டு முயற்சிக்குப் பிறகு 1985 ஆம் ஆண்டு அவர் Insulated Precast Concrete panels களை உருவாக்கினார். இந்தப் பேனல்களின் மூலம் அவர் வீட்டையே ஆயத்தமாக உருவாக்க முடியும் என்பதைக் கண்டறிந்தார். இந்தத் தொழில்நுட்பத்திற்காக அவர் 1989 ஆம் ஆண்டு உரிமமும் பெற்றுள்ளார்.




Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இதன் மூலம் முழு வீட்டையும் தொழிற்சாலையிலேயே உருவாக்கிட முடியும். வீடு கட்டப்படும் இடத்தில் கொண்டு வந்து இறக்கினால் போதும்.

நியூசிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுவரும் இந்தத் தொழில்நுட்பம் இப்போது இந்தியாவிலும் பரவலாகி வருகிறது. ஆனால் இந்தத் தொழில் நுட்பம் தங்கும் விடுதிகள், சிறிய அறைகள் தொகுப்பு வீடுகளுக்கே பொருத்தமானதாக இருக்கும். பெங்களூரு வளர்ச்சி நிறுவனம் இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 12 ஏக்கர் நிலத்தில் 1520 தொகுப்பு வீடுகளைக் கட்டியுள்ளது.

இந்தத் தொழில் நுட்பம் மூலம் வீடு கட்டுவது சுவாரஸ்யமானதாக இருக்கிறது. வீட்டுக்கான தரை, ஜன்னல்கள், சமையல் அறை எல்லாமும் தொழிற் கூடத்திலேயே தயாரிக்கப்பட்டு விடுகின்றன. முழு வீட்டையும் கட்டுமானத் தலத்தில் வாகனங்கள் மூலம் கொண்டு இறக்கி வைத்தால் போதும்.



அறைகள் மட்டுமல்ல. மின்சார இணைப் புகள் குழாய் வேலைகளையும் தொழிற் கூடத்திலேயே முடித்துவிடுகிறார்கள். மாடிப்படிகளையும் தேவையான அளவுக் கேற்ப முன்பே தருவித்தால் அதையும் தொழிற்கூடத்திலேயே தயாரித்துகொண்டு வந்து விடுகிறார்கள்.

இந்த முறையில் பாரம்பரிய முறையில் உபயோகப்படுத்தப்படும் சுவர்களுக்குப் பதிலாகக் கன சதுரங்களை யூனிட்டுகளாகப் பிரித்துப் பயன்படுத்துகிறார்கள். உதாரணமாக, பெங்களூரு வளர்ச்சி நிறுவனத்திற்காக மேற்கொள்ளப்பட்ட வீட்டு வசதித் திட்டத்தில் ஒரு வீட்டை 240 சதுர அடிக்கு 160 சதுரடி என இரு யூனிட்டுகளாகப் பிரித்து வீடுகளை அமைத்ததாகச் சொல்கிறார். மூர். இவ்வாறாக 1520 வீடுகளும் கட்டுமான நிலத்திற்கு அருகே ஒரு தொழிற்கூடத்தில் உருவாக்கப்பட்டு எடுத்துவரப்பட்டன.

ஆயத்த வீடு என்பதால் அது பாரம்பாரியக் கட்டிடத்தை விட உறுதி குறைந்தது என நினைக்க வேண்டாம். இம்முறையில் உருவாக்கப்படும் தூண்கள் கான்கிரீட், கம்பிச் சட்டகங்கள்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கொண்டு உருவாக்கப்படுகின்றன. அதனால் இது பாரம்பரிய முறையைவிடவும் உறுதியானதாகவும் நீடித்து உழைக்கக் கூடியதாகவும் இருக்கும்.

மேலும் இந்தத் தூண்கள் அதிக எடையைத் தாங்கக் கூடியவை. பூகம்பம் அதிர்வுகளைத் தாங்கக்கூடிய வகையிலும் இதன் அமைப்பு இருக்கும். 95 சதவீத வேலைகள் தொழிற்கூடத் திலேயே முடிந்துவிடும் என்பதால் பொருட்செலவு பாரம்பரிய முறையைக் காட்டிலும் மிகவும் குறைவு. வெளிப்புறச் சுவர்கள் 4 அங்குல கனமும், உட்புறச் சுவர்கள் 3 அங்குல கனமும் கொண்டவை.

இந்த வகை வீடுகள் சமூகத்தின் மிகப் பின் தங்கியுள்ளவர்களுக்குப் பொருத்தமானதாக இருக்கும் எனச் சொல்லப்படுகிறது. ஆனால் மூர், இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வசதியான வீடுகளும் கட்ட முடியும் என்கிறார். ஆஸ்திரேலியாவில் சாலையோர உணவு விடுதிகளை இந்தத் தொழில்நுட்பம் கொண்டு உருவாக்கியுள்ளனர். நியூசிலாந்தில் வீட்டு வசதிக் குடியிருப்பு களையும் உருவாக்கியுள்ளனர்.

ரெடிமேட் தொழில்நுட்பம் மூலம் மிக விரைவாக வீடுகளைக் கட்டிவிட முடியும். மேலும் பாரம்பரியக் கட்டிடக் கலையுடன் ஒப்பிடும்போது பொருட்செலவும் மிகக் குறைவு. இப்போது இந்தத் தொழில்நுட்பத்தால் நாள் ஒன்றுக்கு நான்கு வீடுகளை உருவாக்கி வருகிறோம். எதிர்காலத்தில் இது 12 ஆக உயரலாம் என மூர் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

**– ஜெய்**

நன்றி : "தி இந்து" தமிழ் நாளிதழ்

**செயல்பாடுகள்**

- 'வீட்டைக் கட்டிப் பார் கல்யாணம் பண்ணிப் பார்' – இப்பழமொழி உணர்த்தும் கருத்தைத் தொழிலாளர் நிலைமையுடன் ஒப்பிட்டுக் கட்டுரை எழுதுங்கள்.
- தொழிலில் நவீன தொழில்நுட்பம் அமைவதால் ஏற்படும் நன்மை தீமைகள் குறித்துக் கலந்துரையாடி, குறிப்புகள் எழுதுங்கள்.
- தொழிலாளர் நிலை குறித்து நாடகம் எழுதுங்கள், வகுப்பில் / பள்ளிக்கூடத்தில் நடித்துக் காட்டுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com





## ஓய்வு

பாடுபடுவனுக்கும் ஓய்வு நேரம் வேண்டும் என்ற கருத்தினை இப்போது ஏற்றுக்கொண்டுள்ளனர். முன்பு ஓய்வு நேரம் என்பது உயர்நிலையினருக்கு மட்டுமே கிடைத்திடத்தக்கது. கிடைத்திட வேண்டியது என்று கருதிக்கொண்டிருந்தனர். அதனை ஒரு தத்துவம் என்று கூடக் கூறிவந்தனர்.

ஓய்வு நேரம் கிடைத்தால் தான் உழைத்து அலுத்தவன், தனது அலுப்பைப் போக்கிக் கொள்ள முடியும். மறுபடியும் பாடுபட, அலுப்புப் போக வேண்டும்.

வேலையே இல்லை, நாளெல்லாம் வாளாவிருக்கிறான். ஓய்வு அல்ல அது, பயன்படுத்தப்படவில்லை, கொடுமை!

வேலை இருக்கிறது - வேலை செய்யாமல் வாளாவிருக்கிறான் - ஓய்வு அல்ல - சோம்பல்!



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வேலை இருக்கிறது – வேலை செய்த அலுப்பினால் வேலை நேரம் முடிந்ததும், கட்டைபோலக் கீழே விழுகிறான் – தூங்கிவிடுகிறான் – ஓய்வு அல்ல இதுவும் சோர்வு.

ஒரு வேலையும் செய்ய வேண்டிய நிலையில் இல்லை. எப்போதும் சும்மா இருக்கிறான். இதுவும் ஓய்வு அல்ல, இது ஓய்யாரம்!

ஓய்வு என்பது ஒரு உரிமை, வேலை செய்தவன் தன் அலுப்பைப் போக்கிக் கொண்டு, இழந்த உற்சாகத்தை மீண்டும் பெற்று, மறுபடியும் வேலையிலே ஈடுபடுவதற்கான மாமருந்து.

ஓய்வு நேரம் என்பது வேலை செய்யாதிருக்கும் வேளை என்று மட்டும் பொருள் கொள்ளக் கூடியதல்ல. ஒருவன் தன் வாழ்க்கைத் தேவையான வசதியைக் கொள்வதிலே ஈடுபடுவதே வேலை. அந்த வேலை முடிந்த பிறகு அவன் மனம் ஒரு நிம்மதி பெற்றுத் தெம்பு பெற வேண்டும். அந்த வாய்ப்பைப் பெற்றுத் தருவதே ஓய்வு. காலை முதல் மாலை வரை பாடுபட்ட தொழிலாளி. இரவு பிறந்ததும் அயர்ந்து தூங்குகிறான். அதனால் அவனுடைய உடல் அலுப்பு நிச்சயம் குறையும். அதனால் உள்ளத்திலே ஏறிவிட்டுள்ள பாரம், சோர்வு– குறையுமா? குறைந்திடவழி இல்லை. ஏனெனில் அதற்கான வழி தேடிடவில்லை அவன், செயலற்றுக் கிடக்கிறான். தூக்கம், ஆனால் ஓய்வு என்பது தூக்கத்தால் உடல் அலுப்பைப் போக்கிக் கொள்வது மட்டுமல்ல. உள்ளத்திலே உள்ள சோர்வினைப் போக்கிக் கொள்ள அவன் உலவுவது, உரையாடுவது, பாடுவது, ஆடுவது, ஆடல் காண்பது, பாடல் கேட்பது, குழந்தைகளுடன் கொஞ்சுவது, இவ்விதமான ஏதாவதோர் செயலில் ஈடுபாடு கொண்டாக வேண்டும்.

வேலை செய்த அலுப்புப்போக அவன் தூங்கி எழுந்திருப்பது பல மணி நேரம் ஓடிக்கொண்டிருந்த இயந்திரத்தைச் சில மணி நேரம் நிறுத்திவைப்பது போன்றதே.

தூக்கத்தால் மட்டும் பாட்டாளியின் மனத்திலே உள்ள சோர்வு போய்விடுவதில்லை.

சிறிது நேரம் உறங்கிக் கிடப்பதால் மட்டும் இயந்திரம் வேலை செய்ததால் ஏற்பட்ட தேய்வு இருக்கிறதே, அது போய்விடாது. புது வலிவு வந்திடாது.

உழைப்பினால் ஏற்பட்டுவிடும் உள்ளத்துத் தேய்வு இருக்கிறதே, அதனைத் தூக்கத்தினால் மட்டும் போக்கிட முடியாது – மனத்துக்குத் தெம்பு தரத்தக்க விதமாக அவன் சிறிது நேரத்தைச் செலவிட வேண்டும்; ஓய்வாக!



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

உழைத்த அலுப்பினால் வீடு வந்ததும் படுத்து உறங்கிவிடும் பாட்டாளி விடிந்ததும் மீண்டும் இயந்திரமாகிறான். மனத்திலே தேய்வு வளர்ந்தபடி இருக்கிறது. குறைந்திட வழி இல்லை. அங்ஙனமின்றி உழைத்தலுத்தவன், உடனடியாக உறக்கத்தை மட்டுமே தேடிக் கொள்ளாமல், நண்பர்களுடன் பேசி மகிழ்வது, குழந்தைகளுடன் விளையாடுவது என்ற ஏதேனும் ஒருபொழுது போக்கிலே ஈடுபட்டால், உடல் அலுப்பு மட்டுமல்ல உள்ளத்திலே மூண்டுவிட்ட அலுப்பும் குறையும். அப்போது அவன் புதிய உற்சாகம் பெறுகிறான்.

மாலை ஆறுமணி வரையில் மாடாக உழைத்தாச்சே, பேசாம போய்ப் படுத்துத் தூங்குவதை விட்டுவிட்டு, விடிய விடியக் கண்விழித்துக் கொண்டு தெருக்கூத்துப் பார்த்துவிட்டு வந்தா, உடம்பு என்னத்துக்கு ஆகும்? என்று கனிவுடன்தான் கேட்கிறாள் மனைவி. ஆனால் பகலெல்லாம் பாடுபட்டவன், இரவு கண் விழிப்பது உடலுக்குச் சிறிதளவு கெடுதலைக்கூடத் தரக்கூடும் என்றாலும், கூத்துப் பார்த்ததில், கண்ணுக்கும் காதுக்கும் விருந்து பெற்றான், மகிழ்ச்சி பெற்றான். மற்றவர்கள் மகிழ்ந்திருக்கக் காண் கிறான். சிரித்தான், மற்றவர்கள் சிரித்திடக் கண்டான், இதிலே அவனுக்குக் களிப்பு இருக்கிறதே, அது அவனுடைய மனத்திலே மூண்டுகிடந்த சோர்வுச் சுமையைக் குறைத்துவிட்டது. மனம் துள்ளிடுகிறது.



இதுதான் தம்பி ஓய்வு. இழுத்துப் போர்த்துக்கொண்டு படுத்துத் தூங்குவது மட்டும் அல்ல.

கூத்துப் பார்ப்பதிலேதான் இந்த விருந்து கிடைத்திடும் என்பதில்லை. இரைச்சல் மிகுந்த தொழிற்சாலையையும் அதிலே பரபரப்புடன் சுழன்று கொண்டிருக்கும் ஆட்களையும் பார்த்துப் பார்த்துச் சலித்துப்போன கண்களுக்கு, ஒரு சிங்கார ஓடை, அதிலே பூத்துக் கிடக்கும் மலர், கரையினிலே ஓங்கி வளர்ந்த மரம், அதிலே குலுங்கிடும் கனி, அந்தக் கனியைக் கொத்திடும் கிளி, அதனை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் அணில்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இத்தகைய காட்சியைக் கண்டால், கண்ணும் கருத்தும் விருந்து பெறும், சோர்வு பெருமளவு நீங்கிடும்.

கவலை தோய்ந்த முகத்துடன் தொழிற்கூடத்தில் தன்னோடு இருந்திடும் பாட்டாளிகளைக் கண்டு அவன் மனத்திலே குடிகொண்டு விடுகிறதே ஒரு கவலை, அது வெண்ணிலவு ஒரு மேகத்திலிருந்து மற்றொன்றுக்கு ஊர்ந்து செல்வது போன்ற காட்சியைக் கண்டால் சிறிதளவேனும் கலையத்தான் செய்யும். காது குடைந்திடும் ஒலியைப் பொறிகளிலிருந்து கேட்டதால், உள்ளத்துக்கு ஓர் அலுப்பு, அந்த அலுப்பு ஒரு தெம்மாங்கு கேட்டிடப் பெருமளவு குறைந்துபோகும். இந்தவிதமான வாய்ப்புகளைப் பெற்றிடுவதே ஓய்வு! வேலை செய்யாமலிருப்பது, அல்லது தூங்கிக்கொண்டிருப்பது அல்ல.

வயிற்றுக்காகப் பாடுபடுவதைவிடக் கடினமானது தான் மலை உச்சி ஏறுவது, ஆற்றிலே நீந்துவது போன்றவை. ஆனால் அவை மனத்திலே உள்ள சோர்வைப் போக்கிடும் மாமருந்து. மிக மிகத் தேவை.

வேறு வேலையே செய்யாமல், பொழுதினை ஓட்டிட வேட்டையாடுவது ஓய்வு அல்ல; வேலை செய்த பிறகு மனத்துக்குத் தெம்பு பெறப் புறாவினைப் பறக்கவிட்டுப்பார்த்துப் பார்த்துப் பூரித்துப்போகிறானே அது ஓய்வு!

உழைத்துத்தான் வாழ வேண்டும் - வாழ்வு உரிமை; கடமை! ஆனால் உழைத்தும் வாழ முடியவில்லை என்றால், அது சமூகத்தில் உள்ள கொடுமையைக் காட்டுகிறது. வாழ்வதற்கு உழைக்கிறான். பிறருக்கு வாழ்வு அளிக்கவும் உழைக்கிறான். ஆனால் அந்த உழைப்பே அவனை உருக்குலையச் செய்து வாழ்வை நுகரவே முடியாதபடி ஆக்கிவிடுமானால், அவன் உழைத்து என்ன பயன்?

தண்டவாளத்தின் மீது சென்றிடும் இரயில் போகும்போதே தண்டவாளத்தையே தேய்த்துவிடுமானால் பிறகு பயணம் எப்படி நடந்திடும்? அதுபோலவே உழைத்து உருக்குலைந்து போனால் வாழ்க்கையிலே இன்பம் பெற முடியாத நிலையினால் உழைப்பு அவனைப் பொறுத்தமட்டில் உயிர் குடிக்கும் நஞ்சாகியது, உழைத்த பிறகு அவன் வாழ்வை அனுபவிக்கும் நிலை யினதாகவும் இருந்திட வேண்டும்.

ஓவியத்தைத் தீட்டி முடித்ததும் அவன் கண்கள் அவிந்து



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

போய்விடும் என்றோர் விபரீத முறை இருப்பின் ஓவியக் கலையிலே எவர் ஈடுபடுவர்?

உழைத்தோம்; பிழைத்தோம்; உறுதிப்பாடும் இல்லையெனில் உழைத்திடும் உள்ளம் எங்ஙனம் ஏற்படமுடியும்?

உழைப்பு, தம்பி உள்ளத்தையும் உடலையும் ஒரே அடியாக முறித்துவிடக் கூடியதாக இருந்துவிடின், உலகப் பெருங்கதை சோகச் சிறுகதையாகப் போகும், அல்லது பயங்கரப் படுகொலைக் கதையாக முடிந்திடும்.

உழைத்ததால் ஏற்பட்ட உடற்சோர்வு போக, உண்டி, உறையுள், உறக்கம் தேவை; உழைத்ததால் ஏற்பட்ட உள்ளச்சோர்வுபோக ஓய்வு, பொழுதுபோக்குத் தேவை.

உழைத்ததால் செலவானது போக, ஓய்வினை அனுபவிக்கத்தக்க அளவுக்கு வலிவு மிச்சம் கைவசம் இருக்க வேண்டும். வாழ, வழி தேடுவதிலேயே காலம் முழுவதும், வலிவு முழுவதும் செலவாகிப் போய்விடுமானால், உருக்குலைவு ஏற்பட்டு விடுமானால், தோகை விரித்ததும் செத்துவிடும் மயிலாவான். அரும்பு மலர்ந்ததும் அறுந்துபடும் கொடியரவான்; பயன் காணான். பயனளித்திடவும் மாட்டான்.

ஆகவே பாட்டாளி ஓய்வு பெறுவது, சமூக நீதியில் ஒன்று; அடிப்படை நீதி

ஓய்வு நேரம் – ஓய்வின் தன்மை ஆகியவற்றினைக் கொண்டு, ஒரு சமூகத்தின் நிலையை மதிப்பிடு கிறார்கள் அறிவாளர். பெரும்பாலான மக்களுக்குக் கிடைக்கும் ஓய்வு இருக்கிறதே, அதனை நாகரிகத்தின் அளவுகோலாகக் கொள்கிறார்கள்.

நல்லறிவாளர்கள்.ஓய்வுநேரம் ஒவ்வோர் நாட்டில் ஒவ்வோர் காலத்தில் ஆங்கு அமைந்திருந்த இயல்புக்கு ஏற்றவிதமாக வடிவமெடுத்திருந்தது.

வெற்றிமேல் வெற்றி பெற்றிட வீரப்போர் புரிந்து வந்த ரோம் நாட்டவர் உடற்கட்டுள்ளவர்கள். ஒருவருடன் ஒருவர் மற்போர்,

**கரிப்பு மணிகள்**

1979ஆம் ஆண்டில் இந்நாவல் வெளியாகியுள்ளது. இந்நாவலை எழுதும் முன் உப்பளங்களுக்கு நேரடியாகச் சென்று உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறைகளைக் கண்டறிந்தவர் நாவல் ஆசிரியர் ராஜம் கிருஷ்ணன்.

புதிய மாறுதல்களை ஏற்று, இன்று தமிழ்நாட்டில் நிகழும் உப்புத்தொழில் நாவலாசிரியர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. உப்புத்தொழிலின் பின்புலத்தில் இத்தொழிலில் ஈடுபடுவோரின் வாழ்வியலைச் சித்தரிக்கும் நாவல்கள் இரண்டு வெளிவந்துள்ளன. முதலாவது நாவல் ராஜம் கிருஷ்ணனாலும் இரண்டாவது நாவல் ஸ்ரீதர கணேசனாலும் எழுதப்பட்டுள்ளது. இவ்விரண்டு நாவல்களுமே தூத்துக்குடியிலும் அதன் சுற்றுவட்டாரங்களிலும் நிகழும் உப்புத்தொழிலையும் அதில் ஈடுபடுவோரின் வாழ்க்கையையும் மையமாகக் கொண்டுள்ளன. இவற்றுள் முதலாவதாக வெளிவந்த நாவல் கரிப்புமணிகள் ஆகும். இவர் விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை நிலையினை அவர்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்று நேரில் கண்டு நாவல் படைத்தவர். குறிஞ்சித்தேன், மலர்கள், மலையருவி ஆகியன இவரது சில நாவல்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

வாட்போர் செய்து ஆற்றலைக் காட்டிடும் வீர விளையாட்டுகளைக் காண்பதிலே மட்டுமல்ல, வீரர்கள் மிருகங்களுடன் போரிட்டு அவைகளைக் கொல்வது அல்லது அவைகளால் கொல்லப்படுவது என்ற இரக்கமற்ற விளையாட்டுகளைக் காண்பதிலே உல்லாச மளித்திடும் ஓய்வாகக் கருதினர்.

அறிவுச் செல்வத்தைப் பெற்றுத் திகழ்ந்த கிரேக்கர்கள் ஓய்வு நேரத்தைக் காப்பியம் என்ற தரம்பெற்ற புதிய நாடகங்களைக் காண்பதிலே கருத்துப் பெறுவதிலே ஓய்வு நேரத்தைச் செலவிட்டனர்.

முரட்டுக் காளையுடன் போரிடுவது ஸ்பெயின் நாட்டவர்க்கு வீர விளையாட்டு; ஓய்வு நேரம் அதற்கே பெரும்பகுதி செலவிடப்பட்டது.



பழந்தமிழர் தமது ஓய்வு நேரத்தில் ஏறு தழுவுதல், மற்போர் போன்ற வீரவிளையாட்டிலே செலவிட்டனர் என்று அறிகிறோம்.

கோழிச்சண்டை, கரடிச்சண்டை இவைகளை நடத்தி ஓய்வு நேரத்தில் பொழுது போக்கினர் இங்கிலாந்து நாட்டவர், மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு வரையில்.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவதில் ஒரு நல்ல முறை அமைக்காவிட்டால் களியாட்டம் வெறியாட்டம் வீணாட்டமாகி, புதிய தெம்பு பிறப்பதற்குப் பதிலாக மனத்திலே போதையும், காட்டுணர்ச்சியும் கொந்தளிக்கச் செய்துவிடும்.

மேனாடுகள் பலவற்றிலே ஓய்வு நேரத்துக்காக என்று அமைக்கப்பட்டுள்ள நாட்டியக் கூடங்களும், சூதாட்டச் சாலைகளும் நல்லியல்பை வளர்ப்பனவாக உள்ளன என்ற உணர்வு இப்போது வலுப்பெற்று வந்துகொண்டிருக்கிறது.

ஆனால் இவைகளிலே ஈடுபடுவோர் பெரும்பாலும் உல்லாசம் தேடிடும் பணம் படைத்தோரே - பெரும்பாலான நடுத்தர நிலையினர், காற்பந்து, கிரிக்கெட், ஆக்கி போன்ற விளை யாட்டுக்களைக் காண்பதிலேயே பெரு விருப்பம் கொண்டுள்ளனர். குத்துச்சண்டை கண்டு களிப்பதனை, எழுச்சி தரத்தக்க பொழுது போக்காகக் கொண்டுள்ள அமெரிக்காவில் இதற்கெனப் பெரும்பணம் செலவிடப்பட்டு வருகிறது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com


சென்ற திங்கள் 'க்ளே' எனும் குத்துச்சண்டை வீரன், தன்னுடன் போட்டிக்கு நின்ற விஸ்டன் என்பானை ஒரே ஒரு குத்து கொடுத்துக் கீழே வீழ்த்தினான். விழுந்தவன் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுந்திருக்கவில்லை. எனவே க்ளே வெற்றிவீரன் என்ற விருது அளிக்கப்பெற்றான். இலட்சக்கணக்கான டாலர்கள் குவிந்தன. இந்தக் குத்துச் சண்டையின்போது, ஒரே விநாடி! ஒரே குத்து! குத்துச் சண்டை முடிந்து க்ளே பெரும்பொருள் பெற்றான் பரிசுத் தொகையாக. க்ளே விஸ்டன் இருவருமே நீக்ரோக்கள்.

இவைபோன்ற விளையாட்டுகள், காண்போருக்குக் களிப்பூட்டும்; வீர உணர்ச்சி தரும், அய்யமில்லை. ஆனால் புதிய கருத்துத் தந்திடுமா? கருத்துக்கு விருந்தாக என்ற கேள்வி பலமாக எழுந்து விட்டிருக்கிறது.

மற்ற நாடுகளிலே, ஓய்வு நேரத்தை எந்த வகையிலே செலவிட்டால், கருத்துக்கு இன்பம் கிடைக்கும் என்பது பற்றிய திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. இங்கோ! தம்பி ஓய்வுநேரம் என்பது வாழ்வின் இயல்பை, தொழிலின் இயல்பைத் தரமுள்ளதாக்கிடும் என்ற உணர்வே பெறவில்லை. ஓய்வு என்பது வேலை செய்யாத நேரம் என்ற அளவிலேதான் அதற்கான இலக்கணம் இருந்து வருகிறது. ஓய்வென்பது கருத்துக்கு விருந்து பெறும் ஒரு வாய்ப்பு என்ற நிலை அமையவில்லை, அமைத்திடுதல் வேண்டும்.

**– பேரறிஞர் அண்ணா**

### பேரறிஞர் அண்ணா



இவர் முந்நாள் தமிழக முதல்வர். தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக இருந்தவர். இவர் நாடகத்தின் வாயிலாகப் பெயர் பெற்றுச் சிறந்து பேச்சாளராகவும் நாடக ஆசிரியராகவும் விளங்கியவர். சந்திரோதயம், வேலைக்காரி, நீதிதேவன் மயக்கம், நல்லதம்பி என்பது இவரது நாடகங்களில் சில.

### செயல்பாடுகள்

- ஓய்வு என்னும் கட்டுரை குறித்துக் கலந்துரையாடி, உங்கள் கருத்துகளைக் குறிப்புகளாக வெளியிடுங்கள்.
- உழைப்பாளர் இல்லாமல் போனால் ஏற்படும் விளைவுகள் குறித்துத் தலையங்கம் எழுதுங்கள்.
- ஓய்வு நேரத்தை எவ்வாறெல்லாம் பயனுள்ள வழிகளில் செலவிடலாம். உங்கள் கருத்துகளைத் துண்டு அறிக்கையாக எழுதி வெளியிடுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## உழைப்போம் உயர்வோம்

நிலவு தன் வெண்ணிறக் கதிர்களால் உலகை ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கிறது. கவிஞர் ஒருவர் வானத்தை நோக்குகின்றார். சிறிது நேரத்திற்கெல்லாம் தன்னை மறந்து நிலவுடன் ஒன்றிவிடுகின்றார். கவிதை பிறக்கின்றது. கவிஞரின் அடிவானத்தில் ஆழ்ந்து கிடந்த கருத்துகள் உணர்வு பெற்றுப் பீறிட்டுக் கிளம்புகின்றன. ‘ஏ நிலவே!’ உன்னைக் காணுகின்ற போதில் என் உள்ளத்தில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் அலைமோதுகின்றன. அவ்வெண்ணங்களை எல்லாம் வடித்து தர வார்த்தைகள் கிடைக்கவில்லை. குளிர் நிலவே! ஒளி முத்தே! ஓர் உவமை கொண்டு உன் அழகை அளவிட முற்படுகிறேன். அதுவும் ஒரு முயற்சிதான். முழுமையான அளவாகுமென்று நான் நம்பவில்லை. என்னருமைத் தமிழ் மக்கள் மாடாய் உழைக்கிறார்கள். உழைத்துழைத்து ஓடாய் உருக்குலைந்து போகிறார்கள். ஆனாலும் உண்ணவும் உடுக்கவும் போதிய உணவும் உடையுமின்றி நித்திய தரித்திரராய் இருக்கிறார்கள். உழைப்பின் பயனை அவர்கள் அடையவில்லை.

பஞ்சமோ பஞ்சம் என்று பரிதவித்துத் துஞ்சி மடிகின்ற அலையே அவர்களது நிரந்தர வாழ்வாகி, வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்ளச் சிறிது கூழ் கிடைத்தாலும் போதும். பழம் இருக்கையேனும் இருக்காதா என்ற நினைப்போடு தங்கள் சோற்றுப் பானையை நெருங்குகின்ற நேரத்தில், பானை நிறைய வெண்பொங்கல் இருக்குமாயின் அவர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவுண்டோ? அதுபோல நானும் உன்னைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைகின்றேன். ஆனாலும் வெண்சோற்றைக் கண்ட அவர்கள் மகிழ்ச்சி பெரியதா?, உன்னைக் கண்ட என் மகிழ்ச்சி பெரியதா? என்ற முடிவுக்கு வர முடியவில்லை என்பது போல ‘இன்பந்தானோ’ எனப் பாடி மகிழ்கின்றார் கவிஞர்.

**உன்னைக்காணும் போதினிலே என்னு ளத்தில்**
**ஊறிவரும் உணர்ச்சிதனை எழுது தற்கு**
**நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவ தில்லை**
**நித்திய தரித்திரராய் உழைத்து ழைத்துத்**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்**
**சிறிதுகூழ் தேடுங்கால், பானை யாரக்**
**கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்**
**கவின்நிலவே உனைக்காணும் இன்பந்தானோ?**

(பாரதிதாசன்)

கவிதை சுவையாக இருக்கிறது என்பதைக் காட்டிலும் அவர் ஒப்புமைக்காக எடுத்துக்கொண்ட காட்சி சிந்தனை அற்றோரையும் சிந்திக்கத் தூண்டுவதாக உள்ளது எனலாம். உழைத்து உழைத்து நித்திய தரித்திரராய் வாழ்வதேன்? அவரவர் உழைப்பு அவரவர்கட்குப் பயன்படாமற் போவதேன்? அவர்கள் வயிறு பசியாறாத வயிறாக இருப்பதேன்? என்ற கேள்விகளை எழுப்புகின்றன. இருபதாம் நூற்றாண்டில் பாடிய கவிஞனுக்கு இருபது நூற்றாண்டுகட்கு முன்பு பாடிய காவலன் ஒருவன் மாற்றம் தருகிறான். ஆம்! பின்னர் ஒரு கேள்வி எழும் என்னும் முன்னரே ஒரு விளக்கம் எழுதிவிட்டுச் சென்றுள்ளான்.

பச்சைப் பசேல் எனத் தோன்றிய நெல்வயல்கள் விளைந்துவிட்டதால் இன்று பொன்னிறமாகத் தோன்றுகின்றன. கதிர்கள் தலை சாய்ந்து வரப்பை அளவளாவிக் கிடக்கின்றன. யாருமில்லா வேளை, எலி ஒன்று சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக் கிறது விளைந்த கதிர்களை அறுத்துக்கொண்டு சென்று தன் வலையில் செறித்து வைத்துக் கொண்டிருக்கிறது. உழவன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்த உழைப்பாயிற்றே! அவன் விளைவித்ததை நாம் திருடலாமா என்று எலி எண்ணவில்லை. நாம் உழைக்காமலேயே பிறர் உழைப்பை உண்டு வாழலாமா என்றும் எண்ண வில்லை. நெல் அறுத்து வயல் உழுதால் தன் வளையோடு நெல்லும் போய் விடும் என்ற எண்ணமும் அதற்கில்லை. பிறர் உழைப்பிலே உண்டு வாழ்வோம் என்ற கருத்தையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்கின்ற எலி போன்ற மனிதர்களும் உலகில் பலர் இருக் கிறார்கள். அவர்களால்தான் உழைப்பவர்கள் தாங்கள் உழைத்த பயனை அடைய முடிவதில்லை. ஆதலின், அத்தகையவர்களை,

### தொல்காப்பியம்

இன்றுவரை தமிழுக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான நூல்களுள் முதல் நூல் தொல்காப்பியம். இது ஓர் இலக்கணநூல். தமிழ் மொழியின் அமைப்பையும், தமிழ் இலக்கியங்களின் இயல்பையும் இந்நூல் எடுத்துரைக்கின்றது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று அதிகாரங்களாக அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் தொல்காப்பியர். சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்நூல் எழுதப்பட்டிருக் கலாம் எனக் கருதப்படுகின்றது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

உடனிருந்தே பிறர் உழைப்பை உண்ணும் நயவஞ்சகர்களை, விட்டு விலகவேண்டும்; அவர்கள் கூட்டுறவு ஆகாது என்று அறிவுறுத்துகிறான் அக்காவலன்.

**விளைபதச் சீறிடம் நோக்கி வளைகதிர்**
**வல்சி கொண்டுஅளை மல்க வைக்கும்**
**எலிமுயன்று அனைய ராகி உள்ளதம்**
**வளன்வலி உறுக்கும் உ(ள்)ளம்இ லாளரொடு**
**இயைந்த கேண்மை இல்லாகி யரோ**

(புறம்: 190)

உழைப்பின் மூலமே பயன்பெற வேண்டும்; உழைப்பே செல்வம் உழைப்பினால் கிடைக்கும் பலனே நிலையானது; இதுவே என்றும் உண்மை.

**–இல. செ. கந்தசாமி**

**இல. செ. கந்தசாமி**
கோவையில் உள்ள வேளாண் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றினார். தமிழர் வேளாண் மரபுகள், தமிழக வேளாண் பழமொழிகள், தமிழக வேளாண்மை அன்றும் இன்றும், ஒ அன்றில் பறவைகளே போன்ற நூல்களின் ஆசிரியர்.

**செயல்பாடுகள்**

- நிலவைப் பார்த்த கவிஞர் அதனை உழைப்பாளர்களின் நிலையுடன் ஒப்பிட்டுக் கூறுவதன் சமூகச்சூழலை விளக்கி எழுதுங்கள்.
- உழைப்புச் சுரண்டல் குறித்துக் கருத்தரங்கக் கட்டுரை தயார்செய்யுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அலகு 3

# மனிதகுல மேம்பாடு

நமது பாரதத் தாய்த்திரு நாடு பல்வேறு ஜாதி, மத, மொழி சார்ந்த மக்களை உள்ளடக்கியது. ஒவ்வொருவரும் அவரவர் பண்பாட்டையும் பழக்கவழக்கங்களையும் கடைப்பிடிப்பினும், மற்றவர்தம் கொள் கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டுவது இன்றியமையாதது. மனிதம் என்னும் உணர்வும், உலகம் என்னும் எண்ணமும், தாய்நாடு என்னும் சிந்தையும் மக்களை ஒன்றுபடுத்துகின்றன. மனிதநேயத்தையும் ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் வகையில் அன்பின் விதைகள், சமதர்மச் சிந்தனை, யாவரும்கேளிர் என்னும் கருத்தலகுகள் இவ்வலகில் உட்படுத்தப்பட்டுள்ளன.

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- பாடப்பகுதி குறிப்பிடும் வாழ்க்கை விழுமியங்களைப் பாராட்டியும் மேம்படுத்தியும் எழுதுகிறார்கள்.
- மனிதகுல மேம்பாட்டிற்காக உழைத்தவர்கள் பற்றிய செய்திகளைச் சேகரிக்கிறார்கள்; கட்டுரை எழுதுகிறார்கள்.
- பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும் மனித நேயச் செய்திகளைச் சேகரிக்கிறார்கள்.
- தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை அறிகிறார்கள்; குறிப்பு எழுதுகிறார்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

௭

# அன்பின் விதைகள்



## அன்பின் விதைகள்

**கை**யில் ஒரு முகவரிச் சீட்டை வைத்துக் கொண்டு நடுத்தர வயதுப் பெண் ஒருத்தியும் பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவனும் எனது தெருவில் யாரையோ தேடிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் யாரிடம் கேட்பது என்று குழப்பத்துடன் தெருவில் நின்றுகொண்டிருந்தார்கள். அருகில் இறங்கி யாருடைய முகவரி என்று பார்த்தபோது 'பூமிநாதன், நான்காவது தெரு' என்று மட்டுமிருந்தது வீட்டு எண் இல்லை.

'யார் பூமிநாதன்?' என்று யோசித்தபடியே, "அவர் என்ன வேலை செய்கிறார்?" என்று கேட்டேன். தங்களுக்குத் தெரியாது என்று அவர்கள் சொன்னார்கள். "எந்த ஊரிலிருந்து வந்தவர், எத்தனை வருடமாக இருக்கிறார்?" என்று கேட்ட எதற்கும் "தெரியாது" என்றே சொன்னார்கள்.

அருகிலிருந்த கடைகளில் விசாரித்தபோது அவர்களுக்கும் தெரியவில்லை. லாண்டரிக்காரர் மட்டும் யோசனை செய்துவிட்டு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

“நம்ம புதுப் பள்ளிக்கூட வாட்ச்மேன் இருக்காரே. அவரா இருக்குமா சார்?” என்றார்.

ஒருவேளை அவராகத்தான் இருக்கக்கூடும் போலிருந்தது. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாலர் பள்ளிக்கு அவர்களை அழைத்துக்கொண்டு போனபோது, வாட்ச்மேன் கேட் அருகே நின்றுகொண்டிருந்தார்.

ஐம்பது வயதைக் கடந்திருக்கும்; வெளிறிப்போன காக்கி உடுப்பு அணிந்திருந்தார். அவர்தான் பூமிநாதன் என்று தெரிந்தது. அவரைப் பலமுறை பார்த்திருக்கிறேன். இரவில் பாதி இருட்டில் கேட் அருகே உட்கார்ந்து கொண்டு எதையாவது வாசித்துக் கொண்டிருப்பார்.

அந்தப் பெண் ஒரு காகிதக்கட்டை விரித்து, அதிலிருந்து ஒரு பழைய தினசரி பேப்பரைக் காட்டியபடி, “என் கணவர் பெயர் கிருஷ்ணமூர்த்தி. அவருக்குச் சிறுநீரக அறுவை சிகிச்சைக்காகப் பணஉதவி கேட்டு பேப்பரில் விளம்பரம் கொடுத்திருந்தோம். நீங்கள் கூட நூறு ரூபாய் அனுப்பியிருந்தீர்கள்” என நினைவு படுத்தினாள்.

அவர் இயல்பாக “அப்படியா! இப்போ சுகமாயிட்டாரா?” என்று கேட்டார். அந்தப் பெண்மணி, தனது பையிலிருந்து ஒரு கல்கண்டு பாக்கெட்டும் எலுமிச்சம்பழம் ஒன்றையும் எடுத்து நீட்டினாள். “இவையெல்லாம் எதற்கு? என்று கேட்டார்.”

“போன வருஷம் இதே மாசம் அறுவை சிகிச்சை நடந்தது. அப்போ பணம் அனுப்பி உதவுனீங்க. உங்க தயவுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலை. அவரு குணமாகி, இப்போ வேலைக்குப் போக ஆரம்பிச்சுட்டாரு. அதான், உங்களைப் பார்த்துச் சேவிச்சுட்டுப் போகலாம்னு வந்தோம்.”

அதெல்லாம் பெரிசா எதுவும் செய்துவிடவில்லை என்பது போல அவர் உட்காரச் சொல்லி, “காபி சாப்பிடுகிறீர்களா?” என்று கேட்டுக்கொண்டிருந்தார். அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது புரிந்தது – கணவரின் அறுவை சிகிச்சைக்கு உதவி செய்தவர்கள் ஒவ்வொருவராகப் பார்த்துப் பார்த்துத் தாயும் பிள்ளையும் நன்றி சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இதுவரை இருபதுக்கும் மேற்பட்டவர்களை அவர்கள் சந்தித்து விட்டார்கள். வியப்பாக இருந்தது.

உலகில் அன்பைவிடவும் மிருதுவான பகிர்தல் வேறு ஏதேனும் இருக்கிறதா என்ன? நன்றியும் நேசமும்தானே அன்பின் எளிய வெளிப்பாடுகள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பிலிப்பைன்ஸ் நாட்டின் திரைப்படம் ஒன்று நினைவுக்கு வந்தது. தான் இறப்பதற்கு முன்பாகத் தன்னோடு நெருக்கமாக இருந்த மூவருக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று ஒரு வயதானவர் ஆசைப்படுகிறார்.

அவரது மனைவி அந்த மூவரைத் தேடிக்கொண்டு கணவரின் பிறந்த ஊருக்குச் செல்கிறாள். மூவரில் முதலாவது – அவரது ஆசிரியர். இரண்டாவது நபர் – அவருக்கு முதன் முதலாக வேலை கொடுத்தவர். மூன்றாவது – அவரது பால்ய நண்பர். மூவரையும் தேடிக் கண்டுபிடிப்பதற்குள் சாவு தேவதை வயதானவரின் வீட்டுக் கதவைத் தட்டுகிறாள். கதவைத் திறந்த மனைவிக்கு, அது மரண தேவதை என்று தெரிந்துவிடுகிறது. அவள், ‘எனது கணவர் நன்றி சொல்லாமல் உலகிலிருந்து பிரிந்துபோவது மிகவும் வேதனைக்குரியது. ஆகவே, சில மாதங்கள் அவகாசம் தந்தால், அவர்களைத் தேடிக் கூட்டி வந்துவிடுவேன். பிறகு கணவரைக் கூட்டிச் செல்லலாம்’ என்கிறாள். சாவு தேவதையும் வேண்டுகோளை ஏற்றுக்கொள்கிறது.

கணவரின் நண்பரையும் முதலாளியையும் ஆசிரியரையும் தேடிக் கண்டுபிடித்துக் கூட்டி வருகிறாள். அவர்கள் மிகுந்த சந்தோஷத்துடன், தங்களை நினைவு வைத்துக்கொண்டிருந்த தற்காக வயோதிகருக்கு நன்றி சொன்னார்கள்.

வீட்டில் அவர்கள் சந்தோஷமாக விருந்து உண்பதை வயோதிகர் படுக்கையில் இருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, தான் மிகச் சந்தோஷத்துடன் பிரிந்து போவதாகச் சொல்லியபடி உலகைத் துறந்து செல்கிறார்.

‘மன்னிப்பும் நன்றியும்தான் மனிதனின் மாபெரும் கண்டு பிடிப்புகள்’ என்று கூடத் தோன்றுகிறது.

மெதுவாக வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். நெடுநேரத்துக்குப் பிறகு, அந்தப் பெண்ணும் மகனும் தெருவில் போவது தெரிந்தது. அன்றிரவு நானாக நடந்து, பள்ளியின் வாட்ச்மேனைப் பார்த்துப் பேசுவதற்காகப் போனேன்.

அவர் மூடியிருந்த இரும்பு கேட்டின் அருகே உட்கார்ந்தபடி காலை பேப்பரை வாசித்துக்கொண்டிருந்தார்.

என்னைப் பார்த்ததும் சிரித்தபடியே, “பாருங்க சார்... இதுக்குப் போய் அம்பது ரூபா செலவழிச்சுட்டு வந்திருக்காங்க....” என்று தானாகப் பேசத் துவங்கினார். வாசலில் கிடந்த பெஞ்சில் உட்கார்ந்துகொண்டேன்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அவர் உள்ளேயிருந்து ஒரு ஊதாநிற டைரியை எடுத்துக்கொண்டு வந்தார். அதில் வரிசை வரிசையாக ஏதேதோ முகவரிகள் கிறுக்கலான கையெழுத்தில் இருந்தன. அவர் டைரிக்குள் மடித்து வைக்கப்பட்டிருந்த சில மணியார்டர் ஃபாரம்களை எடுத்துக்காட்டினார்.

“நேத்து பேப்பர்ல வந்திருந்ததே சார். நீங்க பார்த்திருப்பீங்க. ரெண்டு வயசுப் பிள்ளைக்கு இதயத்துல கோளாறாம். பேரு சிவகாமி. அப்பா பேரு கூட கோவிந்தராசன். தமிழ்நாடு ஹாஸ்பிட்டல்ல இருக்காங்களாம். இல்லாத குடும்பம்போல சார். அதான். நம்மால முடிந்த உதவி - ஒரு அம்பது ரூபா அனுப்பி வைக்கலாம்னு இருக்கேன்”

எனக்கு அவரைப் புரிந்துகொள்ள முடியவேயில்லை. அவர் என் முகக் குறிப்பிலிருந்து தெரிந்து கொண்டவரைப் போலச் சொன்னார்.

“பேப்பர்ல ‘உதவி தேவை’ன்னு விளம்பரம் கொடுக்காங்கன்னா, நம்மளை மாதிரி நாலு பேரு படிப்பாங்க, உதவி செய்வாங்கன்னு நம்பித்தானே செய்யறாங்க. எனக்குப் படிச்சவுடனே மனசு துவண்டு போயிடும் சார், அதான், மாச சம்பளத்துல ஐம்பதும் நூறுமா ஏதோ ஒரு நாலஞ்சு பேருக்கு அனுப்பி வைப்பேன்.

காசைப் பொத்தி பொத்தி வெச்சு என்ன சார் செய்யப் போறோம்? நம்மால முடிஞ்சதைச் செய்யணும் இல்லையா?” என்றபடி அவர் பூர்த்தி செய்து வைத்திருந்த மணியார்டர் ஃபாரத்தை எடுத்துக் காட்டினார்.

எனக்குக் குற்ற உணர்வாக இருந்தது. ஒவ்வொரு நாளும் காலை பேப்பரில் எத்தனை மெடிக்கல் அப்பீல் விளம்பரங்களைப் பார்க்கிறேன். ஏன் அவை என்னைப் பாதிக்கவேயில்லை?

அந்த விளம்பரங்களில் எந்த ஒன்றுக்கும் பத்து ரூபாய்கூட அனுப்பியதே இல்லையே! தயக்கம் காரணமாகவோ... இல்லை. உதவி என்றால் பல்லாயிரம் ரூபாய் அனுப்புவதுதான் என்று எனக்கு நானே பொய்யான ஒரு காரணத்தை நம்பி வந்திருக்கிறேனா? யோசிக்க யோசிக்கத் தாழ்வு உணர்ச்சி உண்டானது.

அவர் பேசிக்கொண்டே இருந்தார். ஒரு தென்னை மரத்தை வெச்சா. வாழ்நாள் பூரா காய்ச்சுத் தள்ளிக்கிட்டே இருக்கு. மனுஷன் மட்டும்தான் ஒவ்வொண்ணுக்கும் கணக்குப் பார்த்துக்கிட்டு, யாருக்கும் பிரயோஜனமில்லாமல் போயிட்டு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இருக்கான். சொல்றது சரிதானே சார்?"

நான் அவரது சொற்களை மனதில் நிரப்பிக்கொண்டே இருந்தேன். நெடுநேரம் இருவரும் அமைதியாக இருந்தோம். நான் கூச்சத்தைத் துடைத்தெறிந்துவிட்டுக் கேட்டேன்.

"அந்த விளம்பரம் உங்களிடம் இருக்கிறதா?"

அவர் பேப்பரில் இருந்து கிழித்து வைத்திருந்த விளம்பரத்தை எடுத்துக் காட்டினார். நான் அதை வாங்கிக் கொண்டு வீடு திரும்பினேன். மறுநாள் காலை மணியார்டர் ஃபாரம் வாங்க வரிசையில் நின்றபோது, வாட்ச்மேன் பூமிநாதன் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

தற்செயலாக என்னைப் பார்த்ததும் அவர் லேசாகச் சிரித்துக்கொண்டார். அந்தச் சிரிப்பு – குளத்தில் வீசியெறியப்பட்ட கல்லைப்போலச் சிறிய அலைகளை ஏற்படுத்தியபடி ஆழத்துக்குள் போய்க்கொண்டே இருந்தது.

**– எஸ். இராமகிருஷ்ணன்**

**யாதும் ஊரே**

"யாது மூரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலுந் தணிதலு மவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று மிலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னோடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே. (192)

**– கணியன் பூங்குன்றனார்**

புறநானூறு – 192

**எஸ். இராமகிருஷ்ணன்**



நவீன தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர். விருதுநகர் மாவட்டத்தில் பிறந்தவர். இவர் எழுதிய 'அரவான்' எனும் நூல் சிறந்த நாடக நூலுக்கான தமிழ் வளர்ச்சித்துறையின் பரிசு பெற்றிருக்கிறது. இருள் இனிது ஒளி இனிது, காண் என்றது இயற்கை என்பன. இவரது படைப்புகளில் சில. இக்கதை துணையெழுத்து எனும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

## செயல்பாடுகள்

- 'விபத்து நடந்து கைகால் ஊனமுற்று வாழ வழியின்றித் தவிக்கிறேன்' எனும் விளம்பரம் ஒன்றைப் பத்திரிகையில் காண்கிறீர்கள். அவர்களுக்கு உதவுவதற்காகப் பத்திரிகை ஆசிரியர்க்கு கடிதம் ஒன்று எழுதுங்கள்.
- 'பிறருக்குப் பயன்படுவதற்காகச் சேமிக்கும் பணமே உண்மையான பணம்' என்னும் தலைப்பில் உரையாற்றுவதற்கான குறிப்புகள் தயாரியுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# சிலப்பதிகாரம்

## அடைக்கலக் காதை

**கா**னம்போன கணவனைக் கூட்டி
ஒல்காச் செல்வத் துறுபொருள் கொடுத்து
நல்வழிப்படுத்த செல்லாச் செல்வ
பத்தினி யொருத்தி படிற்றுரை யெய்த
மற்றவள் கணவற்கு வறியோ னொருவன்
அறியாக் கரிபொய்த் தறைந்துணும் பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும்
பட்டோன் றவ்வை படுதுயர் கண்டு
கட்டிய பாசத்துக் கடிதுசென் றெய்தி
என்னுயிர் கொண்டீங் கிவனுயிர் தாவென
நன்னெடும் பூதம் நல்கா தாகி
நரக னுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்பீங் கில்லை
ஒழிகநின் கருத்தென வுயிர்முன் புடைப்ப
அழிதரு முள்ளத் தவளொடும் போந்தவன்
சுற்றத் தோர்க்குந் தொடர்புறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரிற் பசிப்பிணி யறுத்துப்
பல்லாண்டு புரந்த வில்லோர் செம்மல்



–இளங்கோவடிகள்

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் எனும் செந்தமிழ்க் காப்பியத்தைத் தந்தவர் இளங்கோவடிகள். இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். சேரவேந்தன் செங்குட்டுவனின் இளவல். முத்தமிழ்க் காப்பியம், நாடகக் காப்பியம் எனவும் சிலப்பதிகாரம் போற்றப்படுகிறது. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று.

**செயல்பாடுகள்**

- 'தன் துயர் களைந்து பிறர் துயர் போக்க வேண்டும்' என்னும் கருத்தை வலியுறுத்தி மாத இதழுக்கு ஒரு கட்டுரை தயாரியுங்கள்.
- 'சிலப்பதிகாரம்' நூலடைவு ஒன்று தயார் செய்யுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

௬

# சமதர்மச் சிந்தனைகள்



## சிந்தனை ஒன்றுடையாள்

தாய்மொழி, தாய்நாடு என்று மொழியையும் நாட்டையும் தாயாக மதித்து வணங்கும் நாடு, நம் நாடு, 'எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழணங்கே! எனத் தமிழைத் தாயாக எண்ணிப் போற்றுகிறார் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை. "செப்பு மொழி பதினெட்டுடையாள் - எனில் சிந்தனை ஒன்றுடையாள்", என இந்தியத் தாயைப் பாடிப் பரவுகிறார் பாரதிப் பெரும்புலவர்.

### சாதிப்பாகுபாடு

முடியிலே இமயமும் அடியிலே குமரியும் இடையிலே விந்தியமும் கொண்ட இந்தியத் திருநாட்டில் வாழுகின்ற எழுபது கோடி மக்களில் குலத்தால் தாழ்ந்தவர் யாருமில்லை. பிறப்பால் உயர்ந்தவர் எவருமில்லை. எல்லாருமே சரிநிகர் சமானமாக வாழும் இம்மண்ணின் மைந்தர்தாம். ஆனால் இவ்வொற்றுமைக்கு உலை வைப்பதில் முதலிடம் பெறுவது சாதிப்பாகுபாடே! ஆதியில் இல்லாது பாதியில் வந்து பெரும் பீதியைத் தந்திடும் சாதி, மக்களைப்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பிரித்து வைத்துச் சதிராட்டம் போடுகிறது. இச்சாதிப்பூசல் 'அங்கிங் கெனாதபடி' எங்கும் நுழைந்து விடுகிறது. படியாதவரிடம் மட்டும்தான் அது வேரூன்றி இருப்பதாக எண்ண வேண்டாம். படித்தவரிடமும் அது கிளைத்துத் தழைத்துப் பெருமரமாக வளர்ந்து வானோங்கி நிற்கத்தான் செய்கிறது. சாதியெனும் படைநோய்க்கு மருந்தாக நின்று, அதனை மரித்துப் போகச் செய்ய வேண்டிய கடப்பாடுடைய கற்றவர்களே, அதற்கு விருந்து வைத்துப் போற்றுகின்ற வேதனைச் செயல் கண்டு வெட்கித் தலை கவிழ வேண்டியிருக்கிறது. இத்தகைய பிளவுச் சிந்தனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

### சமதர்மச் சிந்தனை

உயர்வு தாழ்வு மண்டிக் கிடக்கும் மனித மனங்கள் குப்பைக் கூளங்களின் கொள்கலன்கள், உயர்வு தாழ்வு எனும் ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய குப்பை கூளங்கள் 'ஒன்றே யாவரும்' என்னும் சிந்தனைக் காற்றின் வேகம் தாள முடியாமல் சிதறிப் பறந்துவிடும். ஆதலின் ஒன்றே யாவரும் என்னும் எண்ணம் 'இன்றே' பரவ வேண்டும். நெஞ்சத்தளவில் நஞ்சினை வைத்து உதட்டளவில் உறவை வைத்துப் பழகுவதனால் மட்டுமே உயர்வு தாழ்வு நீங்கிவிடாது. உயர்வு தாழ்வு அகல வேண்டுமெனில் உண்மையான சமதர்மச் சிந்தனை உள்ளத்தில் பூத்துக் குலுங்க வேண்டும்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

என்னும் 'உலகப் பொதுமறை' உணர்த்தும் உண்மையும் அதுதான். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என எண்ணும் இதயங்களில் தாம், 'எல்லாரும் ஓர்குலம்; எல்லாரும் ஓரினம்; எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்னும் ஒன்றிய சிந்தனை ஒளிவிட முடியும்.

### சாதி ஒருமை

ஒரே தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்களுள் ஒருவர் மருத்துவராகிறார்; ஒருவர் வழக்கறிஞர் ஆகிறார்; மற்றொருவர் ஆசிரியராகின்றார். அவரவர் செய்கின்ற தொழிலால் அவர்கள் வேறுபட்டு நிற்கின்றனர். அவ்வளவே! இங்ஙனம் செய்கின்ற தொழிலால் அவர்களுள் உயர்வு தாழ்வு எனும் வேற்றுமை தோன்ற இடமே இல்லை. நம் உடம்பிலுள்ள உறுப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயன்நோக்கி உள்ளன. ஒன்று மற்றொன்றைத் தாழ்வாகக் கருதினால் உடல் இயக்கமே தடைப்பட்டுவிடுமன்றோ?



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பிறப்பு, சிறப்பு, பேசிடும் உணர்வு, உள்ளம் நினைந்திடும் பாங்கு அனைத்திலும் ஒத்தோர் செய்கின்ற தொழிலால் வேறுபட்டு நிற்பது பொருந்துமோ? ஒருவர்க்குப் பிறப்பினால் பெருமையில்லை; செய்கின்ற நல்ல செய்கையால்தான் சிறப்பு வந்து எய்துகிறது. இதனையே கவிமணி,

**எவர் உடம்பிற்கும் சிவப்பே ரத்த நிறமப்பா**
**எவர் விழிநீர்க்கும் உவர்ப்பே இயற்கைக் குணமப்பா**
**பிறப்பினால் எவர்க்கும் பெருமை வராதப்பா**
**சிறப்பு வேண்டுமெனில் நல்ல செயல் வேண்டுமப்பா**

எனக் கூறிப் போந்தார். இந்தச் சீரிய சிந்தனையை நம் சிந்தையிற் கொள்வோமாயின், பிறப்பினால் உயர்வு தாழ்வு பேசும் பேதைமை நம்மை விட்டு நீங்கும் என்பது உறுதி.

**சமய ஒருமை**

சாதிக்கு அடுத்தபடியாகச் சமத்துவப் பார்வையைத் தள்ளாடச் செய்வன சமயப் பூசல்கள். நம் இந்தியத் திருநாடு மதச்சார்பற்ற நாடு. இங்குப் பல்வேறு மதத்தைச் சார்ந்தவர் உளர். அனைவரும் இம்மண்ணுக்கும் உரிமை பூண்டவர்; உற்ற உடன்பிறப்பினர்; மதத்தால் வேறுபட்டவர்களாயினும் நாட்டால் ஒன்றுபட்டு வாழ்பவர்கள். வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே அறிவுடைமை; அதுவே நம் நாட்டின் புகழுடைமை.

தெய்வம் பலப்பல சொல்லிப் பகைத் தீயை வளர்ப்பவர் மூடர் எனச் சாடுவார் பாரதியார். அவரே பல்வேறு சமயங்களும் ஒரே பரம்பொருளை அடிப்படையாகக் கொண்டவை என்னும் கருத்தை வலியுறுத்துகிறார். அதனை,

**ஆத்தி சூடி இளம்பிறை அணிந்து,**
**மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்,**
**கருநிறங் கொண்டுபாற்கடல்மிசை கிடப்போன்;**
**மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;**
**ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்**
**உருவகத் தாலே உணர்ந்து உணராது**
**பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்**
**ஒன்றே...**

என்னும் பாடல் விளக்கும்.

இப்பாடல் தெளிவுறுத்தும் உண்மை என்ன? சிவனாக இருந்தாலும், திருமாலாக இருந்தாலும், மகமது நபிக்கு மறையருள் புரிந்தோனாக



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இருந்தாலும் எல்லாக் கடவுளுள்ளும் ஊடுருவி நிற்கும் பரம்பொருள் ஒன்றே என்பதுதான். சமயநெறி நிற்பார் உள்ளங்களிலெல்லாம் ஒளி விட்டுத் திகழ வேண்டிய சிந்தனைச்சுடர் இதுவாகும்.

சமயம் காரணமாகச் சண்டையிடுதல் அவரவர் சமயக் கொள்கைக்கே விரோதமானது. மக்களை ஒன்றுபடுத்தி உயர்த்திடத்தான் மதங்கள் தோன்றியதாகக் கூறுவர். பிளவுபடுத்திப் பிரித்திட அல்ல. மதங்களும் சட்டைகள் போன்றவைதாம்; மதங்கள் என்னும் சட்டைகள் வேறாக இருக்கலாம். அவற்றை அணிந்துள்ள மனிதர்கள் யாவரும் சகோதரர்களே! இம்மண்ணுக்கு உரியவர்களே! இந்தச் சிந்தனைப்பூ எல்லாருடைய இதயங்களிலும் பூக்குமானால் அங்கே வாயடிக்கும் கையடிக்கும் இடமே இல்லை; ஒற்றுமை மணங்கமழத் தடையுமில்லை. இக்கருத்தினைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தமக்கேயுரிய தனிமிடுக்குடன் கூறுவதைக் காணுங்கள்:

**மதங்கள் மக்களின் மாற்றுச் சட்டைகள்**
**இந்நில மக்கள், அவ்வெழிற் சட்டையின்**
**உட்புறத் துள்ள மனிதரைக் காண்க;**
**அந்த மனிதர் இந்தப் பெருநிலம்**
**ஈன்ற பிள்ளைகள் என்னும் எண்ணம்**
**அறிந்து பயனிலை; உணர்ந்தால் ஒற்றுமை**
**நிலைபெறும்; கலகம் அறவே நீங்கும்.**

### நிறை வாழ்வு

பல்வேறு மதத்தைச் சார்ந்தவர்களும் இப்பெருநிலம். பெற்றெடுத்த பிள்ளைகளே. இதனை அறிந்து கொண்டால் மட்டும் போதாதாம்; உணர்ந்து கொண்டால் தான் ஒற்றுமை நிலைக்குமாம். உண்மைதானே! மதக்கலவரங்கள் அறவே நீங்க இதைவிடச் சிறந்த மார்க்கம் வேறு உண்டா? இதனைச் சிந்தையில் நிறுத்திச் செயல்பட வேண்டியதே நம் அனைவரின் தலையாய கடமை. அத்தகைய உணர்வு வந்துவிட்டால் இமயத்தில் இருப்பவர்க்கு ஒன்று நேர்ந்தது எனில் குமரி முனையிலிருப்பவரும் உதவிசெய்வதற்கு விரைந்து ஓடுவார். இதனை,

### சங்ககாலம்

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த புலவர்கள் ஒரிடத்தில் கூடித் தங்கள் கவிதைப் படைப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் வழக்கம் பண்டைக் காலத்தில் இருந்தது. இவ்வாறு ஒன்று கூடி உருவாக்கிய அமைப்பே தமிழ்ச் சங்கம். இச்சங்கம் நிலைபெற்றிருந்த காலத்தைச் சங்க காலம் என்றும், இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களைச் சங்க இலக்கியம் எனவும் குறிப்பிட்டனர். சங்க காலத்தில் தோன்றிய நூல்கள் பதினெட்டு. இவற்றை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என இரண்டாகப் பகுத்துள்ளனர். புறநானூறு, குறுந்தொகை போன்ற எட்டு நூல்களின் தொகுப்பு எட்டுத்தொகை. திருமுருகாற்றுப்படை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை போன்ற பத்து நெடிய பாட்டுகளின் தொகுப்பு பத்துப்பாட்டு. சங்க இலக்கியங்கள் காதல், வீரம் ஆகிய இரண்டையும் முக்கிய பாடுபொருளாகக் கொண்டவை. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலம் சங்ககாலம்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**இமயச் சாரலில் ஒருவன் இருமினான்**
**குமரி வாழ்பவன் மருந்துகொண்டு ஓடினான்.**
**ஒருவர்க்கு வந்தது அனைவர்க்கும் என்ற**
**மனப்பாங்கு வளர்ந்தது வேண்டிய மட்டும்**

எனப் பாவேந்தர் எடுத்துரைப்பார். எத்தகைய உயர்ந்த எண்ணம் பார்த்தீர்களா? சாதி, சமய வேறுபாடுகளுக்கு இடங்கொடாமல் ஒன்றாய் நின்றால் நிறை வாழ்வு அடைவோம் என்பதையும்,

**இத்தேசத்தினர்கள் ஓர் தாய் தந்திடு சேய்கள்**
**நேசத்தாலே நாமெல்லோரும் ஒன்றாய் நின்றால்**
**நிறைவாழ்வு அடைவோம் சலியா வயிரக் குன்றாய்**

- என வடித்துக் காட்டுகிறார் பாவேந்தர்.

இதுகாறும், சாதி ஒருமையும் சமய ஒருமையும் பாரத ஒருமைக்கு எந்த அளவுக்கு இன்றியமையாதன என்பதைப் பாரதியாரும் பாரதிதாசனாரும் காட்டுமாறு கண்டோம்.

**உலக ஒருமை**

அறிவியலின் வேகமான முன்னேற்றத்தினால் உலகத்தின் பரப்பளவே மிகவும் சுருங்கிவிட்டது எனலாம். உலகத்தின் எந்த மூலையில் எது நிகழ்ந்தாலும் உடனுக்குடன் உலகம் முழுமையும் தெரியக்கூடிய அளவுக்கு அறிவியலின் சாதனை அமைந்துள்ளது. இந்நிலையில் மனிதனின் சிந்தனையோ உலக ஒருமையை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது. ‘ஒன்றே உலகம்’ என்னும் ஒற்றுமைக் கோட்பாடு வேகமாக வளர்ந்து வருகிறது. இதனைப் பாவேந்தர்,

**தன்பெண்டு தன்பிள்ளை சோறுவீடு**
**சம்பாத்தியம் இவையுண்டு, தானுண்டு**

என்னும் சின்னதொரு கடுகு உள்ளத்திலிருந்து

**தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்**
**தொல்லுலக மக்களெல்லாம்**
**ஒன்றே யென்னும் தாயுள்ளம்**

தனைநோக்கி மனிதச் சிந்தனை முன்னேற வேண்டுமென முரசறைகிறார். ‘எல்லா மக்களும் ஒன்றே’ என்னும் தாயுள்ளம் கொள்ளும்போதுதான் உலகில் தன்னலம் தீரும். தன்னலம் தீரும்போது சண்டையும் தானாகத் தீர்ந்துவிடும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

மனிதனின் எல்லாத் தீய செயல்களுக்கும் அடிப்படையாய் அமைவது தன்னலந்தானே. நான், எனது என்னும் செருக்குத்தானே. பிறர் நலத்தை அழிக்கத் தூண்டும் பேயாக ஆட்டம் போடுகிறது. இந்த உலகம் அழியாமல் நிலைத்து நிற்பதற்குக் காரணம்,

**தமக்கென முயலா நோன்றாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே**

என்று தானே புறநானூற்றுப் புலவரும் பாடுகிறார். எந்த ஒரு நாட்டின் முன்னேற்றத் தையும் நாடுகின்றவர்கள் இத்தன்னலத்தைத் துறந்து பொது நலம் பேணும் தூய சிந்தை யுடையவர்களாகத் திகழவேண்டும். அப்போதுதான் நாடு செழிக்கும் – சிறக்கும். ஒவ்வொரு நாட்டினரும் இத்தகைய ஒன்றுபட்ட சிந்தனையுடன் செயல்படுவார்களானால், உலக நாடுகள் அனைத்தும் ஒருசேர முன்னேறுமன்றோ? அப்போது, ஒரு நாடு மற்ற நாடுகளைத் தாக்கிடும் சூழல் ஏற்படாது. பெரிய நாடு சிறிய நாடு என்னும் பேதம் தோன்றாது, 'சிறுபான்மை இனத்தினர்' அமைதி ஏதுமின்றித் தத்தளித்துத் தவிக்கும் நிலை தலைதூக்காது, ஓர் இனம் மற்றோர் இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி அடிமை கொள்ளும் மனப்போக்கும் மாறும்.

**எந்தாய் வாழ்க**

எந்தாய் வாழ்க எனும் மந்திர நாதமே
இன்பத்தை ஊட்டுதம்மா – எங்கள்
இந்தியப் பாசுரத் தென்றல்வந் திதயத்தின்
தந்தியை மீட்டு தம்மா.

அன்னை இயற்கையின் புன்னகை அழகிலே
அமுதம் சுரக்கு தம்மா – அவள்
வன்ன மலைநதி வனங்களில் ஆனந்த
ஞானம் பிறக்கு தம்மா

தென்மொழி வடமொழித் தேனமு துண்டதும்
சித்தம் சிலிர்க்கு தம்மா – மிக
உன்னதக் கவிகளின் சன்னத வாக்கில்எம்
உள்ளம் தவழுதம்மா

சாதி மதநிற பேதமில் லாதொரு
சமரசங் காணுதம்மா
ஆதவன் கதிர்கள்போல் ஆன்ம ஒருமையில்
ஆருயிர் சேருதம்மா

**– யோகி சுத்தானந்த பாரதி**

**மனிதநேயம்**

மானுடம் என்னும் எண்ணமுடன் நமது சிந்தனை விரியுமானால் அங்கே பிளவுக்கு இடமில்லை; பேதமும் இல்லை. இதனையே பாவேந்தர்,

**மனிதரில் நீயுமோர் மனிதன்! மண்ணன்று**
**இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!**
**தோளை உயர்த்துச் சுடர்முகம் தூக்கு!**
**எங்கும் பாரடா இப்புவி மக்களைப்**
**பாரடா உனது மானிடப் பரப்பைப்**
**பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்**
**'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய**
**மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!**
**விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!**
**அணைந்துகொள் உன்னைச் சங்கம மாக்கு!**
**மானிட சமுத்திரம் நான் என்று கூவு!**

எனப் பாடுகிறார்.

இவ்வாறு அவர் உணர்ச்சியுடன் பாடும்போது மனிதநேய ஒருமைப்பாட்டுச் சிந்தனை எழுச்சியுடன் வெளிப்படுவதைக் காணலாம். எண்ணத்தால், இதயத்தால் பக்கத்து வீட்டாருடன் இணைந்து வாழ்வதில் தொடங்கி, உலகம் முழுமையும் தம்முடன் பிறந்த மக்கள் பெருங்கடல் என்று கண்டு மகிழ்ச்சி அடைவது வரை, எவ்வளவு பெரிய மானிடப் பிறப்பை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார் பாவேந்தர்!

இவ்வாறு சாதியொருமை, சமய ஒருமை, இனவொருமை இவற்றின் வழி இந்தியர் ஒருமை பெற்று, உலக ஒருமை காண்பது என்னும் சிந்தனை ஒன்றுடையவள் நம் இந்தியத் தாய். அச்சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுக்க யாவரும் எழுக! அதுவே, இம்மண்ணின் மைந்தர்களின் இன்றைய கடமையாகும்.

**– டாக்டர் மு.பி. பாலசுப்பிரமணியன்**

**டாக்டர் மு.பி. பாலசுப்பிரமணியன்**
இக்கட்டுரை ஆசிரியர் சென்னை பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியராகப் பணிபுரிந்து, ஓய்வு பெற்றவர். இலக்கிய நெஞ்சம், சீனத்துப்பரணி, மணிவேந்தன் கவிதைகள், இலக்கியப் புன்னகை எனப் பல நூல்கள் படைத்தவர். இவர் எழுதிய கவிதை மேகங்கள் எனும் கவிதை நூல் தமிழக அரசின் பரிசைப் பெற்றது.

## செயல்பாடுகள்

- ‘வேற்றுமையில் ஒற்றுமை என்பதே ஒருமைப்பாடு’ என்னும் கூற்றை நிறுவத் தேவையான சான்றுகளைப் பட்டியலிடுக.
- தேசிய முன்னேற்றத்தின் முதல்படி மக்களின் மன ஒற்றுமையே எனும் கருத்தை வலியுறுத்தும் சொற்பொழிவு உரை ஒன்றை உருவாக்கி நிகழ்த்துங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## பாரத சமுதாயம்

பாரத சமுதாயம் வாழ்கவே - வாழ்க வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே - ஜய ஜய ஜய (பாரத)

முப்பது கோடி ஜனங்களின் சங்க
முழுமைக் கும்பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை - வாழ்க (பாரத)



மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்க மினியுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை யினியுண்டோ? - புலனில்
வாழ்க்கை யினியுண்டோ? - நம்மி லந்த
வாழ்க்கை யினியுண்டோ?
இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும்பெரு நாடு
கனியுங் கிழங்குந் தானியங்களும்
கணக்கின்றித்தரு நாடு - இது
கணக்கின்றித்தரு நாடு - நித்தம் நித்தம்
கணக்கின்றித்தரு நாடு - வாழ்க (பாரத)

இனியொ ருவிதிசெய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனியொ ருவருக் குணவில்லை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம் - வாழ்க (பாரத)

எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் - நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் - ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் - வாழ்க (பாரத)

**- மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**



பாரதம் விடுதலை பெறப் பா ரதம் ஓட்டிய சாரதி மகாகவி பாரதியார். பாட்டுக்கொரு புலவன் பாரதியடா எனப் பாராட்டியவர் கவிமணி. பாரதியின் படைப்புகள் தமிழ்கூறும் நல்லுலகமெங்கும் தமிழரிடையே விழிப்புணர்வை ஊட்டின. எட்டையபுரத்தில் பிறந்த பாரதியின் இயற்பெயர் சுப்பிரமணியன். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் ஆகியவை இவரது முப்பெரும் பாடல்கள்.

## செயல்பாடுகள்

- "மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கையினியுண்டோ" என்னும் கவிதை வரியில் காணும் சமூகச் சிந்தனையை ஆராய்ந்து எழுதுங்கள்.
- "எல்லோரும் ஓர் குலம் .... எல்லோரும் ஓரினம்"
  இக்கவிதை வரிகளை இன்றைய மக்களாட்சி முறையுடன் ஒப்பிட்டு எழுதுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com





## பட்டுக்கோட்டைப் பாடல்களில் மனிதநேயம்

இருபதாம் நூற்றாண்டு தமிழ்க் கவிஞர்களுள் தனக்கென ஒரு தகுதியான இடத்தைப் பெற்றவர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார். மக்கள் கவிஞர் என முன்மொழியவும் வழிமொழியவும் பட்டவர். உள்ளத்தில் ஊற்றெடுக்கும் மனித நேயமே அவர்தம் பாடல்களின் அடிநாதம். வாழ்க்கையின் அர்த்தங்களைப் புரிந்துகொண்டு கவி சொன்னவன். தான் வாழும் மண்ணையும் மனிதனையும் நேசிக்காதவன் கவிஞனாக முடியாது. தமிழ் மண்ணின் மைந்தனாக மலர்ந்து உலகெங்கிலும் 'மானுடம் வெல்ல வேண்டும்' என்ற மகத்தான எண்ணத்தின் மணம் பரவ வேண்டும் என விழைந்தவன். அதற்காக உழைத்தவன். காலத்தால் அழியாத பாடல்களைப் புனைந்தவனைக் காலன் இருபத்து ஒன்பது வயதிற்கு மேல் விட்டு வைக்கவில்லை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நற்சிந்தனைகள் விதைக்கப்படும் சமுதாய விளைநிலத்தில் சீர்திருத்தப் பயிர் விளைந்தே தீரும் என்ற திடமான நம்பிக்கை உடைய கவிஞன். மேல்தட்டு மக்களைப் பாடுதற்கே எழுதுகோல் எடுத்த பழைய வரலாற்றைத் தள்ளி நிறுத்திச் சாமான்யர்களுக்காகவும், எளியோருக்காகவும் சங்கீதம் இசைத்தவன். மேகத்தின் விளிம்பைத் தொட்டுவிட மாட்டேனா என உயர உயரப் பறக்கும் வானம்பாடியின் கண்கள் மட்டும், பள்ளத்தாக்கில் இருக்கும் அப்பறவை கட்டிய கூட்டில் இருக்குமென்பார்கள். அதுபோலக் கற்பனைச் சிறகுகட்டிப் பறக்கும் கனவு தொழிற்சாலையான திரை உலகிற்குள் நுழைந்த பின்பும், அடித்தள மக்களின் அவலத்தில் கண் பதித்து நின்றவன்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாடிய பாரதியார் மரபில் வந்த பட்டுக்கோட்டை தன் பாடல்களில் விவசாயம். கைத்தொழில் சார்ந்த வாழ்வினரின் அடிப்படை உணர்வுகளையே அதிகம் வெளிப்படுத்துகிறார். எளிய மக்களின் வாழ்க்கையே கவிஞருக்கு கவிதைக்களம். எனவே தான் பாரதிக்குப் பின்வந்த கவிஞர்களில் அடித்தட்டு மக்களின் வழக்குச் சொற்களைத் தன் பாடல்களில் அதிகம் பயன்படுத்திய கவிஞராகப் பட்டுக்கோட்டை திகழ்கிறார்.

மனிதநேயம் என்பது நெஞ்சில் இயற்கையாக ஊற்றெடுக்கும் உணர்வு. தன்னைப்போலவே அனைத்துயிர்களும் இன்புற்று வாழ்தல் வேண்டும் என்ற இயற்கையான விழைவு.

சமூகத்தின் இருளைப் போக்க வந்த ஒளிக்கீற்றுதான் பட்டுக்கோட்டையின்,

**மனிதனை மனிதன் ஏய்க்கிறாண்டா தம்பிப் பயலே – அது.**
**மாறுவதெப்போ தேறுவதெப்போ நம்ம கவலை**

என்ற பாடல் வரிகள்,

மனிதன் முதலில் மனிதனாக வாழ்தல் வேண்டும். மனிதனுக்கென்றே இயற்கையாக அமைந்துள்ள நற்பண்புகளுடன் மனிதன் வாழத் தலைப்பட்டால் அவன் தவறு செய்யத் தயங்குவான்.

மனிதனை மனிதன் ஏமாற்றிப் பிழைக்கும் பிழைப்புக்கு ஒரு முடிவு கட்டிவிட்டு மனிதனாக வாழவேண்டும் என்பதனை,

**மனிதனாக வாழ்ந்திட வேண்டும்**
**மனதில் வையடா – தம்பி**
**மனதில் வையடா – தானா**
**எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா**
**எல்லாம் பழைய பொய்யடா**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

என்கிறார். மனிதனை மனிதன் சரிநிகர் சமமாய் மதித்தல் கடமை என்பதையும், அண்ணன் தம்பியாய் வாழ்ந்து அன்பு காப்போம் என்பதையும் உணர்த்த வந்த கவிஞர்,

**மனிதரை மனிதர் சரிநிகர் சமமாய்**
**மதிப்பது நம் கடமை**
**வள்ளுவப் பெருமான் சொல்லிய வழியில்**
**வாழ்வது அறிவுடைமை**
**அண்ணன் தம்பியாய் அனைவரும் வாழ்ந்து**
**அருள் விளக் கேற்றிடுவோம்**

என்ற வரிகளின் மூலம் நம்முடன் உரையாடுகிறார்.

'சோலை தழைத்தென்ன வாழை நிலைத்தென்ன ஏழைக்குக் கூழ் தானே. வாழை குலைகுலையாய்க் காய்த்தும் வறியவன் வயிறு காய்ந்துகொண்டுதானே இருக்கிறது' என்றெல்லாம் சமூகத்தின் முரண்பாடுகளைச் சாடுகிறார் கவிஞர். இக்கருத்தைப் படம் பிடிக்கும்,

**வாழை நிலைக்குது சோலை தழைக்குது**
**ஏழைகளுக்கிதில் என்ன கிடைக்குது?**
**கூழைக் குடிக்குது, நாளைக் கழிக்குது**
**ஓலைக் குடிசையில் ஒட்டிக் கிடக்குது**

என்ற உணர்ச்சி மிகுந்த பாடல் வரிகள், இன்றுவரை மனித நேயமுடைய மனங்களில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன. 'ஏழைகளை அடிச்சுப் பறிக்கும் எண்ணம் உடம்புக்காகாது' என்ற வரியிலும் "நாடு செழிக்க உழைக்கும் எளியவர் நாதியின்றி உள்ளம் நைந்திடக் கண்டேன்" என்ற வரியிலும் தொனிக்கும் வருத்தம் அளவிடற்கரியது.

மக்கள் நலமே தம் குறிக்கோள். என்றெண்ணும் புதிய அரசியல் உருவானால் சட்டங்கள் மாறும். அப்பொழுது சங்கடங்கள் தீரும். "எல்லாரும் சமம்" என்ற நிலை பிறக்கும் என்ற நம்பிக்கை நாதம் கவிஞரின் குரலாய் ஒலிக்கிறது.

**பகலும் இரவும் மாடாய் உழைத்து**
**பட்டினி கிடந்து ஓடாய் இளைத்து**
**பயந்து பயந்து காலங் கழித்து நலிந்த எளியோர்**

என்ற வரிகளில் உடம்பின் நரம்புகளையெல்லாம் இயக்கி, தசை நெறியும்படி உழைத்த பின்னும் உண்ண வழியுமின்றி அதிகார வர்க்கத்திற்கு அஞ்சி அஞ்சி சாக வேண்டிய நிலையில் சமூகத்தின் வறுமைத் தாழ்வாரத்தில் வீழ்ந்து கிடக்கும் ஏழைகளை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார் கவிஞர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**கொத்தும் பணக்கழுகு கொள்ளைப் பெருச்சாளி**
**எத்திப் பிழைக்கவே சுத்தும் நரிக்கூட்டம்**
**ரத்த வெறி கொண்டலையும் யுத்தப் பெரும் முதலை**
**பித்தம் பிடித்தலையும் பேதக் குரங்கெனத்**
**திட்டம் உடைந்தது சித்தம் தெளிந்தது**

பிறர் பங்கைத் திருடுதல், கொள்ளையிடுதல், ஏமாற்றிப் பிழைத்தல், வாயடியும், கையடியும் வளரச் செய்தல் என்றிருக்கும் குள்ளநரிக் கூட்டத்தின் திட்டம் உடைந்து போகும் நாள் தொலைவிலில்லை என்கிறார் கவிஞர்.

தேச எல்லை கடந்து வாழும் மனித இனத்தின் மேலும் பட்டுக்கோட்டையின் மனித நேயம் படர்கிறது. மென்மையான உள்ளமும், மனித சமூகத்தின் பால் அன்பும் உடைய கவிஞர்கள் உலகம் இன்புற்று வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் திண்ணமாய் இருப்பர். பீஜீத் தீவில் கரும்புத் தோட்டத்தில் கையும் காலும் சோர உழைத்து உருக்குலைந்து போன பெண்களுக்கு இரங்கித் துயர கீதம் இசைத்தான் பாரதி,

**பெண்ணென்று சொல்லிடிலோ – ஒரு**
**பேயும் இரங்குமென்பார் – தெய்வமே – நின**
**தெண்ண மிரங்காதோ – அந்த**
**ஏழைகள் அங்கு சொரியும் கண்ணீர் – வெறும்**
**மண்ணிற் கலந்திடுமோ**

திரைப்படத்தின் சூழலுக்கிசைவாகப் பாடல் எழுத வேண்டிய நிலையில் தில்லையம்பல நடராஜரைப் பாட வந்த பட்டுக்கோட்டை 'கங்கை அணிந்தவா கண்டோர் தொழும் விலாசா' என்று தொடங்கி தில்லை அம்பலவன் மக்களின் இன்னலைத் தீர்த்து எளிமையைப் போக்கி எங்கும் இன்பம் நிலவ அருள் பாலிக்க வேண்டும் என்று பாடுகிறார்.

எனவே, பாடுபொருள் எதுவாக இருப்பினும் மக்கட் சமூகத்தை விட்டு வறுமையும் துன்பமும் விலக வேண்டும் என்ற கவிஞரின் இதயதாகம் பாடல் வரிகளில் தொனித்துக்கொண்டே தான் இருக்கிறது.

மனித நேயத்தின் ஒரு கூறான உயிர்க்கருணையின் வடிவமே பட்டுக்கோட்டை. பதினான்கு வயதில் இயற்றிய முதல் பாடல், சிறுவனாய் இருக்கும்போது ஒரு நாள் வயலைப் பார்த்து விட்டுத் திரும்பும்போது, 'துரையான் குளம்' என்ற இடத்தில் ஏரிக்கரையில் இருந்த வேப்பமரத்து நிழலில் அமர்ந்த கவிஞரின் கண்கள், ஏரியில் இருந்த தண்ணீரையும் அதில் துள்ளிக் குதித்த கெண்டை மீனையும் பார்த்து ரசித்தன. கெண்டை மீன் தண்ணீருக்குள்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தலைகீழாகத் துள்ளிக் குதிப்பதும், சிறிது நீந்துவதுமாக விளையாடல் செய்யும்போது, ஏரிக்கரையில் காணப்பட்ட தாமரை இலையில் நீர்த்திவலைகள் தெறித்தன. இந்த அழகோவியம் கவிஞரின் மனதில் ஏற்படுத்திய உணர்ச்சி, பாடல் வரிகளாய்ப் புறப்பட்டது. கெண்டை மீன், அடிக்கடி ஏரிக்கரைக்கு வந்து விளையாடினால், எங்கே தூண்டில்காரன் பிடித்துக் கொண்டு போய்விடுவானோ என்ற ஆதங்கத்தில் "கெண்டைக் குஞ்சே ஓடிப்போய்விடு" எனச் சொல்வதாகக் கவிஞர் வடித்துள்ள பாடலில் உயிர் இரக்கம் வெளிப்படுகிறது.

ஐந்தாண்டு இடைவெளியில் தன் மனக் கருத்துகளை எல்லாம் கவிதையாய் வடித்துத் தமிழ் மக்களிடம் தந்து

**செக்கச் சிவந்த செங்கதிரோனும்**
**கிழக்கில் வந்து விட்டான்**

எனத் தொடங்கி,

**ரத்த வியர்வைகள் சொட்ட உழைத்தவன்**
**நெற்றி சுருங்கிடுதே - ஏழை**
**உத்தமர் வாழ்வை உறிஞ்சும் உலுத்தரின்**
**கொட்டம் அடங்கிடுதே - மக்கள்**
**வெற்றி நெருங்கிடுதே**

என்ற வரிகளில் நிறைவடையும் புதுஞாயிறு என்ற தலைப்பில் 15.08.1959 அன்று வெளியான கவிதைதான் பட்டுக்கோட்டையின் கடைசிக் கவிதையாகும். இந்தக் கவிதை வெளியான இரண்டே மாதத்தில் கவிஞர் மறைந்துவிட்டார். நாட்டு மக்களுக்கு, தான் சொல்ல வந்த செய்தியைப் போல அந்தக் கவிதை அமைந்துள்ளது.

**- இளம்பிறை மணிமாறன்**

**இளம்பிறை மணிமாறன்**



தூத்துக்குடியைச் சேர்ந்த இவர் சிறந்த பட்டிமன்றப் பேச்சாளர். ஆங்கிலப் பேராசிரியையான இவர் தூத்துக்குடி ஏ.பி.சி. மகாலட்சுமி பெண்கள் கல்லூரியில் முதல்வராகப் பணிபுரிந்துள்ளார்.

## செயல்பாடுகள்

- 'பட்டுக்கோட்டை பாடல்களில் மனிதம்' எனும் தலைப்பில் குழுவிவாதம் நடத்திக் குறிப்புத் தயார் செய்யுங்கள்.
- நீங்கள் அறிந்த ஏதேனும் கவிஞருடன் மனிதநேயம் பற்றி நேர்காணல் நடத்துவதற்கான வினாநிரல் தயார் செய்க.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## மனமே கோவில்
## மனிதனே தேவன்

இந்தியனே! இந்தியனே!
முதலில்
நீ இருக்க ஒரு
இடம் தேடு!
ஆண்டவனுக்கு
வேண்டிய இடத்தை
அவன் தேடிக்கொள்வான்!

பாவம்!
கடவுளைப் பற்றி அதிகம்தான்
கவலைப் படுகிறீர்கள்...
கடவுளோ
மனிதர்களை எண்ணியன்றோ
மனம் வருந்துகின்றான்.....

பக்தியைக் காட்டினால்
பரமன் மகிழ்வான்!
நீங்களோ உங்கள்
சக்தியைக்
காட்டுகிறீர்கள்....
ஆண்டவன்
சங்கடப் படுகிறான்....

உடலில் ரத்தம்
ஓட வேண்டும் என்பதுதான்
இறைவன் நமக்கு
இட்ட கட்டளை!
தெருவில் அதனை
ஓட விடுவது
தெய்வ நிந்தனை!

எந்த மதக்கொடியையும்
ஏற்றிக் கொள்ளுங்கள்!
ஆனால் அதை ரத்தத்தில் கழுவி
அழுக்காக்காதீர்கள்!



### சங்கம் மருவிய காலம்

சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தைச் சங்கம் மருவிய காலம் என்பர். இக்காலகட்டத்தில் தோன்றிய நூல்கள் வாழ்வியல் அறங்களையும் நீதிகளையும் எடுத்துரைப்பனவாக உள்ளன. எனவே இக்காலம் நீதி நூல் காலம் எனவும் வழங்கப்பட்டது. திருக்குறள், நாலடியார், பழமொழி, திரிகடுகம் போன்ற பதினெட்டு நூற்கள் இக்காலத்தில் எழுந்தன. இவற்றை மொத்தமாகப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்பர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அவரவர் மதக்கொடிகள்
அசையட்டும் அழகாய்....
வெறியெனும் நெருப்புக்கு
விசிறியாய் அல்ல...
களைத்தவர் வாழ்விற்குக்
கலங்கரை விளக்கமாய்!

ஒவ்வொரு மதமும்
உபதேசிப்ப தென்ன?
அன்பை அல்லவா...
அந்த
அன்பை அடகு வைத்தா
ஆயுதம் வாங்குவது?

இன்னொரு நவகாளியை
இந்தியா தாங்குமா?

அவரவர் விருப்பப்படி
அனைவருக்கும் உரிமையுண்டு....
கோவில்களில் கும்பிடலாம்
தேவாயலங்களில் தியானிக்கலாம்
மசூதிகளில் தொழலாம்
ஆனால்
எவனது விருப்பப்படியும்
எவனுக்கும் உரிமையில்லை
மதவெறி வாளால்
மற்றவரைக் கொல்வதற்கு!
கங்கையும் காவிரியும்
கைகலந்து கொள்வதில்லை
கடலில்தான் கலக்கின்றன!

மதங்கொண்ட யானைகள்
மோதிக் கொண்டன....
நடுவில் அகப்பட்டு
நசுங்கிப் போனது
எளிய மக்களின்
வாழ்க்கையல்லவா
இந்துவே திரண்டுவா!
என்றோ

### காப்பிய காலம்

சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் வாழ்வியல் நெறிமுறைகள் மிகச் சுருக்கமாகச் சிறுசிறு பாடல்களின் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டன. இதற்குப் பிற்பட்ட காலத்தில் இந் நெறிமுறைகளை ஒரு பெரிய கதையின் வாயிலாக விளக்கிக் கூறும் ஒரு புதிய மரபு ஏற்பட்டது. இவ்வாறு எழுதப்பட்ட நீண்ட கதைகள் காப்பியங்கள் என அறியப்பட்டன. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகிய ஐந்தும் தமிழில் தோன்றிய முக்கிய காப்பியங்களாகும். இவ்வைந்தையும் ஐம்பெருங் காப்பியங்கள் என்று கூறுவர். இவற்றுள் முதல் காப்பியம், முத்தமிழ்க் காப்பியம் எனப்படும். சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக அதே காலகட்டத்தில் எழுந்த இன்னொரு காப்பியம் மணிமேகலை. எனவே இவ்விரண்டு காப்பியங்களையும் சேர்த்து இரட்டைக் காப்பியங்கள் என்பர். பெரும்பான்மையான காப்பியங்களும் சமண, பௌத்த சான்றோர்களால் எழுதப்பட்டவை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கிறிஸ்தவனே கிளம்பிவா!
என்றோ
இஸ்லாமியனே எழுந்துவா!
என்றோ
எழுப்பாதீர் முழக்கம்.....
மனிதனே இணைந்துவா!
என்று முழங்கி
மானுடத்தை இனியெனும்
மகத்துவப் படுத்துங்கள்!



தீபங்களே!
நீங்கள்....
தெரிந்து கொள்ளுங்கள்....
திரிகள் மட்டுமே
கருகிக் கொண்டிருக்கின்றன....
தூண்டு கோல்கள்
சுகமாகத் தூங்குகின்றன!

இந்தியனே! இந்தியனே!
முதலில்
நீ இருக்க ஒரு
இடம் தேடு!

**– மு.மேத்தா**

**கவிஞர் மு.மேத்தா**



மு.மேத்தாவின் கண்ணீர்ப்பூக்கள் 25 பதிப்புகளையும் தாண்டி இன்னமும் உலாவரும் கவிதைத்தொகுப்பாகும். மரபில் வேரூன்றி வளர்ந்த புதுமை விருட்சம் என்பதால், கம்பரை, இளங்கோவை, வள்ளுவரை எளிமையாக்கி இன்றையவுலகில் குறியீடுகளாகவும் படிமங்களாகவும் இவரால் உலவ விட முடிந்திருக்கிறது. வானம்பாடிக் கவிஞர் இயக்கத்தில் இருந்தவர். இவரது ஆகாயத்திற்கு அடுத்த வீடு சாகித்ய அகாதமி விருது பெற்ற கவிதை நூலாகும்.

**செயல்பாடுகள்**

- மனித நேயம் தொடர்பான புதுக்கவிதைகளைத் திரட்டுங்கள்.
- கவிஞர் மு. மேத்தா கவிதைகளில் பிரதிபலிக்கும் மனிதநேயப் பிரச்சனைகள் போன்று ஏதேனும் ஒரு பிரச்சனையைப் புதுக்கவிதையாக வரையுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அலகு 4

# மொழியும் சமூகமும்

மொழியும் சமூகமும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. மொழியின் தாக்கம் சமூகத்திலும் சமூகத்தின் தாக்கம் மொழியின் மீதும் ஏற்படுகின்றது. ஒரே மொழி இடத்திற்கு இடம் வேறுபாடுகளுடன் வழங்குகின்றது. அது மட்டுமன்று. சமூகப் பிரிவுகளும் மொழியை வேறுபாடுகளுடன் ஏற்றுக்கொண்டுள்ளன. மொழியில் தோன்றும் வட்டார வழக்குகளும், சமூக வழக்குகளும் மொழியின் இயல்பைப் பிரதிபலிக்கின்றன. மொழி மாறிக் கொண்டே இருக்கும் பண்பினைப் பெற்றது. வட்டார வழக்குகள் அல்லது கிளைமொழிகள் காலப்போக்கில் பெரும் மாற்றம் பெற்று வேறு மொழிகளாக மாறிவிடக் காணலாம்.
மொழியைப் பாதுகாப்பதும் வளர்ப்பதும் நம் கடமை. அதனைப் பாதுகாக்க மொழிப்பற்று அவசியம். நாம் மொழியைப் பாதுகாக்காவிட்டால் காலப்போக்கில் மொழி இழப்பு ஏற்பட்டுவிடும். நாம் பேசும் தாய்மொழி காலப்போக்கில் நம்மிடையே இல்லாமல் போகலாம். இவ்வலகு மொழிவளர்ச்சி, மொழிப்பற்று, மொழி இழப்பு என்பன குறித்து அறிந்து கொள்ளுமாறு வடிவமைக்கப்பெற்றுள்ளது.

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- அடிப்படை மொழியியல் கூறுகளை அறிகிறார்கள். குறிப்பு எழுதுகிறார்கள்.
- தாய்மொழிக் கல்வியின் தேவை குறித்து விவாதிக்கிறார்கள்; விவாதக் குறிப்பு எழுதுகிறார்கள்.
- மொழியும் சமூகமும் பற்றிச் சிந்திக்கிறார்கள். கட்டுரை எழுதுகிறார்கள்.
- மெய்ப்புத் திருத்தம் செய்கிறார்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# மொழி வளர்ச்சி



## தமிழ் வளர்ச்சி

எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களை வாங்க
தெளிவுறுத்தும் படங்களொடு கண்டு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதும் வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்
உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிடவேண்டும்
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள்தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம் குறைகளைந்தோமில்லை
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!

**– பாரதிதாசன்**

**பாரதிதாசன்**



இவர் புதுவையைச் சார்ந்தவர். பாரதியின் மேல் கொண்ட பற்றினால் கனகசுப்புரத்தினம் என்ற பெயரை பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார். புரட்சிக் கவிஞர் என்று அழைக்கப்பட்டார். பாரதியார்க்குத் தோழனாய் இருந்தார். குடும்விளக்கு, பாண்டியன் பரிசு, சஞ்சீவி பர்வதத்தின் சாரல் முதலியன இவரது படைப்புகளாகும்.

**செயல்பாடுகள்**

- ஆங்கில மோகம் வளர்ந்துவிட்ட இக்காலத்தில் தமிழ் மொழி மேலும் வளர்ச்சியடைய என்னென்ன செய்யலாம் என்பது குறித்துக் கலந்துரையாடிக் கட்டுரை எழுதுங்கள்.

## தமிழும் மலையாளமும்

மலையாள தேசம் முற்காலத்தில் சேரநாடு என்று பெயர் பெற்றிருந்தது. சேரநாடு தமிழ்நாட்டின் ஓர் அங்கமாக விளங்கிற்று. சேர, சோழ, பாண்டியர் மூவரும் தமிழ் மன்னராகவே விளங்கினார்கள். சேரநாட்டு மன்னருட் சிலர் செந்தமிழ் நூல்கள் செய்து அழியாப் புகழ்பெற்றனர். ஆகவே, ஆதியில் சேரநாடு தமிழ் மணக்கும் திருநாடாக விளங்கிற்றென்பதில் யாதும் ஐயமில்லை.

**தமிழ்-மலையாளம் சில ஒற்றுமைகள்**

இக்காலத்தில் தமிழும் மலையாளமும் தனித்தனி மொழிகளாகக் கருதப்படுகின்றன. எனினும் இவ்விரு மொழிகளுக்கும்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நெருங்கிய ஒற்றுமை உண்டு. பேச்சுத் தமிழுக்கும் மலையாளத் திற்கும் உள்ள ஒற்றுமையைக் காட்டுகின்ற சில சொற்களைப் பார்ப்போம்.

ஒன்று என்பதைப் பேச்சுத்தமிழில் ஒன்னு என்பர். மூன்று என்பதை மூணு என்பர். மலையாளமும் இவ்வாறே ஒந்நு, மூநு என்று வழங்குகிறது. இன்னும் பன்றியைப் பன்னி என்றும், கன்றைக் கன்னு என்றும் தமிழில் வழங்குவது போலவே மலையாளமும் வழங்குகின்றது. குன்று என்பது பேச்சுத்தமிழில் குன்னு என்றாகும். தொண்டை நாட்டிலுள்ள குன்றத்தூரை குன்னத்தூர் என்றும், நீலகிரி மாவட்டத்திலுள்ள குன்றூரைக் குன்னூர் என்றும் கூறுகின்றோம் அல்லவா? மலையாளத்தில் குன்றைக் குன்னு என்றே வழங்குகின்றார்கள். இன்னும் ஒன்பதை மலையாளத்தில் ஒம்பது என்றும், ஐம்பதை அம்பது என்றும் கூறக் காண்கிறோம்.

பல தமிழ்ச் சொற்களின் பழைய வடிவம் மலையாளத்திலே விளங்குகின்றது. தமிழ் நாட்டில் தொன்றுதொட்டு அரிசி உண்டு. பண்டைத் தமிழ் நாட்டினின்றும் அரிசியை ஏற்றுமதி செய்த கிரேக்கர்கள் அதனை அருஸா என்றார்கள். அதுவே ஆங்கிலத்தில் ரைஸ்(Rice) என்றாயிற்று. அரிசி என்னும் சொல் இவ்வளவு பழமை வாய்ந்ததாயினும், பிங்கலந்தை என்ற பழைய தமிழ் நிகண்டில் அரி என்ற வடிவம் காணப்படுகிறது. திராவிட மொழிகளுள் ஒன்றாகிய துளுவத்திலும் அரி என்ற சொல் வழங்குகின்றது. மலையாளத்தில் அரிசியை அரி என்றே குறிக்கின்றார்கள். ஆதலால் அரி என்பது அரிசியின் ஆதி வடிவம் போலும்.

மற்றொரு சொல்லைப் பார்ப்போம். எலும்பு என்பது எல்லோரும் அறிந்த சொல். இலக்கியங்களில் இச்சொல் என்பு என வழங்குகின்றது.

> **அன்பின் வழியது உயர்நிலை அஃதிலார்க்கு**
> **என்புதோல் போர்த்த உடம்பு**

என்னும் திருக்குறளில் என்பு அமைந்துள்ளது. கன்னடத்தில் எலும்பை எலு என்கிறார்கள். எலும்பின் ஆதி நிலையினை நாடும் பொழுது மலையாளம் வந்து உதவுகின்றது. எல் என்பது மலையாளத்தில் எலும்பைக் குறிக்கும். அதுவே கன்னடத்தில் எலு என்றாயிற்று. தமிழில் விகுதி பெற்று என்பு என்றும், எலும்பு என்றும் அமைந்தது.

### உறவுப்பெயர்கள்

இனி, பெற்றோரையும் உற்றோரையும் குறிக்கும் சில தமிழ்ப் பதங்களைப் பார்ப்போம். பிதாவை நாம் தந்தை என்றும், தகப்பன்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

என்றும் கூறுவோம். அண்ணனைத் தமையன் என்போம். இளையவனைத் தம்பி என்போம். மூத்த சகோதரியைத் தமக்கை என்றும். இளைய சகோதரியைத் தங்கை என்றும் வழங்குவோம். தந்தை, தகப்பன், தமையன், தமக்கை, தம்பி, தங்கை இச்சொற்களின் பிறப்பு முறையில் ஓர் ஒற்றுமை இருக்கக் காண்கின்றோம் அல்லவா? தம் என்ற சொல்லின் அடியாக இப்பதங்கள் பிறந்தனவாகத் தோன்றுகின்றன. ஆனால் தகப்பன் என்ற பதத்தில் மட்டும் ககரம் எப்படி வந்தது என்று சிறிது திகைக் கின்றோம். மலையாளம் அம்மயக்கத்தைத் தீர்க்கும் மருந்தாக அமைகின்றது. மலையாளத்தில் தகப்பனைத் தமப்பன் என்கிறார்கள். ஆகவே, தம் அப்பன் என்பது தமப்பன் என்றாகித் தமிழில் தகப்பன் ஆயிற்று என்று அறிந்துகொள்கின்றோம்.

**எழில்மலை - எலிமலை**

இனி, ஒரு மலையின் பெயர் மலையாளத்தில் அடைந்த மாற்றத்தைப் பார்ப்போம். மலையாள தேசத்தில் கடற்கரையின் அருகே உள்ள ஒரு மலை எலிமலை என்னும் பெயர் பெற்றுள்ளது. ஆங்கிலத்தில் அதனை Rat Mountain என்று மொழி பெயர்த்து வழங்குகின்றார்கள். அம்மலையின் சரித்திரம் சென்னையிலுள்ள அம்பட்டன் வாராவதியின் கதையை ஒத்திருக்கின்றது. எழில் என்பது அம்மலையின் பெயர். பாண்டி நாட்டில் பொதியில் என்னும் மலை அமைந்திருத்தல் போல, மலையாள நாட்டில் எழில் என்னும் மலை விளங்கிற்று. அம்மலையை ஒரு சிற்றரசன் ஆண்டு வந்தான். அவனை ஔவையார்.

**இருள்தீர் மணி விளக்கத்(து) ஏழிலார் கோவே**

என்று பாடியுள்ளார். இப்பாட்டில் எழில் என்னும் மலை குறிக்கப்படுகின்றது. எழில் என்னும் பதத்தில் உள்ள ழகரம் நாளடைவில் நழுவிற்று. எழில்மலை எலிமலையாயிற்று. அம்மலையில் அரசு புரிந்த மன்னர் குலம் மூசிக வம்சமாயிற்று. மூசிக வம்சத்தைக் குறித்து வடமொழியில் ஒரு காவியமும் எழுதப்பட்டது. இவ்வாறாக எலிமலை என்ற பெயர் அம்மலைக்கு நிலைத்துவிட்டது.

**பக்திக் காலம்**

கி.பி. 250 முதல் கி.பி.500 வரை சுமார் இருநூற்றைம்பது ஆண்டு காலம் தமிழகத்தை ஆண்டவர்கள் களப்பிரர்கள். இவர்கள் ஆண்ட காலப்பகுதியை இருண்ட காலம் என்பர். இக்கால கட்டத்தில் தமிழகத்தில் சமண, பௌத்த சமயங்கள் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கின. இவர்களுக்குப் பின் தமிழகத்தை ஆண்டவர்கள் பல்லவர்கள். பல்லவர் காலத்தில் தமிழகத்தின் உள்நாட்டுச் சமயங்களான சைவமும் வைணவமும் புத்தெழுச்சி பெற்றன. எனவே இக்காலகட்டம் பக்தி இயக்கக் காலம் என அறியப்பட்டது. சைவச் சான்றோர்களாகிய நாயன்மார்களும். வைணவப் பெரியார்களாகிய ஆழ்வார்களும் தத்தம் சமயக் கருத்துகளை இன்சுவைப் பாடல்களால் வெளிப்படுத்தினர். தேவாரம், திருவாசகம், திருமந்திரம் போன்ற சைவத் திருமுறைகளும், பன்னிரு வைணவ ஆழ்வார்களால் பாடப்பெற்ற நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் இக்காலகட்டத்தில் எழுந்தவை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**தாழ்க்கோல் - தாக்கோல்**

இனி, மலையாளத் தாக்கோலைச் சிறிது பார்ப்போம். பூட்டைத் திறக்கும் கோல் தாக்கோல் எனப்படும். நிலைப்பூட்டுக்குத் தாழ் என்று பெயர். இக்காலத்தில் அது தாழ்ப்பாள் என வழங்குகின்றது. 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்னும் வாசகம் தமிழ்நாட்டில் உண்டு. ஆயினும் தாழ் என்றாலே போதும். திருவள்ளுவர் அன்பின் தன்மையைக் கூறுமிடத்து,

**அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல்தரும்**

என்று பாடினார். தாழைத் திறக்குங்கோல் மலையாளத்தில் தாழ்கோல் என்றும், தமிழில் திறவுகோல் என்றும் குறிக்கப் படுகின்றது. இந்நாளில் நாகரிக தமிழ்நாடு திறவுகோலைக் கைவிட்டுச் சாவியைப் பற்றிக் கொண்டது. சாவி என்பது போர்ச்சுக்கீசிய பதம். அதற்கு மேல் 'கீ' யென்னும் ஆங்கிலப் பதமும் இப்போது 'அடிபடு' கின்றது.

பழந்தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்கள் சிலவற்றை இன்றும் மலையாள தேசத்தில் காணலாம். கல்யாணத்தில் மணமகன் வீட்டார் கொடுக்கும் புடைவையைப் பெண்ணுக்கு உடுத்தும் வழக்கம் தமிழ்நாட்டில் உண்டு. அப்புடைவையைக் கூறைப் புடைவை என்பார்கள். கூறை என்றாலும் புடைவை என்றாலும் பொருள் ஒன்றே. முற்காலத்தில் புடைவை நெய்யப்பட்ட ஓர் இடத்திற்குக் கூறைநாடு என்றே தமிழர் பெயரிட்டார்கள். இக்காலத்தில் அது கொரநாடு என்ற பெயரோடு மாயவரத்திற்கு அருகே இருக்கின்றது. அங்கு நெய்யப்படும் புடைவை கொரநாட்டுப் புடைவை என்று வழங்கப்படுகிறது. மலையாள மன்னர் குடும்பத்தில் நடைபெறும் திருமணத்திற்குப் 'புடவகொட' என்று பெயர். புடவகொட என்பது புடவைக் கொடை என்பதன் திரிபேயாகும். பெண்ணுக்குப் புடவையைக் கொடுத்தல் திருமணத்தின் சிறந்த அம்சமாகக் கொள்ளப்பட்டது என்பது இதனால் நன்கு விளங்கும். காதல் மணமுறையை விவரித்துக் கூறும் தமிழ் நூல்களில் காதலன் தன் காதலிக்கு மலராலும் தளிரா லும் செய்யப்பட்ட தழை என்னும் ஆடையைக் கொடுத்து மகிழும் பழக்கம் குறிப்பிடப்படுகின்றது. அவ்வழக்கம் நாளடைவில் திருந்திக் காலத்திற்கு ஏற்றவாறு புடைவைக் கொடையாயிற்று என்று கொள்ளுதல் பொருந்தும்.

நாடாளும் அரசனைக் குறிப்பதற்குத் தமிழிலும் மலையாளத்திலும் பல சொற்கள் உண்டு. கோ. கோன், கோமான் இம்மூன்று சொற்க



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ளும் தமிழிலும் மலையாளத்திலும் அரசனைக் குறிக்கும். இளவரசனை இளங்கோ என்பர். கோயில் என்னும் சொல் தமிழிலும் மலையாளத்திலும் அரசனுக்குரிய அரண்மனையையும் கடவுளுக்குரிய ஆலயத்தையும் உணர்த்துவதாகும். ஆனால் இப்பொழுது தமிழ்நாட்டில் கோயில் என்பது பெரும்பாலும் ஆலயத்திற்கே பெயராய் அமைந்துவிட்டது.

மலையாள தேசத்தில் அரசர் குலத்தைச் சேர்ந்தாரிற் சிலர் கோயில் தம்புரான் என்று அழைக்கப்படுவர். திருவாங்கூர் தேசத்தில் பத்துக்கோயில் தம்புரான்கள் இன்றும் சிறப்புற்று வாழ்கிறார்கள். சென்ற சில நூற்றாண்டுகளாகத் திருவாங்கூர் மன்னராகத் திகழ்ந்தவர்கள் எல்லாம் கிளிமானூர் கோயில் தம்புரான் குலத்தைச் சேர்ந்தவர்களே. தமிழில் தம்பிரான் என்பது கடவுளையே குறிக்கும். சிவபெருமானுக்குத் தம்பிரான் என்பது ஒரு பெயர். இதனாலேயே சிவபிரான் தோழராக விளங்கிய சுந்தரமூர்த்திக்குத் தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று. இக்காலத்தில் சைவ சமயத்தைச் சேர்ந்த சன்னியாசிகளே தம்பிரான் என்று குறிக்கப்படுகின்றார்கள். அரசன் தெய்வத்தன்மை வாய்ந்தவன் என்பது இந்நாட்டுக் கொள்கையாதலால் மலையாளத்தில் தம்பிரான் என்று அரச குலத்தார் அழைக்கப்பெறுகின்றார்கள்.

**இடைக்காலம்**

பக்தி இயக்கக் காலகட்டத்திற்குப் பின் சுமார் 11-12 நூற்றாண்டுகளில் சில! புதிய இலக்கிய முயற்சிகள் தமிழில் தோன்றின. இக் காலகட்டத்தைத் தமிழிலக்கிய வரலாற்றின் இடைக்காலம் எனலாம். தமிழின் தலைசிறந்த கம்பராமாயணமும், அறுபத்து மூன்று சைவ சமய நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் பெரியபுராணமும், தமிழ்க்கடவுள் முருகப் பெருமானின் பெருமை கூறும் கந்தபுராணமும் இக்கால கட்டத்தில் எழுந்தவை.

**கா-காவு**

தெய்வத்தை நம் முன்னோர்கள் குளிர்ந்த சோலைகளில் வழிபட்டார்கள். அதற்குரிய சின்னங்கள் மலையாள தேசத்திலும் தமிழ்நாட்டிலும் இன்றும் காணப்படுகின்றன. செங்கோட்டைக்கு அருகே மலையாள தேசத்தில் ஆரியங்காவு என்ற ஊர் இருக்கிறது. காவு என்பது சோலை. எனவே, ஆரியங்காவு என்றால் ஆரியன் சோலை. ஐயப்பன் வழிபாடு சிறப்பாக நடைபெறுகின்றது. தமிழ் நாட்டார் ஐயப்பனை ஐயனார் என்றும், சாத்தன் என்றும், வணங்குவார்கள். காலத்தில் மழை பெய்யாவிட்டால் அய்யனாருக்குப் பொங்கலிட்டுப் பூசை செய்வார்கள். அறுவடை முடிந்தபின் ஐயனாருக்குச் சிறப்பாக வழிபாடு செய்வார்கள். தமிழ்நாட்டு ஐயனாரே மலையாளத்தில் ஐயப்பனாக விளங்குகின்றார். ஆரியன் என்பது ஐயப்பனுக்கு ஒரு பெயர். ஆகவே, ஆரியன்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

காவு என்று ஐயப்பன் சோலை அழைக்கப்படுகின்றது. இன்னும், மலையாள தேசத்தில் நாகம் வாழ்கின்ற காவுகள் ஆயிரக்கணக்காக உண்டு. பாம்புக் காவு என்பது அவற்றின் பெயர். அக்காவில் முளைக்கின்ற மரஞ்செடிகளை வெட்டுவதில்லை. அங்கு வாழ்கின்ற பாம்புகளுக்குப் பால் வார்ப்பார்கள். இவ்வாறு காவில் தெய்வத்தை வழிபட்டுச் செய்யும் வழக்கம் தமிழ்நாட்டிலும் இருந்தது. சீர்காழிக்கு அருகே ஒரு சிவஸ்தலம் உள்ளது. அதன் பெயர் கோலாக்கா.

**கூத்தனை, குருமாமணி தன்னை, கோலக் காவினில்**
**கண்டுகொண் டேனே**

என்பது தேவாரம். கா என்பது சோலை. அதுவே மலையாளத்தில் காவு என்றாயிற்று. தேவாரப் பாடல் பெற்ற ஸ்தலங்களுள் பல காவுகள் உண்டு. திருச்சிராப்பள்ளிக்கு அண்மையிலுள்ள திருஆனைக்கா இப்பொழுது திருவானைக்காவல் என வழங்குகின்றது. நெல்லிமரச் சோலையாகிய திருநெல்லிக்கா இக்காலத்தில் திருநெல்லிக்காவல் என்று பெயர்பெற்றுள்ளது. ஆகவே, சோலையைக் கோயிலாகக் கொண்டு வழிபாடு செய்த பண்டை வழக்கத்தைத் தமிழும் மலையாளமும் நன்கு காட்டுகின்றன. இதுகாறும் கூறியவற்றால் பழக்கவழக்கங்களிலும், சொல்லாக்கத்திலும் தமிழகத்தார்க்கும் மலையாளத்தார்க்கும் உள்ள ஒருமைப்பாடு நன்கு விளங்கும்.

**–ரா.பி. சேதுப்பிள்ளை**

**ரா.பி. சேதுப்பிள்ளை (1896 – 1961)**
வழக்குரைஞராக வாழ்க்கையைத் தொடங்கிப் பின்னர்த் தமிழறிஞராகச் சிறப்புற்றுத் தமிழ்த்தொண்டு புரிந்தவர். பல்சுவை நிரம்பிய இலக்கியச் சொற்பொழிவுகளால் மக்களைத் தம் பக்கம் ஈர்த்தமையால் சொல்லின் செல்வர் எனப் பாராட்டப் பெற்றார். இவர் இருபத்தைந்ததிற்கும் மேற்பட்ட நூற்களை எழுதியுள்ளார். இவரது அழகுத் தமிழுக்கும் ஆய்வுத்திறனுக்கும் எடுத்துக்காட்டாக ஊரும் பேரும் என்னும் நூல் விளங்குகிறது. இவர் பன்மொழிப்புலமை பெற்றவர்.

**செயல்பாடுகள்**

- அன்றாட வாழ்வில் பேசப்படும் சொற்களைச் சேகரித்து (தமிழ், மலையாளச் சொற்கள்) இரு மொழி ஒற்றுமை குறித்துக் கட்டுரை எழுதுங்கள்.
- மொழி ஒற்றுமை குறித்துக் கட்டுரை எழுதுங்கள்.
- தமிழ் – மலையாள அகராதி தயாரித்து வெளியிடுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com





## மொழிப்பற்று

பொதுவாகத் தமிழ் வழியிலேயே கல்வி பயில வேண்டும். தமிழே நிர்வாக, நீதி மொழியாக இருக்க வேண்டும். கூடுமானவரை தமிழிலேயே பேச வேண்டும். தலைப்பு எழுத்து இட்டுத் தமிழிலேயே கையொப்பிட வேண்டும். குழந்தை களுக்குத் தமிழ்ப் பெயரே வைக்க வேண்டும் என்றெல்லாம் நாம் சொல்வது 'தமிழர் என்பதற்கான அடையாளக் காப்பு' என்கிற வகையில் தானே தவிர மற்றபடி பிற மொழிகளின் பால் உள்ள காழ்ப்பு, வெறுப்புக் காரணமாகவோ அல்லது அம்மொழிகளின் பால் அது போன்றதொரு உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவோ அல்ல. காரணம், மற்ற மொழிகளும் ஒரு சமூகப் பிரிவினால் பேசப்படுகிறது; அவர்களின் தாய்மொழியாக இருக்கிறது. எனவே இந்த ஆபத்தைப் பற்றிச் சிந்தித்துத் தமிழைக் காப்பாற்ற வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## மொழியும் மொழிக் கல்வியும்

தமிழே கல்வி மொழி, பயிற்று மொழி என்று நாம் சொல்லும்போது, தொடக்கக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை அனைத்துக் கல்வியையும் தமிழிலேயே வழங்கு என்று நாம் கோரும்போது, ஒருவர் உலக அறிவு வளத்தையெல்லாம் தன் தாய்மொழி வாயிலாகவே பெறவேண்டும். அந்த சனநாயக வாய்ப்பு அவருக்கு உறுதி செய்ப்பட வேண்டும் என்கிற அடிப்படையில்தானே தவிர, மற்றபடி அவர் தமிழ் தவிர வேறு எந்த மொழியையுமே கற்கக் கூடாது என்பதற்காக அல்ல. அவர் தமிழைக் கல்வி மொழியாகக் கொண்டு பயின்று கொண்டே அவர் விருப்பம், ஆற்றல், வாய்ப்புக் கேற்ப அவர் தேர்வு செய்யும் எந்த மொழியையும், எத்தனை மொழிகளையும் வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலம். இதற்கு எந்தத் தடையும் இல்லை. இருக்கவும் கூடாது.

12ஆம் வகுப்பு வரை தமிழில் படித்தவர் உயர்கல்வியனைத்தும் ஆங்கிலத்தில் இருப்பதைப் பார்த்து மிரள்கிறார். தான் ஆங்கில வழியில் படித்திருந்தால் தொல்லையில்லையே, தமிழ் வழியில் படித்துத் தவறு செய்துவிட்டோமோ என்று மனம் பொருமுகிறார். தான் ஆங்கில வழியில் படித்திருந்தால் இந்த இடத்துக்குக்கூட வந்திருக்க முடியாது என்பதோ, அல்லது ஆறு மாதத்தில் இந்த ஆங்கிலவழி உயர் கல்வியை வென்றுவிடலாம் என்பதோ அவருக்குப் புரிவதில்லை.

மூன்றாம் வகுப்பிலிருந்து ஒரு மொழிப் பாடமாக இருக்கும் ஆங்கிலத்தைப் பத்தாம் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் ஒருவர் முறையே, 10 ஆண்டுகள் இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தைப் பயிலுகிறார். இன்றுள்ள நவீன பயிற்றுமுறைகளின் படி, ஆங்கிலப் பாடப் புத்தகங்களில் உள்ள பயிற்சிகளை ஆசிரியர் முறையாகக் கற்பித்து, மாணவனும் கற்றிருந்தால் பத்தாம் வகுப்பு, 12ஆம் வகுப்பு முடிக்கும் ஒரு மாணவன் சரளமாக ஆங்கிலம் படிக்கவும் எழுதவும் புரிந்துகொள்ளவும் முடியும். ஆனால் அப்படி யாரும் கற்றுத் தருவதுமில்லை. கற்றுக் கொள்வதுமில்லை என்பதுதான் குறையே தவிர தமிழ் வழியில் படித்ததனால் நேர்ந்த குறை அல்ல இது.

## தமிழிலேயே பேசுவது, எழுதுவது

இது கூடுமானவரை பிற மொழிச் சொற்கள் கலவாமல் தமிழிலேயே பேச, எழுத முயல வேண்டும் என்பதற்காகத்தானேயொழிய, அதை விட்டு, இதை அப்படியே வறட்டுத்தனமாக ஆக்கி, தூய



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தமிழ் என்பதன் பேரால் இது மக்களுக்குப் புரிகிறதா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், அதாவது தமிழ் மக்களைப் பற்றி எனக்கு அக்கறையில்லை, தமிழ் மொழி அதன் காப்புதான் எனக்கு முக்கியம் என்பது போல மொழித்தூய்மைக்கு முதன்மை தருவது, தூய தமிழில் பேசுவது, எழுதுவது என்று சாதாரண மக்களிடமிருந்து அந்நியப்படுவதற்காக அல்ல.

தமிழில் பிறமொழிச் சொற்கள் பற்றி நாம் ஒரு கருத்தைச் சிந்திக்க வேண்டும். தமிழில் வந்து கலக்கும் பிற மொழிச் சொற்கள் தமிழுக்கு வளம் சேர்ப்பதானால், அது கிடந்து போகட்டும் என்று விட்டுவிடலாம். அல்லாது அது ஏற்கனவே தமிழில் உள்ள வளமான சொற்களைப் பயன்பாட்டிலிருந்து அகற்றி, ஆக்கிரமிப்பு நிகழ்த்துமானால் அதைத் தடுத்து விடலாம், தடுத்து விடவும் வேண்டும்.

இதில் வகைப் பிரிவுகள் செய்து, கலப்புத்தமிழ் பற்றிச் சிந்திக்கும் முன் ஒரு செய்தியைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அதாவது சங்க இலக்கியம் எனப் படுபவற்றுள்ளேயே வடமொழிச் சொற்கள் பல கலந்துள்ளன. பின் தமிழக வரலாற்றில் நேர்ந்த பல்வேறு படையெடுப்புகள் காரணமாக, பாரசீக, அரபி, உருது, தெலுங்கு, மராத்தி, ஆங்கிலம் எனப் பல மொழிச் சொற்கள் தமிழகத்திற்குள் புகுந்து அதனதன் பங்குக்குச் சில சொற்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்து, இன்று அவை தமிழக மக்களிடம் இரண்டறக் கலந்த தமிழ்ச் சொற்கள் போலவே, உலா வந்துகொண்டிருக்கின்றன.

தமிழ்ச் சொல் போல மக்கள் மத்தியிலே கலந்துவிட்ட சொற்களையும், இவையல்லாத தூய தமிழ்ச் சொற்களையும், இனம் பிரிப்பது கடினம். ஆகவே தமிழில் பிறமொழிச் சொற்கள் பிரச்சினையில் நாம் ஏற்கெனவே குறிப்பிட்ட அணுகுமுறையைக் கையாள வேண்டும்.

**சிற்றிலக்கியங்கள்**

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டை ஒட்டித் தமிழகத்தில் சோழ, பாண்டிய பேரரசுகள் வீழ்ச்சியடைந்தன. தெலுங்கர்களாகிய நாயக்கர்களின் ஆட்சி தமிழகத்தில் ஓங்கியது. தாய்மொழித் தமிழுக்கு மதிப்பு கிடைக்காத இக்காலகட்டத்தில் பேரிலக்கியங்கள் தோன்றவில்லை என்றே கூறலாம். ஆயினும் சிற்றிலக்கியங்கள் ஏராளமாகத் தோன்றின. கடவுள், அரசர், வள்ளல்கள், சான்றோர் போன்றோரைப் புகழ்ந்து பாடுவதையே நோக்கமாகக் கொண்டவை சிற்றிலக்கியங்கள். சிறிய அளவிலான இந்நூல்களைப்

### தொழில்நுட்பச் சொற்கள்

இதேபோலவே சில தொழில்நுட்பத்துறை சார்ந்த சொற்களைத் தமிழ்ப்படுத்த முடிந்தால் படுத்திக்கொள்வோம். இல்லாவிட்டால் அதற்காக வலிந்து திணித்துக்கொண்டிருக்கத் தேவையில்லை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

எடுத்துக்காட்டாக மிதிவண்டி, பேருந்து, தொடர்வண்டி என்கிறோம். இவை பொதுச்சொற்கள், பொதுமக்களால் பயன்படுத்தப்படும் சொற்கள். ஆனால் மிதிவண்டி, பேருந்து, தொடர்வண்டி ஆகியவற்றின் உதிரி பாகங்கள் அனைத்தையும் முழுமையாகத் தமிழில் கொண்டுவர முடியுமா என்றால் பலது முடியலாம். சிலது முடியாமலும் போகலாம். அதற்காக அதை வலிந்து தமிழாக்கம் செய்துகொண்டிருக்கத் தேவையில்லை. அது தமிழில் ஏற்கனவே உள்ள எந்தத் தமிழ்ச்சொல்லையும் அழித்துவிடவும் போவதில்லை.

அதோடு எந்த ஒரு சொல்லும் அது எந்த அளவு மக்களால் பயன்படுத்தப்படுகிறதோ அந்த அளவே அதன் உயிர்ப்பு. மக்கள் ஏற்காத எந்த ஒரு சொல்லையும் நாம் வலிந்து வளர்த்து விடவும் முடியாது. அதேபோல மக்களாகத் தங்கள் அனுபவத்தில் உரு வாக்கும் எந்த ஒரு சொல்லையும் நாம் அழித்துவிடவும் முடியாது. ஆகவே, எந்த ஒரு சொல்லும் மக்களால் பயன்படுத்தப்படுகிறதா என்பதே மிகவும் முக்கியம்.

இவ்வாறே எல்லாத் தொழில்நுட்பச் சொற்களும், அதாவது ஒரு தொழில்நுட்பத் துறையைத் தமிழால் அழைப்பது வேறு. அத்தொழில்நுட்பம் சார்ந்த அனைத்துச் சொற்களையும் தமிழால் அழைப்பது வேறு. பிற துறை சார்ந்த சொற்களுக்கும் இதுவே.

இதில் எந்த அளவு சாத்தியமோ அந்த அளவு தமிழைப் பயன் படுத்தினால் போதும். மற்றபடி அதற்காகச் செயற்கையாக மல்லுக் கட்டிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. எனவே இந்த வேறுபாடு களைப் புரிந்து, தமிழ்ப் பற்றாளர்கள் தங்கள் தமிழ்ப் பாசத்தை வெளிப்படுத்த வேண்டும்.

ஆகச் சுருக்கமாகத் தமிழைக் காக்க, தமிழை வளர்க்க ஆற்ற வேண்டிய பணிகள் முக்கியமாக மூன்று :

1. தமிழ்ப்பற்று என்பதன் பேரால் தமிழின் மீது அளவு மீறிப் பற்று வைத்து, தமிழை மட்டுமே படிக்க வேண்டும், பிற மொழி எதையும் கற்கக் கூடாது எனப் பிற மொழியின் பால் தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் போக்கையோ, அதை இழிவாய், மலிவாய்க் கருதும் போக்கையோ உருவாக்கவோ, பரப்பவோ, அப்படி ஒரு மனநிலையைக் கட்டமைக்கவோ கூடாது என்பதில் கவனமாயிருக்க வேண்டும்.

2. தமிழ்ப்பற்று என்பதன் பேரால், தமிழின் மீது அளவுக்கு மீறிப் பற்று வைத்து, பிற மொழிக் கலப்பில்லாத தூய தமிழ் பேசுகிறேன் என்று, ஒவ்வொரு சொல்லாக ஆராய்ந்து இது அரபி, இது பார்சி, இது தெலுங்கு, இது மராத்தி என்று ஒவ்வொரு சொல்லாக



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

விலக்கத் தமிழின் கலைச்சொற்களின் எண்ணிக்கையைக் குறைத்துத் தமிழை வறட்சியடைய வைத்துவிடக்கூடாது. பண்டிதத் தமிழ் பேசி மக்களிடமிருந்து நாமும் அந்நியப் பட்டுத் தமிழையும் அந்நியப்படுத்திவிடக் கூடாது.

3. அடுத்தது மிக மிக முக்கியமானது. தமிழ் மீது அளவு கடந்த பற்று, பாசத்தோடு இருக்கும் பல தமிழ் உணர்வாளர்கள் வீட்டுப் பிள்ளைகள் அல்லது பேரப்பிள்ளைகள் ஆங்கில வழியில் பயில்கின்றனர். இவர்கள் ஆங்கிலம் அல்லது வேறு ஏதோ மொழிகளைப் பயில்வதை யாரும் வேண்டா மென்று சொல்லவில்லை. ஆனால் படிப்பதே தமிழ் வழியில் அல்லாமல் ஆங்கில வழியில் படிப்பது தான் கொடுமை.

இப்படித் தங்கள் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள் ஆங்கில வழியில் படிப்பதற்குத் தமிழ்ப் பற்றாளர்கள் ஆயிரம் காரணங்கள், சமாதானங்கள் சொன்னாலும் எதையும் ஏற்க முடியாது. இப்படிப் பார்த்தால் ஒவ்வொருவருக்கும் ஒரு காரணம் இருக்கும். இப்படி அவரவரும் ஆளுக்கு ஒரு காரணம் சொல்லித் தங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளை ஆங்கில வழியில் படிக்க வைத்தால், அப்புறம் தமிழ்வழிக் கல்வியை யார்தான் நம்புவார்கள்? யார்தான் தமிழ்வழியில் படிக்க வைக்க முன் வருவார்கள்?

எனவே இதைக் கருத்தில் கொண்டு நாம் தமிழ்ப் பற்றை ஏதோ நம் இலட்சியத்தை அடையாளம் காட்டும் அலங்காரப் பொருளாகவோ மேடையில் முழக்கும் வெற்றுக் கூச்சலாகவோ ஆக்காமல் தமிழக மக்களை, தற்போதுள்ள நிலைமைகளில் அவர்களது உணர்வுகளைப் புரிந்து, அறிவியல் நோக்கிலும் நடைமுறை நோக்கிலும் சிந்தித்துத் தமிழ்ப் பற்றை வெளிப்படுத்த வேண்டும்.

**இராசேந்திர சோழன், (தமிழினி, 2008)**

பிரபந்தங்கள் என்றும் குறிப்பிடுவர். பாடப்படுவோரைப் புகழ்ந்துபாடிப் பரிசில் பெறுவதையே நோக்கமாகக் கொண்ட இவ்விலக்கியங்களின் பாடுபொருள்கள் ஒன்றாகவே இருந்தாலும் பல்வேறு வடிவங்களிலும் முறைகளிலும் பாடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு 96 வகையான இலக்கிய வடிவங்கள் தமிழில் இருப்பதாகக் குறிப்பிட்டனர். பரணி, உலா, தூது, கலம்பகம், குறவஞ்சி, அந்தாதி, பிள்ளைத்தமிழ், கோவை போன்றவை அவற்றுள் சில. கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கும் பதினேழாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இத்தகைய இலக்கிய வகைகள் மிகுதியாகத் தோன்றின.

**செயல்பாடுகள்**

- ‘எது சிறந்தது? தாய்மொழிக் கல்வியா, ஆங்கிலக் கல்வியா?’ பட்டிமன்றம் நடத்துங்கள். அதற்குரிய சொற்பொழிவு தயார் செய்யுங்கள்.
- தாய்மொழிக் கல்வியின் பயன்களையும் சிறப்புகளையும் விளக்கித் துண்டுப்பிரசுரம் தயார் செய்யுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## வீரமாமுனிவர்

இத்தாலியில் பிறந்த மகத்தான தமிழ் அறிஞர் வீரமாமுனிவர். அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் சில...

- கிறிஸ்துவ குருவான இவர் மதப்பிரச்சாரத்துக்காக 1710ஆம் ஆண்டு கோவாவுக்கு வந்தார். அங்கிருந்து தமிழகம் வந்து சேர்ந்தார்.



- மதத்தைப் பரப்ப உள்ளூர் மொழியைத் தெரிந்துகொள்வது அவசியம் என்பதை உணர்ந்தார். அதற்காகத் தமிழ் கற்றார். தமிழ் அவரைத் தன்னுள் இழுத்துக்கொண்டது. சுப்ரதீபக் கவிராயரிடம் தமிழ் இலக்கணம், இலக்கியம் கற்றுத்தேர்ந்தார். விரைவிலேயே இலக்கியப் பேருரைகள் நடத்தும் அளவுக்குப் புலமை பெற்றார்.
- கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்ற தனது இயற்பெயரை முதலில் தைரியநாதன் என்றுதான் மாற்றிக்கொண்டார். பிறகு அதுவும் சமஸ்கிருதம் என்று அறிந்து வீரமாமுனிவர் என்று வைத்துக்கொண்டார் இந்த முன்னுதாரணப் புலவர்.
- இலக்கணம், இலக்கியம், அகராதி ஆகியவற்றைப் படைத்தார். திருக்குறளை லத்தீன் மொழியிலும் தேவாரம், திருப்புகழ், நன்னூல், ஆத்திச்சூடி ஆகியவற்றைப் பல்வேறு ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட்டார்.
- வெளிநாட்டினர் தமிழ் கற்கவும், தமிழர்கள் பிறமொழி களைக் கற்கவும் உதவியாகத் தமிழ்-லத்தீன் அகராதியை உருவாக்கினார். ஆயிரம் தமிழ்ச் சொற்களுக்கு லத்தீனில் விளக்கம் கொடுத்தார். தொடர்ந்து 4400 சொற்களைக் கொண்ட தமிழ் - போர்ச்சுகீசிய அகராதியைப் படைத்தார். நிகண்டுக்கு மாற்றாகப் பெயர் அகராதி, பொருள் அகராதி, தொகை அகராதி, தொடை அகராதி ஆகிய பகுப்புகளைக் கொண்ட சதுரகராதியைத் தொகுத்தார்.
- அந்தக் காலத்தில் சுவடிகளில் மெய் எழுத்துகளுக்குப் புள்ளி வைக்காமல் கோடு போடுவது வழக்கம். நெடில் எழுத்துகளைக் குறிக்க, ர சேர்த்தனர். இதை மாற்றி ஆ, ஏ, ஓ ஆகிய நெடில் எழுத்துகளைக் கொண்டு வந்தார். பல்வேறு தமிழ் இலக்கிய,



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இலக்கணங்கள் கவிதை வடிவில் இருந்தன. மக்கள் சிரமமின்றிப் படிக்க வேண்டும் என்ற நோக்கில் அவற்றை உரைநடை யாக்கினார்.

- தொன்னூல் விளக்கம் என்ற நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைத் தொகுத்தார். கொடுந்தமிழ் இலக்கணம் என்ற நூலில் தமிழில் முதன் முதலாகப் பேச்சுத் தமிழை விவரித்தார்.
- உரைநடையில் வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக் கண்ணாடி, செந்தமிழ் இலக்கணம், வாமன் கதை ஆகியவற்றைப் படைத்தார். தமிழின் முதல் நகைச்சுவை இலக்கியம் என்று போற்றப்படும் பரமார்த்தகுருவின் கதை நூலைப் படைத்ததும் இவரே.
- இயேசு காவியமான தேம்பாவணியை இயற்றினார். இவரைப்போல வேறு எந்தக் காப்பியப் புலவரும் சிற்றிலக்கியம், அகராதி, இலக்கணம், உரைநடை எனப் பல இலக்கிய வகைகளிலும் நூல்கள் படைத்ததில்லை.
- தமிழில் 23 நூல்களை எழுதியுள்ளார். ஒன்பது மொழிகளில் புலமை பெற்றவர். பெயராலும், பண்பாட்டாலும் தமிழராகவே வாழ்ந்தவர், தனது 67ஆவது வயதில் மறைந்தார்.

**– ராஜலட்சுமி சிவலிங்கம்.**

**வீரமாமுனிவர் எழுதிய நூல்கள்**

- தேம்பாவணி
- திருக்காவலூர் கலம்பகம்
- அடைக்கலமாலை
- கலிவெண்பா
- அன்னை அழுங்கல் அகராதி
- கித்தேரியம்மாள் அம்மானை
- வேதியர் ஒழுக்கம்
- வேத விளக்கம்
- பேதக மறுத்தல்
- ஞானமுணர்த்தல்
- திருச்சபைக் கணிதம்
- வாமன கதை
- பரமார்த்தகுரு கதை
- சதுரகராதி
- தொன்னூல் விளக்கம்
- கொடுந்தமிழ் இலக்கணம்

**செயல்பாடுகள்**

✍ தமிழ் வளர்ச்சிக்குச் சேவை செய்த பிறநாட்டாரின் தமிழ்த்தொண்டுகள் குறித்துக் கருத்தரங்கு நடத்துங்கள். கருத்தரங்கக் கட்டுரை தயார் செய்யுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

௮

# மொழி இழப்பு



## மொழி இழப்பு

மொழி பேசும் ஒரு சமூகம் ஏதாவது ஒரு காரணத்தினால் முற்றிலும் அழிந்துவிட்டால் பேச்சு வழக்கில் மாத்திரம் உள்ள அவர்களது மொழி உலக வழக்கிலிருந்து நீங்கிவிடுகிறது. இதனை மனித உயிர் இழப்பால் நேரிடும் மொழி இழப்பு எனலாம். 1995 நவம்பர் 4 ஆம் தேதிவரை (ஆப்பிரிக்க நாட்டு) காமரூனின் அதமவா மாகாணத்தின் மாம்பிலாப் பகுதியில் வாழ்ந்து வந்த கசபெ என்ற மொழி, அம்மொழி பேசி வந்த கடைசி மனிதரான போகன் என்பவர் 1995 நவம்பர் மாதம் 5 ஆம் நாள் இறந்துவிடப் பேச்சுவழக்கில் மாத்திரமே இருந்து வந்த அந்த மொழி அம்மனிதரோடு உலகில் இருந்து நீங்கியது, அந்த மனிதர்க்கு ஒரு சகோதரி உள்ளார். அச்சகோதரியோ யாராவது அந்த மொழியைப் பேசினால் புரிந்துகொள்வார். ஆனால் அம்மொழி பேசும் ஆற்றலை அவர் கொண்டிருக்கவில்லை. அந்தமான் தீவுகளில் ஒன்றான ஸ்டிரெய்ட் அயலண்டு என்ற தீவில் அண்மையில்




Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

நிகழ்ந்த சுனாமி பேராபத்துத் தாக்காததால் 45 நீக்கிரிட்டோ பழங்குடியினரால் மட்டுமே பேசப்பட்டு வரும் அந்தமானிய மொழி அழிவிலிருந்து தப்பிப் பிழைத்துள்ளது.

ஒரு சமூகத்தின் முழு அழிவால் நேரிடும் மொழி இழப்பு விபத்து போன்றது. ஒரு மொழி பேசும் சமுதாயத்தில் குழந்தைகள் தங்கள் பெற்றோர் அல்லது முன்னோர் மொழியைக் கற்றுக்கொள்வதை முழுவதுமாக நிறுத்திவிட்டால் அந்த மொழி கால ஓட்டத்தில் தனது இறப்பைச் சந்திக்க நேரிடும். ஏனெனில், குழந்தைகள் தங்கள் மொழியைக் கற்பதை நிறுத்திவிட்டால், குறிப்பிட்ட அந்த மொழிச் சமுதாயத்தில் குழந்தைகள் நீங்கலாக உள்ள எஞ்சியோர் இறந்துபோகும்போது அவர்கள் மொழி, உலகிலிருந்து நீங்கத் தொடங்கிவிடும். ஒரு சந்ததியினரிடம் இருந்து மொழி அடுத்த சந்ததியினரிடம் சென்றடையும்போதுதான் தொடர்ந்து வாழும். குழந்தைகள் எப்போது தங்கள் மொழியைக் கற்பதை நிறுத்திவிடுகிறார்களோ அப்போது, குழந்தைகள் நீங்கலாக எஞ்சியுள்ள மற்றவரிடம் இருந்து, அந்த மொழி அழியத் தொடங்குகிறது. இறுதி மனிதர் இருக்கும் வரை அந்த மொழிவாழும். அந்த மனிதரும் இறந்து விட்டால் அவரோடு அந்தமொழி உலக வழக்கிலிருந்து நீங்கி விடும்.



### மொழி இழப்பு இயற்கையானதா?

உயிரியலாளர்கள் ஓர் உயிர் இனத்தின் ஆயுட்காலம் பொதுவாக ஐந்து முதல் பத்து மில்லியன் ஆண்டுகள் என்பர். 3.5 பில்லியன் வருடங்களுக்கு முன்பு தோன்றிய உயிரினங்களில் 95 விழுக்காடு உயிரினங்கள் இன்று உலகில் இல்லை. இது போன்ற அழிவு, மொழிகளுக்கும் பொருந்துமா?

உலகில் எத்தனை மொழிகள் இருந்தன. எத்தனை அழிந்து விட்டன. முன்பு இருந்ததைவிட அதிகமான மொழிகள் தற்போது உள்ளனவா என்பன போன்ற வினாக்கள் இந்த அடிப்படையில் எழலாம். மொழிகள் வரலாற்றுக் காலத்தில் பத்தாயிரத்திலிருந்து பதினைந்தாயிரம் வரை இருந்திருக்கலாம் என்பது ஒரு கணிப்பு. எண்ணிக்கை என்னவாக இருந்தபோதிலும், ஒரு காலகட்டத்தில் எல்லா மொழிகளும் வாழ்ந்திருக்க முடியாது. வரலாற்று மொழியியலின் நோக்கில் சில மொழிகள் பலமொழிகளாகப் பெருகியிருக்கலாம். சில மொழிகள் அழிந்திருக்கலாம். எடுத்துக்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

காட்டாக, ஐரோப்பியக் காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் உரோமப்பேரரசு விரிவுபடுத்தப்பட்டபோது காலனியாதிக்கத்திற்கு உட்பட்ட பல்வேறு மக்கள் தங்கள் பூர்வீக மொழிகளைப் புறந்தள்ளி இலத்தீன் மொழியைத் தழுவ, அதுவே பின்னாளில் ருமேனிய மொழி, பிரெஞ்சு மொழி, போர்ச்சுக்கீசிய மொழி, ஸ்பானிய மொழி என ரொமான்ஸ் மொழிகளாக மாறின என்பர்.

அப்படியானால் உயிர் இனங்களைப் போலவே மொழிகளுக்கும் ஆயுட்காலம் என்று ஒன்று உள்ளதா? மொழிகள் தோன்றுவதும் பல்கிப் பெருகுவதும், அழிவதும் உயிர் இனங்களின் வாழ்வியல் நெறியைப் போலவே இயற்கையானதா?

இயற்கையில் காணப்படும் உயிரினங்களை மொழிகளோடு ஒப்பிட்டுச் சமமாகக் காண்பது சரியல்ல. உயிரினம் ஒன்றை, ஒரு மொழியோடு சமமாகக் கொள்ள முடியாது. ஒரு பறவை அல்லது சில பறவைகள் அழிந்தால் பறவை இனமே அழிவதில்லை. ஒரு மனிதன் அல்லது சில மனிதர்கள் இறந்துவிடுவாதலேயே அவர்கள் பேசும் மொழியும் அழிந்துவிடுவதில்லை. ஆனால், (எடுத்துக்காட்டாக) தமிழ்க் குழந்தை தான் பிறந்து வளர்ந்த சமுதாயச் சூழலுக்கு ஏற்ப அந்த மொழியைக் கற்றுக் கொள்கிறது. இங்கிலாந்துச் சூழல் என்றால் சூழலுக்கு ஏற்பத் தமிழ்மொழியை இழந்து ஆங்கில மொழியைக் கற்றுக்கொள்கிறது. ஆப்பிரிக்கச் சூழல் என்றால் ஓர் ஆப்பிரிக்க மொழியைக் கற்றுக்கொள்கிறது. ஆனால், ஒரு பறவை தனது இனமான பறவைகளின் கூட்டத்தில் வளராமல், குதிரைகளின் கூட்டத்திற்கிடையே வளர்ந்தால் கூட அது குதிரையாக மாறாது.

ஆனால் ஒரு மனிதர் ஒரே நேரத்தில் தமிழ் பேசுபவராகவும் கன்னடம் பேசுபவராகவும் இருக்க முடியும். மனித குலத்துக்கு மாத்திரமே சொந்தமாக உள்ள மொழிகளை உயிர் இனங்களோடு ஒப்பிடுவது சரியல்ல.

பின்வரும் ஒப்புமை வேண்டுமானால் சரியாக இருக்கலாம். உயிர் இனங்கள் பருவகாலத்திற்கு ஏற்பத் தங்கள் இயற்கையில் கற்ற சில வழக்கங்களை மாற்றிக்கொள்கின்றன அல்லவா? எடுத்துக்காட்டாக, குளிர்ப்பகுதிகளில் வாழும் ரெயின்டீர் என்ற மான்வகை மழைக்காலத்தில் சில வகை உணவுகளை உட்கொள்ளும்; கோடைக்காலத்தில் வேறு வகையான உணவுகளை உட்கொள்ளும் இந்த நியதியை இந்த உயிரினம் இயற்கையில் இருந்து



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கற்றுக்கொண்டுள்ளது. மனித குலம் இந்த மான் வகையைப் போலச் சில சமுதாயச் சூழல்களில் ஒரு மொழியையும் (அல்லது மொழிகளையும்) வேறு சில சமுதாயச் சூழல்களில் வேறு ஒரு மொழியையும் (அல்லது மொழிகளையும்) பயன்படுத்துகின்றது. பன்மொழிச் சூழலில் இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளைப் பயன்படுத்த மனித இனம், தான் வாழும் சமுதாயச் சூழலில் இருந்து கற்றுக்கொள்கிறது.

இன்னும் சிலர் இயற்கை அறிவியலைச் சார்ந்து இப்படியும் விவாதிப்பர். இயற்கையில் சுற்றுச்சூழல் மாற்றம் ஏற்படும்போது வலிமையற்ற சில நலிந்த உயிரினங்கள் சூழல் மாற்றத்திற்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ள முடியாமல் அழிவைச் சந்திக்கின்றன. இதுபோல, இன்றைய தொழில்நுட்பம், சந்தைப் பொருளாதாரம் போன்ற இவற்றின் முன்னேற்றத்திற் கேற்பத் தங்களை மாற்றிக் கொள்ளும், வளர்த்துக் கொள்ளும் மொழிகள் வாழ்கின்றன. தொழில் நுட்ப வளர்ச்சிகளை எதிர்கொள்ள முடியாத, பண்பாட்டு மரபுகளை மட்டுமே தழுவிக் கொண்டுள்ள மொழிகள் அழிந்துவிடுகின்றன. தற்போதைய காலகட்டத்தின் தேவைகளை நிறைவேற்ற முடியாத இது போன்ற வலிமையற்ற மொழிகள் உலகில் வாழ்வதில் பொருளில்லை. ஏகாதிபத்தியத்தின் பாற்பட்டது. இக்கட்டத்தில் ஒன்றை நினைவுகூர்வது நல்லது. எந்த மொழியும் தன் இயல்பில் வலிமையற்றதோ வலிமை யானதோ அல்ல. மனிதர்கள்தான் சில சமுதாய மொழியியல் காரணங்களுக்காகப் பயன்படுத்திப் பயன்படுத்தி வலிமையான மொழிகளாக மாற்றுகிறார்கள். பயன்படுத்தப்படாமலேயே பல மொழிகள் வலிமை குறைந்த நிலையிலேயே நின்றுவிடுகின்றன.

மனித குலத்தின் இச்செயல்பாட்டை வழிநடத்திச் செல்லும் செயலிகள் போல உள்ள அரசியல் சந்தைப் பொருளாதாரச் சக்திகள்தான் மொழிகளுக்கிடையே அதிகார வேற்றுமைகளை உண்டாக்கிவிடுகின்றன. எனவே, மொழிகள் தங்களுக்குள்ளே வலிமை, வலிமையற்றவை என்ற பண்புகளைக் கொண்டிருக்கவில்லை என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். மனித குலம், அதன் செயலிகள் மூலமாக

### இடைக்காலக் கவிஞர்கள்

தமிழ்க் கவிஞர்களில் அதிகமாகப் பேசப்படுகின்ற சில கவிஞர்கள் இடைக்காலத்தில் வாழ்ந்தவர்கள். இவர்களுள் திருப்புகழ் தந்த அருணகிரிநாதர், ஔவையார், இரட்டைப்புலவர்கள், சிலேடை பாடுவதில் வல்லவராக விளங்கிய காளமேகப்புலவர், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் பாடிய குமரகுருபரர், தனிப்பாடல்கள் பல பாடிய தத்துவராயர், பராபரக்கண்ணி, பைங்கிளிக்கண்ணி போன்ற அழகு தமிழ்ப் பாடல்கள் தந்த தாயுமானவர், திருவிளையாடல் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர், படிக்காசுப் புலவர், மகாபாரதத்தைத் தமிழில் தந்த வில்லிப்புத்தூர் ஆழ்வார், நளவெண்பா பாடிய புகழேந்திப்புலவர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

விரும்பினால் மொழிகளுக்குப் பயன்பாட்டு வலிமையை உண்டாக்கலாம்.

மனித மொழி உரிமைப் பாதுகாப்புச் சட்டம் மொழிகளுக்கிடையே உள்ள இந்தப் பாகுபாட்டை நீக்க முனைகிறது. எனவே மொழிகளின் அழிவு இயற்கையின் நியதி என்ற வாதம் ஏற்றுக்கொள்ள முடியாத வாதம்.

மொழிகள் இருப்பதும் இல்லாமல் போவதும் அந்தந்த இடங்களில் நிலவுகிற சந்தர்ப்ப நிகழ்ச்சிகளைப் பொறுத்ததே தவிர உயிரியலோடு எந்தத் தொடர்பும் உடையதல்ல என்று விஞ்ஞானி கள் வாதிடுகிறார்கள். இந்த நூற்றாண்டில் மனித குலத்தின் மொழி ஏகாதிபத்திய மனப்பான்மையினால் நிகழும் மொழி இழப்பினைச் சிலர் மொழிக்கொலை என்ற சொற்றொடரால் குறிக்கின்றனர். மொழி இழப்பு என்பது மொழிக் கொலை தான் என்ற சித்தாந் தத்தை நம்பும் இவர்களது நோக்கில் மொழி இறப்பு என்ற சொற்றொடர் மிதவாதப் போக்கினை வெளிப்படுத்துகிறது. இது போன்ற மொழிக்கொள்கை அழியும் மொழிகளை அழியாமல் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் நாட்டமில்லாத ஒன்றாகும் என்பது இவர்களது வாதம்.

– வ. ஞானசுந்தரம்

**வ. ஞானசுந்தரம்**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் பயின்று முனைவர் பட்டம் பெற்றவர். சமூக மொழியியல் குறித்துப் பல ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ளார். 'இந்தியச் சூழலின் மொழி இழப்பு: ஒரு சமுதாய மொழியியல் பார்வை' என்னும் நூல் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. மைசூர் இந்திய மொழிகள் நடுவண் நிறுவனத்தில் பணியாற்றி நிறைவு பெற்றவர்.



## செயல்பாடுகள்

- ✍ மொழியில் எவ்வாறெல்லாம் இழப்பு நேரிடுகிறது என்பது குறித்தும் அதற்கான காரணங்கள், சூழல்கள் குறித்தும் கலந்துரையாடி, கட்டுரை எழுதுங்கள்.
- ✍ 'ஒரு மொழி அழிந்தால் சமூகம் அழியுமா?' விவாதக் குறிப்புத் தயார் செய்யுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## ஒரு தாய்மொழி மடிகிறது

உலக மொழிகளில் மூன்றில் ஒரு பங்கு ஆயிரத்திற்கும் குறைவான மக்களாலேயே பேசப்படுகின்றன. எனவே அவை அபாய கட்டத்தில் உள்ளன. இலட்சக்கணக்கான பேர் பேசும் மொழிகள் கூட, பெரிய மொழிகளின் தாக்கத்தால் வீழ்ந்துவிடக்கூடும் என்று மொழி ஆய்வாளர்கள் அஞ்சுகின்றனர். அதிகமாகப் போனால், உலக மொழி களில் 600 மட்டுமே பத்திரமாக இருப்பதாகக் கூற முடியும் என்கிறார். ஃபேர்பேங்ஸில் இருக்கும் அலாஸ்கா பல்கலைக்கழகத்து மொழியியலாளர் மைக்கல் கிரவுஸ்.

கிரவுஸ் கூறுகிறார்: அழிவின் விளிம்பில் இருக்கும் ஒரு மொழியை எளிதாக அடையாளம் கண்டு கொள்ளலாம். பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு அதைக் கற்றுக் கொடுப்பதை நிறுத்திவிடுவார்கள். குழந்தைகளும் அதைக் கற்றுக்கொள்ளும் ஆர்வத்தை இழந்து விடுவார்கள். கிரவுஸின் கூற்றுப்படி அலாஸ்கா வின் இருபது மொழிகளில் இரண்டு மொழிகளை மட்டுமே குழந்தைகள் கற்றுக்கொள்கிறார்கள். ஆக, நூற்றாண்டுக்காலமாக நிலவிவந்த மொழிவழித் தகவல் பரிமாற்றம், ஓரிரு தலைமுறையுடன் அடியோடு மறைந்துவிடும். அமெரிக்கக் கண்டத்து நாடுகளில், நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகள் இந்த அபாயப் பட்டியலில் இருக்கின்றன. ஒவ்வொன்றையும் முன்னூறுக்கும் குறைவானவர்களே பேசுகிறார்கள். பப்புவா நியுகினியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகள் இதே நிலையில் இருக்கின்றனவாம். உலகம் எங்கிலும் அழிவை நோக்கியுள்ள மொழிகளின் அவலமான பட்டியல் இது.

மொழிகளின் மறைவு குறித்து மொழி ஆய்வாளர்கள் அதிர்ச்சி அடைந்திருக்கிறார்கள் என்று சொல்லத் தேவை இல்லை.

### சித்தர் பாடல்கள்

தமிழிலக்கிய வரலாற்றில் சித்தர் பாடல்கள் குறிப்பிடத் தக்கவை. சித்தர்கள் மெய் ஞானத்தில் வல்லவர்கள், மருத்துவம், மந்திரம், இரச வாதம் தெரிந்தவர்கள். எளிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள். போலித்தனமான பக்தியிலும் சமயநெறிகளிலும் ஆர்வமில்லாதவர்கள். இவர்களது பாடல்கள் பலவும் எளிமையாகவும் பேச்சு நடையில் அமைந்திருந்தாலும் அவை யாவும் பொருளாழம் கொண்டவை. திருமூலர், சிவவாக்கியர், பட்டினத்தார், பத்திரகிரியார், அகப்பேய்ச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், கடுவெளிச் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகுணிச் சித்தர் போன்றோர் குறிப்பிடத்தக்க சித்தர்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஆழ்ந்து பார்த்தால், ஒவ்வொரு மொழியும் தனித்துவம் உடையது என்கிறார் பிபிசி மொழி ஆய்வாளரும், ரட்லெட்ஜ் உலக மொழிகளின் புதிய வரைபடத்தின் பதிப்பாசியருமான கிரிஸ்தோபர் மாஸ்லி. மக்களின் மனங்களில் மண்டிக்கிடக்கும் எண்ணங்களும் அனுபவங்களும் அவர்களின் உருவங்களும், தேர்ந்த அறிவும், தனித்துவம் வாய்ந்த பட்டறிவும் பல தலைமுறைகளாக வளர்ச்சி அடைந்துள்ளன. ஒவ்வொரு முறையும் ஒரு மொழி இறந்துபடுகிறபோது எதை இழக்கிறோம் என்பதைக் கூட நாம் புரிந்துகொள்வதில்லை. முதலில் மொழிகள் பாதுகாக்கப்பட வேண்டியவை. ஏனென்றால் மக்கள் தங்கள் பண்பாட்டைத் தக்கவைத்துக் கொள்ள அவை உதவுகின்றன என்று தெளிவுபடுத்துகிற கிரவுஸ், மொழிப்பன்மை இல்லாவிட்டால் உலகம் அழகிலும் சுவையிலும் குறைந்துவிடும் என்றும் கூறுகிறார்.

ஆனால் உணர்ச்சிமயமான வாதங்கள் பலரிடம் எடுபடாது என்கிறார் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்து விலங்கியல் துறையில் உயிரியல் கணிதவியலாளராக இருக்கும் மார்க் பேஜல். நாம் ஒரு மொழியை இழக்கும்போது உலகைப் பார்க்கும் ஒரு தனிப் பார்வையையும் இழக்கிறோம்.

மேற்கு ஐரோப்பியர்கள் உலகைக் குடியேற்ற நாடாக ஆக்கத் தொடங்கிய 15 ஆம் நூற்றாண்டிலிருந்து மொழிகள் திரள்திரளாக மறையத் தொடங்கின. பல இடங்களில், பொருளாதார அல்லது அரசியல் காரணங்களுக்காக மக்கள் தங்கள் மொழிகளைக் கைவிட்டனர். மொழிப் பெருக்கம் நாட்டின் ஒருமைப்பாட்டிற்குக் குந்தகமானது என்றே பார்க்கப்படுகிறது. சிறுபான்மை மொழிகள் மிக எளிதாகத் தங்கள் சமுதாய மதிப்பை இழக்கின்றன.

இந்தப் போக்குகள் தவிர்க்க முடியாதவை அல்ல. சோவியத் யூனியன் சிதறுண்ட பிறகு லிவோனிய மொழி மறுமலர்ச்சி அடைந்திருக்கிறது. உண்மையில், இந்த மொழியைச் சரியாகப் பேசுபவர்கள் பத்து பேருக்கும் குறைவு. ஆனால் 300 ஆண்டுக்கு முன்பு லத்வியன் கடலோரப் பகுதியில் இலட்சக்கணக்கானோர் இந்த மொழியைப் பேசினார்கள். தற்போது லிவோனியக் கிராமங்களில் மொழி வகுப்புகள் பெருகியுள்ளன. லத்வியன் அரசு மாதம் ஒருமுறை வானொலி நிகழ்ச்சிக்கும், ஒரு பத்திரிகை நடத்தவும் மான்யம் வழங்கியுள்ளது. அந்த மொழிக்கு இதுவரை வரிவடிவம் இல்லை.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அதே வேளையில் வேறு சில புதிய சக்திகள் செயல்படத் தொடங்கியுள்ளன. பத்திரிகை மற்றும் தொடர்பு சாதனத் தொழில்நுட்பங்கள் பெருகப்பெருக சிறுபான்மை மொழிகளைப் பேசுவோர் சொல் வளம், மதிப்பு, அரசியல் செல்வாக்கு ஆகியவற்றோடு உறவு கொண்டு மேலோங்கிய நிலையில் இருக்கும் மொழியை விரும்பித் தங்கள் மொழிப் பாரம் பரியத்தைக் கைவிடுவார்கள். மொழித்தாவல் என்று இதைக் குறிப்பிடலாம். மொழியியலாளர் சிலர் இதை "மொழி ஏகாதிபத்தியம்", மொழிப் படுகொலை என்று குறிப்பிடுவர்.

சரி, இதற்குத் தீர்வுதான் என்ன? மிகுந்த யோசனை யோடு திட்டமிடுகிற திட்டமான இருமொழிக் கொள்கை கோட்பாடு என்கிறார் எய்னார் ஹாகன். நார்வேயிலிருந்து வெளியேறிய பெற்றோர்களுக்கு (அமெரிக்க) அயோவா நகரப் பகுதியில் பிறந்தவர். இவர் ஒரு மொழியியலாளர். சிறு குழந்தையாக இருக்கும்போது அமெரிக்காவிற்கும் நார்வேக்கும் போவதும் வருவதுமாக இருந்தபடியால் சூழலுக்குத் தகுந்தவாறு மொழியின் மதிப்பு ஏறி இறங்குவதை வேதனையோடு உணர்ந்தவர். நாம் வாழ்வதற்கும் நேசிப்பதற்கும் பொருந்திப் போகிற குடும்பத்தோடு ஒட்டுதலான, பழகிய, அன்றாடப் பயன்பாட்டிற்கான ஒரு சொந்த மொழியும், பரந்த அளவில் தொடர்புகொள்வதற்கு, நம்மை உலகெங்கும் கொண்டு சொல்ல ஏற்ற ஒரு மொழியும் வேண்டும் என்கிறார்.

### இஸ்லாமும் தமிழும்

பண்டைக்காலம் தொட்டே அரபு நாட்டைச் சார்ந்த இஸ்லாமியர்கள் தமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந் தனர். கி.பி. 1300 இல் மாலிக்காபூரின் தமிழ்நாட்டுப் படையெடுப்பிற்குப் பின் தமிழர்கள் பலர் இஸ்லாம் சமயத் தைத் தழுவினர். இந்தத் தமிழ் இஸ்லா மியர்களில் இலக்கியத் திறன் படைத் தோர் தமிழில் பல நூல்கள் படைக் கலாயினர். இவ்வாறு படைக்கப்பட்ட தமிழ் நூல்களுள் தலைசிறந்து விளங்கு வது நபிகள் நாயகத்தின் வரலாற்றைக் கூறும் சீறாப்புராணம். இந்நூல் தமிழ் மரபு தழுவி எழுதப்பட்டுள்ளது. இதன் ஆசிரியர் உமறுப்புலவர். குணங்குடி மஸ்தான் சாகிபு, தக்கலை பீர்முகமது சாகிபு, சர்க்கரைப் புலவர், சவ்வாதுப் புலவர், காசிம்புலவர், வண்ணக்களஞ்சியப் புலவர், செய்குத் தம்பி பாவலர் போன்றோர் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்திய இஸ்லா மியப் புலவர்களாவர்.

இருமொழி பேசுதல் என்பது தொல்லையானதல்ல, உண்மையில் அது மனதை விசாலமாக்கும் என்கிறார் அவர். ஒரு மொழியைக் கற்றுக்கொள்வதால் சிந்தனைப்போக்கு மாறும் என்ற கருத்துடைய வர்கள் அனைவரும் அவர் சொல்வதை ஏற்றுக்கொள்வார்கள்.

**கைல் வின்ஸ்**

**தமிழில்: பா. ரா. சுப்பிரமணியன் (காலச்சுவடு)**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**கைல்வின்ஸ்**

மொழியியல் வல்லுநர். இவரது கட்டுரை 1996இல் 'நியோ சயின்டிஸ்ட்' என்னும் இதழில் வெளிவந்தது. 'தி டெத் ஆப் மதர் டங்' என்னும் கட்டுரையின் மொழிபெயர்ப்பு. 'அசோஷஸியேன் ஆஃப் பிரிட்டிஷ் சயின்டிஸ்ட் ரைட்டர்ஸ்' என்னும் அமைப்பின் விருது பெற்றவர். இக்கட்டுரையை மொழிபெயர்த்த பா.ரா.சுப்பிரமணியன். கேரளப் பல்கலைகழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். சென்னை திருவான்மியூர் மொழி அறக்கட்டளையில் பேராசியாராகப் பணிபுரிகிறார். தற்கால தமிழ் அகராதி, மரபுத் தொடர்களின் அகராதி ஆகிய நூல்களின் பதிப்பாசிரியர்.

**செயல்பாடுகள்**

- பல மொழிகளை அறிந்துகொள்ளுவதால் விளையும் நன்மைகளைப் பட்டியலிடுங்கள்.
- அழியும் தறுவாயில் உள்ள ஒரு மொழியை அழியாமல் எவ்வாறெல்லாம் பாதுகாக்கலாம் – கலந்துரையாடி, கருத்துகளைக் குறிப்புகளாக எழுதுங்கள்.
- ஒரு மலையாளச் சிறுகதையைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுங்கள்.
- 'மொழியும் சமூகமும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அலகு 5

# அறிவின் வாயில்கள்

நாடகமே உலகம். நாளை நடப்பதை யார் அறிவார் என்ற நிலைமாறி ஊடகமே உலகம் என்றாகி விட்டது. அங்கிங்கெனாதபடி எங்கும் ஊடகமே ஊடுருவி நிற்கின்றது. செவ்வாயிலிருந்தே குறியீடுகளாகக் குறுஞ்செய்திகள் வரத் தொடங்கிவிட்டன. தந்தியிலிருந்து தொலைபேசி, தொலைக்காட்சி, கணினி, இணையதளம் என்றாகி அதுவே யாகூ, கூகுள் என வளர்ந்து டிவிட்டர், வாட்ஸ் ஆப் என்று வளர்ந்தோங்கி விட்டது. நூலை, நூலகத்தை நாடித்தேடி ஓடிய காலம் மலையேறி விட்டது. கணினியை அல்லது கைக்குள் அடங்கும் செல்பேசியை இயக்கினால் விரும்பும் செய்தியை கேட்டோ, பார்த்தோ, படித்தோ அறிந்து விடலாம்.
அதே வேளை ஊடகத்தைச் சிலர் தவறான வழியில் பயன்படுத்துவதால் பல இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். ஆளில்லா விமானச் சேவைகளும் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் வாழும் மாணவர்கள் உலகத்தோடு ஒட்ட வாழ வேண்டும். நல்வழியில் செல்ல வேண்டும் என்ற நோக்கிலும், பத்திரிகைச் செய்திகள், திரைக்கதை, குறும்படம் போன்றவைகள் உருவாக்கும் நோக்கிலும் எழுதும் கலை, வலைப்பூக்கள், ஒளியும் இருளும் என்னும் கருத்தலகுகளோடு இவ்வலகு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**முதன்மைக் கற்றல் அடைவுகள்**

- காலந்தோறும் ஊடகங்களின் வளர்ச்சியை அறிகிறார்கள். அது குறித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.
- அச்சு ஊடகங்களின் அமைப்பினை அறிகிறார்கள்.
- குறும்படங்கள் தயாரிக்கிறார்கள்; வெளியிடுகிறார்கள்.
- இன்றைய வாழ்க்கைச் சூழலில் ஊடகங்களின் தாக்கங்கள் குறித்துக் கட்டுரை எழுதுகிறார்கள்.

Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

# எழுதும் கலை



## எழுதும் கலையும் இதழியல் உத்திகளும்

எண்சாண் உடலுக்கு சிரசே பிரதானம் என்றொரு பழமொழி உண்டு. உடலுக்கு எப்படி தலையோ, அதுபோல் செய்திக்குத் தலைப்பு முக்கியமானதாகவும் முதன்மையானதாகவும் அமைகிறது. தலைப்பே செய்தியின் சாளரம். அதன் வழியாகத் தான் ஒரு செய்திக்குள் வாசகர் ஊடுருவுகிறார். அதனால் நல்ல தலைப்பு, செய்தியின் திறவுகோலாக அமைகிறது. செய்தியை விளம்பரப்படுத்துகிறது. செய்திச் சுருக்கத்தை மாத்திரை வடிவில் வாசகர்களுக்கு அளிக்கிறது. பக்கம் பக்கமாக எழுதுவதை, பாந்தமாக ஒரு சில வார்த்தைகளில் சொல்வதே தலைப்பு.

**'பாக்தாத் மீது 16வது நாளாக அமெரிக்க குண்டு வீச்சு; பல இடங்கள் நாசமடைந்தன'** என்று தலைப்பிட்டால் செய்தியின் சாராம்சம் அதில் இருந்தாலும், படிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் தன்மை அதில் இல்லை. இதற்குப் பதில் **'பதினாறாம் நாள் போரில் பற்றி எரிகிறது. பாக்தாத்'** என்றோ **'பற்றி எரிகிறது**



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**பாக்தாத் : 16 ஆம் நாள் போரில் அமெரிக்கா உக்கிரம்'** என்றோ இருந்தால் வாசகர்கள் பரபரப்புடன் படிக்கத் தொடங்குவார்கள்.

**தலைப்பு**

- தலைப்பு, செய்தியின் மையக் கருத்தைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.
- வாசகரைக் கவரும் வகையில், தலைப்பில் துடிப்பு இருக்க வேண்டும்.
- எளிய சொற்றொடர், ஆனால் வலிமையான சொற்பிரயோகமாக இருக்க வேண்டும்.
- அருவருப்பையோ வீண் பதற்றத்தையோ தூண்டும் வகையில் தலைப்பு இருக்கக்கூடாது.
- ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிச் சொற்களைக் கூடுமான வரை தவிர்க்க வேண்டும்.
- தேவைப்பட்டால், கட்டமிட்ட பக்கத் தலைப்புகளையோ, மேல்வரித் தலைப்புகளையோ சேர்த்துச் சுவை கூட்டலாம்.

### சிலவகைத் தலைப்புகள்

**கூம்புத் தலைப்பு (Pyramid Headline)**

ஒரு வரிக்கு மேற்பட்டு இருக்கும். கடைசி வரி பத்தியின் இடமிருந்து வலம் வரை முழு அளவில் இருக்கும். மேல் உள்ள வரிகள், ஒன்றுக்கொன்று சிறியனவாக இருக்கும்.

**இரு தினங்களில்**
**ஈராக் வீழ்ந்து விடும்**
**அமெரிக்க அதிபர் புஷ் நம்பிக்கை**

**கவிழ்கூம்பு தலைப்பு** (Inverted Pyramid Headline)

கூம்புத் தலைப்புக் நேரெதிராக, மேல்வரி பத்தியின் இடமிருந்து வலம்வரை இருக்க, அதற்குக் கீழ் வரும் வரி(வரிகள்) அதனைவிடச் சிறியவையாக இருக்கும்.

**ஆயிரம் நாட்கள் போரிட்டாலும்**
**புஷ் கனவு பலிக்காது**
**சதாம் பதிலடி**

### ஐரோப்பியர்களின் தமிழ்ப்பணி

பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலிருந்து சமயப் பணி செய்யத் தமிழகம் வந்தவர்கள் பலர். இவ்வாறு சமயப் பணி செய்ய வந்தவர்கள், தமிழின் பெருமையை அறிந்தபின் தமிழ்ப் பணியிலும் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டனர். கிறித்தவர்கள் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டு மகத்தானது. இவர்களுள் பலரும் தங்கள் பெயர்களைத் தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

**உடுக்குத் தலைப்பு** (Waist Line 1)

ஒன்றுக்கு மேற்பட்ட வரிகளில்(பொதுவாக 3 வரிகள்) முதல் வரியும் இறுதி வரியும் சமநீளமாகவும், இடைப்பட்ட வரி குறுகியும் உடுக்கு போன்ற வடிவில் வரும் தலைப்பு.

**ஈராக் போர் தேவையற்றது**
**அமெரிக்காவுக்கு**
**ரஷ்யா, பிரான்ஸ் அறிவுரை**

**அறுமுகத் தலைப்பு** (Waist Line 2)

உடுக்குத் தலைப்புக்கு நேர் மாறாகத் தோற்றமளிப்பது அறுமுக (அறுகோணம்) தலைப்பு. இத்தலைப்பிலும் முதல் மற்றும் இறுதி வரிகள் சமநீளம் இருந்தாலும், இடையில் உள்ள வரி அவை இரண்டையும் விட நீளமாக இருக்கும்.

**போர் பாதிப்புகளுக்கு**
**அமெரிக்கா பொறுப்பேற்க வேண்டும்.**
**ஐ.நா. வலியுறுத்தல்**

பரந்து விரிந்துள்ள பத்திரிகைச் செய்திகளைக் குறுகிய நேரத்துக்குள் அறிய உதவுபவை முகப்புகளே. இதனால், முகப்பை, செய்தி எழுதுபவனின் காட்சியறை என்று கூறுவார்கள்.

**செய்திகளை அளிக்கும் முறை**

எதுவுமே அதற்குரிய முறையில் இருந்தால்தான் அழகாக எடுப்பாக இருக்கும். செய்திகளும் அப்படித்தான். செய்திகளை அதனதன் இடத்தில் பொருத்தமாகவும் திருத்தமாகவும் அளித்தல் வேண்டும்.

தேசிய முக்கியத்துவம், மாநில முக்கியத்துவம் மற்றும் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் (ஈராக் போர் நிலவரம் போல்) சர்வதேசச் செய்திகள் முதல் பக்கத் தலைப்புச் செய்திகளாக வருகின்றன. முக்கியத்துவத்துக்கு ஏற்ப ஏனைய செய்திகள் முதல் பக்கத்தில் பிரித்து வழங்கப்படுகின்றன. முதல் பக்கத்தில் ஒரு சில புகைப்படங்கள் இடம்பெறுவது அவசியம்.

நடுப்பக்கங்களில் பிற மாநிலச் செய்திகள், மாவட்டச் செய்திகள், மண்டலச் செய்திகள், மாநகரச் செய்திகள், வணிகச் செய்திகள் எனவும், கடைசிப் பக்கத்தில் விளையாட்டுச் செய்திகள் அல்லது பொழுதுபோக்குச் செய்திகள் எனவும் செய்திகள் பிரித்துத் தரப்படுகின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

செய்தி அளிப்பதில் எழுத்து நடை மிக முக்கியமானது. எளிமையாக அதே நேரத்தில் தெளிவாக ஒரு செய்தியைத் தர வேண்டியது நிருபரின் கடமை.

செதுக்கும் வேலையைச் செய்யும் துணை ஆசிரியர்கள் இதில் கவனம் செலுத்த வேண்டும். தகவல்கள் சரியாக உள்ளனவா, குழப்பமின்றியும் பிழையின்றியும் இருக்கின்றனவா என்பதைத் துணை ஆசிரியர் பார்வையிட்டுச் செய்திக்கு மேலும் சுவையை ஊட்ட வேண்டும்.

மூன்று பத்தி மற்றும் அதற்கு மேற்பட்ட பத்தியுள்ள பெரிய செய்திகள் எனில், நடுநடுவே பொருத்தமான துணைத்தலைப்புகளைப் பயன்படுத்த வேண்டும். பெட்டிச் செய்திகளும் அழகூட்டும்.

வர்த்தகச் செய்திகளை எழுதும்போது புதிய அல்லது கடினமான கலைச்சொற்களுக்கு அதன் ஆங்கில வார்த்தைகளை அருகே அடைப்புக்குறிக்குள் தரலாம். அறிவியல் செய்திகளுக்கும் அப்படியே.

இதேபோல் விளையாட்டுச் செய்திகளிலும் வெற்றி, தோல்வி எனத் திரும்பத் திரும்பக் குறிப்பிடக்கூடாது. சுதர்சன் அணிக்குக் கோப்பை, சாம்பியன் பாகிஸ்தானை இந்தியா வீழ்த்தியது என்று அமைக்கலாம்.

### பேட்டி

செய்திகளை நிருபர்கள் சேகரிப்பதற்குப் பேட்டி அல்லது உரையாடல் மிகவும் அவசியமாகிறது. வாயைக் கிளறி வார்த்தைகளை வெளிக்கொணராமல் செய்திகளைத் தர முடியாது. பேட்டி என்பது ஒரு பயனை, ஒரு நோக்கத்தை உள்ளிட்ட உரையாடல் என்கிறார் வில்லியம் மெட்ஸ் என்னும் அறிஞர்.

பொதுவாகப் பேட்டிகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். தனிநபர் பேட்டி, செய்திப் பேட்டி, கருத்துப்பேட்டி

**தனிநபர் பேட்டி** (Profile or Personality Interview)

பிரபலமான அரசியல்வாதிகள், திரைப்படக் கலைஞர்கள், அரசு அதிகாரிகள் ஆகியோரிடம் தனிப்பட்ட முறையில் பேட்டி எடுத்து அவர்களது வாழ்க்கைக் குறிப்புகள், கருத்துகள், குணநலன்களைப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன.

தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு முன்னோடியாக விளங்கிய தத்துவபோதக சுவாமி என்னும் ராபர்ட் டி நொபிலி, தேம்பாவணி என்னும் கிறித்தவத் தமிழ்க் காப்பியம் தந்த வீரமாமுனிவர் என்னும் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி, தமிழகத்தில் அச்சுக்கலையை அறிமுகப்படுத்திய சீகன் பால்கு ஐயர், திருக்குறளின் சில அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த எல்லீஸ் துரை, திருவாசகம், திருக்குறள், நாலடியார் போன்ற அரும்பெரும் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த போப் ஐயர், திராவிட மொழிகளை ஒப்பாய்வு செய்த டாக்டர் கால்டுவெல் போன்றோர் தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் செய்த தொண்டு அளப்பரியது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

### செய்திப்பேட்டி (News Interview)

செய்தியின் அடிப்படையில் மேற்கொண்டு தகவல்களைத் திரட்டுவதற்காக எடுக்கப்படும் பேட்டி. செய்தியில் அடிபடும் விஷயங்கள் பற்றி அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் போன்றோரின் கருத்துகளைக் கேட்டு வெளியிடுவது இவ்வகைப் பேட்டியாகும்.

### கருத்துப் பேட்டி (Opinion Interviews)

குறிப்பிட்ட சில பிரச்சனைகளைப் பற்றிப் பல நபர்களிடம் கருத்துகளைத் திரட்டி வெளியிடுவது இவ்வகைச் சார்ந்தது. இதை குழுப் பேட்டி என்றும் அழைப்பார்கள். சுயநிதிப்பொறியியல் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர முறை கடைப்பிடிக்கப்பட வேண்டுமா அல்லது வேண்டாமா?, பொடா சட்டம் அவசியம் தானா? என்பது போன்ற பல விஷயங்களில் பல்வேறு தரப்பினரின் கருத்துகளைத் திரட்டி வெளியிடுவது கருத்துப் பேட்டி.

### பேட்டி எடுக்கும் முறை

- பேட்டி எடுக்கச் செல்லும் முன், பேட்டி காண்பதற்குரிய செய்தியின் அடிப்படை குறித்தும், பேட்டி அளிப்பவரின் பின்னணி, குணாதியங்கள் குறித்தும் அறிந்து வைத்திருக்க வேண்டும். இதன் அடிப்படையில் கேட்பதற்கான கேள்விகளைத் தயாரித்து வைத்திருக்க வேண்டும்
- பேட்டி எடுக்கும்போது எந்த விஷயத்தை அறிய விரும்புகிறோமோ அதை எடுத்த எடுப்பில் கேட்டுவிட வேண்டாம். முதலில் பேட்டி கொடுப்பவரின் நல்ல அம்சங்களைச் சற்றே புகழ்ந்துரைத்தோ அல்லது அவருடன் தனக்கு ஏற்கனவே உள்ள பரிச்சயத்தைச் சுட்டிக்காட்டியோ இணக்கமான சூழலை உருவாக்கவேண்டும்.
- பேட்டி காணும் நிருபர் அதிகம் பேசக்கூடாது. பேட்டி கொடுப்பவரைத்தான் பேசச் செய்ய வேண்டும். சொந்தக் கருத்துகளை அவரிடம் கூறக்கூடாது.
- பேட்டி கொடுப்பவரின் அனைத்துப் பேச்சுகளையும் அட்சரம் பிசகாமல் எழுதிக்கொண்டிருக்க வேண்டாம். முக்கியமான குறிப்புகளை எழுதிக்கொள்ள வேண்டும். தேவையானால், டேப் ரிக்கார்டரை எடுத்துச் செல்லலாம்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

- தயாரித்து வைத்துள்ள கேள்வியை மட்டுமே நம்பி இருக்கக் கூடாது. பேட்டியின் போக்குக்கு ஏற்பத் துணைக்கேள்விகளையும் மாற்றுக் கேள்விகளையும் எழுப்பி, தகவல்களைச் சேகரிக்க வேண்டும்.
- அபத்தமான, பொருத்தமற்ற கேள்விகளைக் கேட்கக் கூடாது.
- பொதுப்படையாகக் கேள்வி கேட்காமல், குறிப்பாகக் கேள்வி கேட்க வேண்டும்.

**பேட்டியை எழுதும் முறை**

பேட்டி எடுப்பதைவிட அதை வாசகர்கள் விரும்பும் வகையில் எழுதுவது கடினமான காரியம். கேள்வி கேட்ட வரிசைக்கிரமப்படி பேட்டியை எழுத வேண்டியதில்லை. கொடுக்கப்பட்ட பதிலில் முக்கியமான, சுவையான தகவலை முன்னிலைப்படுத்திச் செய்தி கொடுக்க வேண்டும்.

பேட்டிக்கான தலைப்பு பளிச்சென்று, சுவையானதாக இருக்க வேண்டும். கேள்வி-பதில் பாணியில் பேட்டியை வெளியிடுவதாக இருந்தால் முக்கியப் பகுதியைச் சற்றே பெரிய எழுத்துகளில் பேட்டி தொடங்குவதற்கு முன்னர் முன்னுரை போல் தர வேண்டும்.

தேவையற்ற கேள்வி - பதில்களை நீக்கி விடலாம். நிருபரின் சுயபுராணம் கூடாது. ஆனால் பேட்டி கொடுத்தவரின் முகபாவம், குணங்களை தேவைப்படும் போது கொடுக்கலாம். ரகசியம் அல்லது வெளியிட வேண்டாம் என்று கூறித் தரப்படும் தகவல்களை எக்காரணம் கொண்டும் வெளியிடக் கூடாது.

**தலையங்கம், கட்டுரை, மதிப்புரை முதலியவை**

**தலையங்கம்**

நாளிதழ்களில் தலையங்கத்துக்குத் தனி மரியாதை உண்டு. செய்தி குறித்த ஒரு பார்வையாக, விமர்சனமாக, அறிவுரையாகத் தலையங்கங்கள் எழுதப்படுகின்றன.

**எண்ணியல் நூலகம்**

உலகின் மிகப் பழமையான ஓலை மற்றும் பழைய அச்சுப்பிரதிகளைக் கொண்ட சரித்திரக் கலாச்சாரக் குறிப்புகள் போன்றவற்றை எண்ணியல் வடிவமாக்கி ஓர் இணைய (Digital) நூலகத்தில் பதிவு செய்திருக்கிறார்கள். இந்தப் பதிவுகள் வட அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய மற்றும் தெற்கு ஆசியா, கிழக்கு ஆசியா, மத்தியக் கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்கா, தெற்கு ஆசியா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன், ஆப்பிரிக்கா, ஓசியானியா மற்றும் பசிபிக் எனும் முக்கியப் பிரிவுகளில் தரப் பட்டுள்ளன. மேலும் இந்தப் பிரிவுகளில் எவ்வளவு செய்திகள் இணைக்கப்பட்டுள்ளன என்பது குறித்து அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.

இந்த இணையதளத்தில் இடம், காலம், தலைப்பு, பொருள், நிறுவனங்கள் போன்ற தலைப்புகளின் கீழ்த் தேட வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தலைப்புகளின் கீழ் எத்தனை விபரங்கள் இடம்பெற்றுள்ளன என்கிற தகவலும் அடைப்புக் குறிக்குள் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பழமையான பல தகவல்களைத் தெளிவாகக் காணமுடிகிறது.

இணையதள முகவரி
http://www.wdl.org/en/

-தேனி எம். சுப்பிரமணி



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

தலையங்கத்தைப் பொதுவாக ஒரு பத்திரிகையின் ஆசிரியர்தான் எழுதுவார். தலையங்கம் எழுத, செய்தியின் பின்னணி, புள்ளி விவரங்களைத் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். கடுமையான விஷயத்தைக் கூட இதமான வார்த்தைகளில் வெளிப்படுத்த வேண்டும். வாதிடும் திறனும், நடுநிலை அணுகுமுறையும் தேவை.

### மதிப்புரை

நூல்களைப் படித்து மதிப்புரை வழங்குவது ஒரு சில நாளிதழ் களிலும் அநேக வார, மாத இதழ்களிலும் இடம்பெறுகின்றன. குறிப்பிட்ட துறை சார்ந்த நூல்களுக்கு அத்துறையில் திறமைபெற்ற நபர்கள் மூலமோ அல்லது அவர்களது உதவியுடனோ மதிப்புரை அளிக்க வேண்டும். நூலைத்தான் விமரிசிக்கலாமே தவிர, நூலாசிரியரை விமரிக்கக்கூடாது. நூலை விமரிசிக்கும்போது கூட நன்றாகவே இல்லை என்றோ, அபாரம் என்றோ, ஒரேயடியாக இகழ்ந்தோ, புகழ்ந்தோ எழுதக்கூடாது. நூலின் நிறை– குறைகளை, கூறப்பட்ட தகவல்களின் தன்மையை எடுத்துக்கூற வேண்டும். கூறாமல் விட்ட பகுதிகளைக் கூட கூட்டிக் காட்டலாம். மதிப்புரையில் தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு தலைகாட்டக்கூடாது.

### விமரிசனம்

இசை விமரிசனம், நாடக விமரிசனம், சினிமா விமரிசனம் பங்குச் சந்தை விமரிசனம், அரசியல் விமரிசனம் என இதில பல வகையுண்டு. விமரிசனம் மேம்போக்காக இராமல் நுணுக்கமானதாக இருக்க வேண்டும். நிறைகுறைகளை விருப்புவெறுப்பின்றி விமரிசிக்க வேண்டும். புண்படுத்தும்படியோ, புகழ்ச்சி கூறிப் புல்லரிக்கும்படியோ விமரிசனம் இருக்கக் கூடாது. விமரிசிக்கும் துறை சார்ந்த அறிவு இருத்தல் வேண்டும்.

### ஆசிரியருக்குக் கடிதங்கள்

ஆசிரியருக்கு வாசகர்கள் எழுதும் கடிதத்தில் உள்ள சாராம்சத்தை உள்வாங்கி, சுருக்கி வெளியிட வேண்டும். அவர்களது கொச்சையான அல்லது பிழைகளான வார்த்தைகளைத் திருத்தி எழுத வேண்டும். வாசகர்களைக் கவரும் வகையில் தலைப்புகள் தரலாம்.

### புகைப்பட விளக்கம்

பல நூறு வார்த்தைகள் கூற முடியாததை ஒரேயொரு புகைப்படம் விளக்கி விடும். ஆயினும் அந்தப் புகைப்படத்துக்கும் விளக்கவரி (Caption) அவசியமாகிறது. செய்தியின் சாராம்சமான அடிப்படைக்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கேள்விகளுக்கு – என்ன, எங்கே, எப்படி போன்றவற்றுக்குப் பதில் கூறும் வகையில் சுருக்கமாகவும், தெளிவாகவும், கவர்ச்சியாகவும் புகைப்பட விளக்கம் இருக்க வேண்டும். புகைப்படத்துக்கு மேல் கவர்ச்சியான தலைப்பும் இடலாம்.

**இணையத்தில் எழுதுதல்**

பத்திரிகைக்கு எழுதுவதுபோல்தான் இணையத்தில் எழுதுவதும், பத்திரிகைக்கான அதே நடைமுறைகள், விதிமுறைகளை இதற்கும் பின்பற்ற வேண்டும். இணையத்தில் பத்திரிகையில் உள்ளதைப்போல், பத்தி அளவுக் கட்டுப்பாடு கிடையாது. வானொலி, தொலைக்காட்சிக்கு உள்ளதைப்போல் குறிப்பிட்ட நிமிடங்களுக்குள் செய்தி அளவைச் சுருக்க வேண்டியதும் இல்லை. அதே நேரத்தில் புதிய செய்திகளை விரைவாகவும் சுவையாகவும் தரவேண்டும்.

இணையப் பத்திரிகையின் தொடக்கப் பக்கத்தில் குறிப்பிட்ட துறைவாரியாகச் செய்திகளின் தலைப்புகளை அடுக்க வேண்டும். தேசியம், மாநிலம், விளையாட்டு என்பது போல் முக்கியச் செய்திகளைத் தனியாகக் கட்டம் கட்டி, தேவையானால் சிறிய விளக்கத்துடன் படமும் சேர்த்துத் தரலாம்.

**– பத்மன்**

**பத்மன்**

இக்கட்டுரை மூன்றாவது கண் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. நூலாசிரியர் பத்மனின் இயற்பெயர் அனந்தபத்மநாபன் என்பதாகும். இவர் தினமணி நாளிதழிலும் இந்தியாடுடே மாதமிருமுறை இதழிலும் துணையாசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

**செயல்பாடுகள்**

- பத்திரிகையில் தலைப்புகள் அமையும் விதங்களைப் பட்டியலிடுங்கள்.
- தலைப்பு வகைகள் – குறிப்பு வரையுங்கள்.
- நேர்காணலின்போது நினைவில் கொள்ளவேண்டிய முன்னேற்பாடுகள் யாவை? வரிசைப்படுத்துங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



## எடிட் செய்பவன்

என் பை நிறைய சொற்கள்
கனத்து
உப்பிக் கொண்டு

வாசலை அடைத்து நிற்கிறது
வெட்டிப்போட்ட
வார்த்தைகளின் குப்பைத்தொட்டி

கால்மிதிக்க உருளும்
வழியெங்கும் குற்றுயிராய்
தூக்கியெறிந்த ஒற்றுகள்

சுற்றிலும் உதிர்ந்த முடியாய்
பொருளற்ற வார்த்தைகள்

கொம்பு முளைத்தவைகளின் திமிர்
பொட்டு வைத்தவைகளின் நாணம்
கால்வாங்கிப் போனால்
கையூன்றும் சாகசம்
இடம்மாறிப் போனால் பொருள் மாறிப் போகும்
ரெண்டு சுழியும் மூன்று சுழியுமான
'ன, ண' க்கள்

காற்றடிக்கும் போதில் பிரிந்து
பிசிர் நீங்கி முகத்தில்
வளைந்து படரும் கேசமாய்
'கு, கூ'

எழுத்துகளின் கும்மாளம் எழுதித் தீருவதில்லை

பாம்பாய் ஊர்ந்து போகும்
ரயில் வண்டித் தொடர் வாக்கியத்தை
நான்கு துண்டுகளாக்கி
ரெண்டு கமாக்களுடன் ஒரு



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

முற்றுப்புள்ளி வைக்க
நந்தி விலகும் – நடுச்சாமம் விளக்கெரியும்
மொழியும் புரியும்

எண்ணற்ற ஒட்டைகளாய்
எழுத்துருக்களின் தேன்கூடு
எப்போதோ சொட்டும் தேனுக்காக
இளைத்த பேனாவுடனும்
களைத்த மொழியுடனும்
காத்திருக்கும்
எடிட் செய்பவன்.

**– கோலாகல ஸ்ரீநிவாஸ்**

**கோலாகல ஸ்ரீநிவாஸ்**

புகழ்பெற்ற புதுக்கவிஞர்களில் முக்கியமானவர். சென்னையைச் சேர்ந்தவர். இவரது படைப்புகள் முன்னணி சுற்றிதழ்களில் வெளிவந்துள்ளன. நதிகளின் குதர்க்கம் இவருடைய படைப்பு.

**செயல்பாடுகள்**

- இடம்மாறிப்போனால் பொருள் மாறிப்போகும் மாதிரியைப் போன்று னகர, ணகர வேறுபாட்டை விளக்கும் சொற்கள் நான்கினைத் தருக. (மாதிரி : கனம் – கணம்)
- மொழியைப் புரிந்துகொள்ள நிறுத்தற்குறிகள் இன்றியாமையாதவை என்பதைச் சான்றுகளுடன் நிறுவுக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

௮

# வலைப்பூக்கள்




## தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள்

“ஒரு சமுதாயம் இன்றைய பணிகளை இன்றைய கருவி கொண்டு செய்ய வேண்டும். இன்றைய பணியை நேற்றைய கருவி கொண்டு செய்யும் இனத்தின் நாளைய வாழ்வு நலியும். இது தவிர்க்க முடியாதது” என்ற டாக்டர் வா.செ.குழந்தைசாமி அவர்களின் கூற்றின்படி நாம் இன்றையப் பணியை இன்றைய கருவிகொண்டு செய்ய வேண்டும். அதன் அடிப்படையில் நாம் இணையத்தைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டோம். அதில் வலைப்பூக்கள் என்ற ஒரு தனி இலக்கிய வகைத் தோன்றியுள்ளது. ஒருவரிடமிருந்து பிறருக்குத் தெரிவிக்கப் பயன்படுத்தப்படும் தகவல் தொடர்புக் கான எழுத்துகள், ஒலி, ஒளி வடிவக் கோப்புகள், ஓவியம், படங்கள் என்று அனைத்தையும் இணையம் வழியே தனிப்பட்ட ஒருவர் உலகில் இருக்கும் பிறருக்குத் தெரிவிக்க உதவும் இணைய வழியிலான ஒரு சேவையே வலைப்பூ என்பதாகும்.

வலைப்பூ என்பதை ஆங்கிலத்தில் பிளாக்(blog) என்கிறார்கள். இதன் மூலம் வெப்பிளாக்(webblog) என்பதாகும். 17.12.1997இல் ஜான்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பெர்கர்(John Barger) என்பவர்தான் வலைப்பூவிற்கான ஆங்கிலச் சொல்லை Webblog என்று பெயரிட்டு எழுதியுள்ளார். பீட்டர் மெர்ஹால்ஸ்(Peter Merholz) என்பவர் 1999ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் குறுக்கு வடிவமான blog என்ற சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினார். இவரது வலைப்பதிவின் பக்கப் பட்டையில் Webblog எனும் சொல் இரண்டாக உடைக்கப்பட்டு We blog என்று பிரித்துக் கையாளத் தொடங்கினார். இப்படியே வலைப்பூவிற்கு blog எனும் பெயர் நிலைத்துவிட்டது.

### தமிழ் வலைப்பூ

இந்த blog எனும் ஆங்கிலச் சொல்லிற்கு இணையாகத் தமிழில் ஒரு பெயர் உருவாக்க விரும்பியபோது தமிழ் உலகம் மற்றும் ராயர் கிளப் மடலாடற் குழு(மின் குழுமம்) உறுப்பினர்கள் தங்கள் கலந்துரையாடல்களின் வழியாக blog-க்கு வலைப்பூ என்று தமிழில் பெயர் உருவாக்கினர். இன்று தமிழில் இந்த வலைப்பூ என்ற பெயரே பயன்பாட்டில் இருந்து வருகிறது.

### வலைப்பூ சேவை

வலைப்பூ வசதிக்கான சேவையை முதன்முதலாக 1996ஆம் ஆண்டில் எக்ஸான்யா(Xanya) எனும் நிறுவனம் வழங்கத் தொடங்கியது. 1997ஆம் ஆண்டில் சுமார் 100 நாட்குறிப்பேடுகள் இடம்பெற்றன. அதன் பிறகு சில நிறுவனங்கள் வலைப்பூவிற்கான இலவச இடவசதிகளைச் செய்து கொடுத்தன. இந்நிறுவனங்களில் ஒன்று பிளாக்கர்ஸ். காம் எனும் பெயரில் வலைப்பூ அமைப்பதற்கான சேவையை இலவசமாக அளித்து அதிகமான வலைப்பூக்களை அமைக்க வாய்ப்பளித்தது. இதன் மூலம் ஆங்கிலத்தில் பலர் தங்களுக்கான வலைப்பூக்களை உருவாக்கத் தொடங்கினர். இதன் வளர்ச்சியைக் கண்ட கூகுள் (Google) நிறுவனம் இந்நிறுவனத்தை விலைக்குப் பெற்றது. அதன் பிறகு அனைத்து மொழிகளிலும் வலைப்பூ அமைப்பதற்கான சேவை அளிக்கப்பட்டது.

### இருபதாம் நூற்றாண்டு

**கவிதை**

இருபதாம் நூற்றாண்டு, தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது என்றே கூறலாம். இதற்குக் காரணமாக இருந்தவர் பாரதியார். எனவே இருபதாம் நூற்றாண்டு காலகட்டத்தை பாரதியுகம் என்றும் கூறுவர். அரண்மனைகளிலும் அம்பலங்களிலும் கட்டுண்டு கிடந்த தமிழ்க் கவிதையைப் பாமர மக்களின் மத்தியில் கொண்டு வந்த பெருமை பாரதிக்குரியது. பாரதி வழி வந்த கவிஞர்களுள் பாரதிதாசனும் கவிமணியும் குறிப்பிடத்தக்கவர்கள். சுத்தானந்த பாரதியார், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், சுரதா போன்றோர் இக் காலகட்டத்தின் வேறு சில முக்கிய கவிஞர்கள்.

### முதல் தமிழ் வலைப்பூ

தமிழ் மொழியிலான முதல் வலைப்பூவை நவன் என்கிற வலைப்பதிவர் 2003ஆம் ஆண்டில் ஜனவரி 26இல் உருவாக்கி



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

னார் என்று அவருடைய வலைப்பக்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் 2003ஆம் ஆண்டில் ஜனவரி முதல் தேதியன்றே கார்த்திக் ராமாஸ் என்பவர் முதல் வலைப்பூவை உருவாக்கினார் என்று சிந்தாநதி எனும் இணைய இதழில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இந்த இரு வலைப்பூக்களில் நவன் வலைப்பூ பிளாக்கர்ஸ்.காம் தளத் திலும், (www.navan.name/blgo/?p=18) கார்த்திக் ராமாஸ் வலைப்பூ பிளாக் டிரைவ் எனும் தளத்திலும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

கார்த்திகேயன் ராமசாமி(கார்த்திக் ராமாஸ்) எனும் வலைப்பதிவர் தமிழில் செய்த முதல் வலைப்பூ என்று பேராசிரியர் மு.இளங்கோவன் எட்டாவது தமிழ் இணைய மாநாட்டு மலரில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் விக்கிப்பீடியாவிலும் கார்த்திகேயன் ராமசாமி வலைப்பூதான் முதல் தமிழ் வலைப்பூ என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (karthikramas blogdrive.com/archive/21.html)

### தமிழ் வலைப்பூக்கள் வளர்ச்சி

தமிழ் வலைப்பூக்கள் உருவாக்கம் மற்றும் பயன்கள் குறித்த கட்டுரை ஒன்று 'திசைகள்' எனும் இணைய இதழில் வெளியானதைத் தொடர்ந்து தமிழ் வலைப்பூக்கள் குறித்துப் பலருக்கும் தெரியத் தொடங்கியது. தமிழ் வலைப்பூக்களின் தொடக்கக் காலத்தில் தமிழ் எழுத்துருப் பிரச்சனைகள் இருந்ததால் இதன் வளர்ச்சி சற்றுக் குறைவாகவே இருந்தது. 2003ஆம் ஆண்டிலிருந்து 2005ஆம் ஆண்டு வரை சுமார் 1000 வலைப்பூக்கள் வரையே தோன்றி யிருந்தன. அதற்கடுத்து 2005 முதல் 2007ஆம் ஆண்டு வரையான காலத்தில் இந்த எண்ணிக்கை 4000 ஆக அதிகரித்தது என்று பேராசிரியர் க.துரையரசன் எழுதிய 'இணையமும் இனிய தமிழும்' என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கடுத்து, தமிழ் வலைப்பூக்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து 12000ஐத் தாண்டி விட்டது. இது இன்னும் பன்மடங்காக உயரக்கூடும்.

### தமிழ் வளர்ச்சியில் வலைப்பூக்கள்

1. வலைப்பூக்களின் வருகையால் தமிழ் மொழி இலக்கியங் கள் வெளியுலக, மக்களுக்குத் தெரிய வருகின்றன.
2. தமிழில் இணையத்தில் எழுதுபவர்கள் பெருகியுள்ளனர். இதனால் தமிழின் வளர்ச்சி உயர்ந்துள்ளது.
3. வலைப்பூக்களால் உலக நாடுகள் பலவற்றில் வாழும் தமிழ் மக்களின் கருத்துகள் மிக விரைவாகக் கிடைக்கின்றன.
4. இலங்கை, மலேசியா, கனடா, தென்கொரியா, சிங்கப்பூர், அரபு நாடுகள் போன்றவற்றில் வாழும் மக்களின் படைப்புகள் தமிழ் மொழியில் இருப்பதால் அனைவரும் கருத்தைப் பகிர்ந்துகொள்ள முடிகிறது.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

5. தமிழ் மொழியின் இலக்கண, இலக்கியங்களான சங்க இலக்கியம் முதற்கொண்டு இக்கால இலக்கியங்கள் வரை வலைப்பூவினால் உலகத் தமிழர்களுக்குக் கிடைக்கிறது. இதனால் தமிழ்மொழி வளர்ச்சிபெற்று வருகிறது.
6. இவையன்றி; கணிப்பொறி சார்ந்த தகவல்கள் அதிகம் கிடைக்கின்றன. அறிவியல், விஞ்ஞானக் கருத்துகளும் அது தொடர்பான புதிய கண்டுபிடிப்புகளும் நமக்குக் கிடைக்கின்றன.
7. உலக நாடுகளில் உள்ள சைவ மடாலயங்களும், திருத்தலங்களும் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.
8. தமிழ் ஆய்வுக் கட்டுரைகள் அதிகம் வலைப்பூக்களில் வெளிவருகின்றன. இதனால் தமிழ் ஆய்விற்குப் பல வழிகளில் பயன்படுகின்றன.
9. வலைப்பூவினால் தொழில்நுட்ப வளர்ச்சி பெற்றுத் தமிழ்மொழி வளர்ந்து வருகின்றது.
10. வலைப்பூக்களில் வெளிவரும் படைப்புகளுக்கும், கட்டுரைகளுக்கும், கவிதைகளுக்கும், பிற கருத்துகளுக்கும் உடனுக்குடன் பின்னூட்டம் என்ற பெயரில் விமர்சனங்கள் பல நாடுகளிலிருந்து எழுதப்படுகின்றன. இது தமிழ் மொழிக்குக் கிடைத்த விமர்சன இலக்கியம் என்றே கூறலாம். மேலும் பல துறைகளைச் சார்ந்த அறிஞர் பெருமக்களும் தமிழ் மொழிக்குத் தன்னால் இயன்ற பணிகளைச் செய்து வருகின்றனர்.

**–முனைவர் துரை மணிகண்டன்**

**முனைவர் துரை மணிகண்டன்**

தமிழ்ப் பேராசிரியரான இக்கட்டுரையாசிரியர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். இணையத்தில் தமிழ், இணையத்தில் தமிழ் வலைப்பூக்கள் உட்பட பலநூல்கள் எழுதியுள்ளார். இக்கட்டுரை இவருடைய இணையத்தில் தமிழ்த் தரவுத் தளங்கள் எனும் நூலிலிருந்து தேர்வு செய்யப்பட்டது.

**செயல்பாடுகள்**

- தமிழில் வலைப்பூக்களின் வளர்ச்சியும் பயன்பாடும் பற்றிக் கட்டுரை எழுதுவதற்கான குறிப்புகளைத் தருக.
- முதல் தமிழ் வலைப்பூ பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
- வலைப்பூவிற்கு Blog எனும் பெயர் வரக் காரணம் என்ன என்பது பற்றிப் பெட்டிச் செய்தி தயார் செய்க.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## டிஜிட்டல் சூழலும் சினிமாவின் எதிர்காலமும்

டிஜிட்டல் தொழில்நுட்பம் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதால், தொழில்நுட்ப ரீதியாக சினிமாவை உருவாக்குவதும் நுகர்வதும் பெருமளவில் மாறிவிட்டது. தொடர்ந்து மாறிக்கொண்டே வருகிறது.
ஒரு விதத்தில் சினிமா நுகர்வில் ஏற்பட்ட தொழில் நுட்பப் புரட்சி சினிமா ரசனையை வளர்க்கப் பெருமளவில் உதவிபுரிகிறது. அதன் பிரதிபலனால் பல தேசிய சினிமாக்கள் தேசங்களைக் கடந்து நிலைத்து நிற்கவும் பாராட்டப்படவும் சாத்தியமானது.
டிவிடியும், சமீப காலமாக ப்ளூ ரேவும், சினிமா படைப்புகளை உலகின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் எடுத்துச்சென்றதோடு, சினிமாக் காணலின் தரத்தையும் உயர்த்தியுள்ளன.

சினிமா தயாரிப்பில், பல பழைய இயக்குநர்கள் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் அசாத்திய பயன்பாட்டினால், புதுவிதக் கதைகளைத் தேர்ந்தெடுத்தார்கள். புதுவிதக் கதை சொல்லும் பாணிகளை உருவாக்கினார்கள். ஹாலிவுட்டின் தொழில்நுட்ப ஒளிப்பதிவின் மூலம் புதுவிதமான இயக்குநராக உருவெடுத்தி ருக்கிறார்கள்.

இன்னொரு புறம், சினிமா எடுப்பதில் சாத்தியப்பாடுகள் எளிமையாகிப் போனதால் இதுவரை சினிமாவில் நுழைய முடியாதவர்கள் இப்போது பெரும் சிரமமின்றி நுழைய முடிகிறது. ஈரானிய திரைப்பட இயக்குநர் ஜாஃபர் பனாஹி அரசியல் காரணங்களுக்காக நாட்டைவிட்டு வெளியேற முடியாமல் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். அவர் தன் வீட்டிற்குள்ளேயே 'திஸ் இஸ் நாட் எஃபிலிம்' எனும் படத்தை எடுத்தார். அப்படம் இரண்டு அங்குல பென்டிரைவ் -இல் பதியப்பட்டு, ஒரு கேக்கில் ஒளித்து வைத்துக் கான்ஸ் திரைப்பட விழாவுக்கே கடத்தப்பட்டது. டிஜிட்டல் சூழலுக்கு முன்னால் 35 எம்.எம். படச்சுருளின் பத்துப் பெட்டிகளை கேக்கில் ஒளித்து கடத்துவது என்பது கற்பனை செய்ய முடியாத ஒன்று.

1990 இல் துவங்கிய டிஜிட்டல் சூழல். இன்று சினிமாவை முற்றிலும் சூழ்ந்து விட்டது என்று சொன்னால் அது மிகையில்லை. டிஜிட்டல் யுகத்துக்கு முன் இருந்த படச்சுருள் கேமராக்கள். படத்தொகுப்பு சாதனங்கள், ப்ரொஜட்டர்கள் எல்லாம் என் கண் முன்னே அருங்காட்சிப் பொருள்களாவதைத் தினசரி காண்கிறேன்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

இன்று இந்தியாவின் பெரும்பாலான ஃபிலிம் லேப்கள் மூடப்பட்டுவிட்டன. இருக்கக்கூடிய ஒரு சில லேப்களும் அடுத்த சில மாதங்களில் மூடப்பட உள்ளன. அடுத்த ஆண்டு துவக்கத்தில் திரைப்பட படச்சுருள் தயாரிக்கும் கோடாக் நிறுவனத்தின் ஒரு லேப் தவிர மற்ற அனைத்து ஃபிலிம் லேப்களும் இந்தியாவிலிருந்து மறைந்து போகும். இந்தியாவின் அனைத்து திரை அரங்குகளிலும் டிஜிட்டல் ஃபிரொஜக்ஷன் மட்டும் இருக்கும்.

தினசரி மற்றும் பத்திரிகைத் துறையில் இது போன்ற தொரு மாற்றம் வர இந்தியாவைப் பொறுத்தவரை பல ஆண்டுகள் ஆகும் என நினைக்கிறேன்.

இந்தியாவின் அனைத்து முன்னணிப் பத்திரிகை களும் இணையப் பதிப்புகளைவிட அச்சுப் பதிப்பக வடிவில்தான் பிரபலமாக உள்ளன. அமெரிக்கா விலும், ஐரோப்பாவிலும் பல முன்னணி பத்திரிகைகள் தங்களின் அச்சுப் பதிப்புகளை முற்றிலுமாகத் துறந்து விட்ட நிலையில், இணையத்தில் காணக் கூடிய டிஜிட்டல் பதிப்புகளாக மட்டுமே வெளிவருகின்றன. அச்சில் வரக்கூடிய மற்ற பத்திரிகைகளுக்கும் அச்சுப் பதிப்பு வாசகர்களைப்போல் இணையப் பதிப்பு வாசகர்கள் பல மடங்காக உள்ளனர்.

கல்வித்துறையை எடுத்துக்கொண்டாலும் டிஜிட்டல் சூழலின் ஆக்கிரமிப்பு நாளுக்கு நாள் பெருகிவரு கிறது. ஆனாலும் கல்வித்துறை முற்றிலும் டிஜிட்டல் மயமாகப் பல ஆண்டுகள் ஆகலாம். பல மேற்கத்திய பல்கலைக்கழங்கள் தங்களின் பிரதான கல்விப் பணிகளை டிஜிட்டல் மயமாக்கிவிட்டன.

MOOC (Massive Open Online Courses) என்பது இன்று அமெரிக்கக் கல்வித்துறையில் பிரபலமாகி வருகிறது. இதன் அர்த்தம் இன்று ஸ்டான்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் பல பாடப்பிரிவுகளைப் பயில உலகின் எந்தப் பகுதியில் உள்ளவர்களும் இதில் சேர்ந்து கொள்ளலாம். அதுவும் கிட்டதட்ட இலவசமாகச் சேர்ந்த பின்பு நீங்கள் பயிலும் பாடப்பிரிவின் எல்லாக்

**சிறுகதை**

தமிழில் அச்சு இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு வந்தபின் வாய்மொழிக் கதைகள் பலவும் அச்சேறின. வீரமாமுனிவரின் பரமார்த்தகுருவும் சீடர்களும் கதைகள் தமிழ்ச் சிறுகதைகளின் முன்னோடி எனலாம். ந. பிச்சமூர்த்தி, கு. ப. ராஜகோபாலன், கல்கி, ராஜாஜி, புதுமைப்பித்தன், மௌனி, தி. ஜானகிராமன், லா. ச. ராமாமிருதம், சுந்தர ராமசாமி, கு. அழகிரிசாமி, அகிலன், ஜெயகாந்தன், ஆ. மாதவன் போன்றோர் ஆரம்பகாலச் சிறுகதைப் படைப்பாளர்களில் குறிப்பிடத்தக்கவர். தமிழ்ச் சிறுகதை உலகின் சக்கிரவர்த்தி எனப் போற்றப்படுபவர். புதுமைப்பித்தன், ராஜம் கிருஷ்ணன், சூடாமணி, சிவசங்கரி, வாசந்தி, அநுத்தமா, கோமகள் போன்றோர் முக்கிய பெண் சிறுகதையாளர்கள். தற்காலத்தில் நாஞ்சில் நாடன், மேலாண்மை பொன்னுசாமி, திலீப் குமார், பா. செயப்பிரகாசம், தனுஷ்கோடி ராமசாமி, பாமா, சிவகாமி போன்றோர் சிறந்து விளங்குகின்றனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

குறிப்புகளையும் இணையம் மூலமாகவே பெறலாம். ஆசிரியர்கள் பாடம் நடத்துவதையும் இணையத்தின் மூலமாகவே பார்க்கலாம். உங்கள் சந்தேகங்களையும் இணையம் மூலமாகவே நிவர்த்தி செய்துகொள்ளலாம். இறுதியில் நீங்கள் பயின்ற பிரிவுக்குச் சான்றிதழ் பெறத் தேர்வெழுத வேண்டும். அந்தத் தேர்வெழுத நீங்கள் ஒரு கணிசமான தொகையைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். இரண்டாயிரம் பேர் நேரடியாகப் பல்கலைக்கழகத்தில் பயிலுகிறார்கள் என்றால், இரண்டு லட்சம் பேர் இணையத்தின் மூலம் அப்பல்கலைக்கழகத்தில் பயிலுகிறார்கள்.

இன்று மருத்துவத்துறையிலும் டிஜிட்டல் சூழலின் ஆக்கிரமிப்பு பிரதானமாக உள்ளது. நோயாளி ஓர் இடத்தில் இருக்க, மருத்துவர் இன்னொரு இடத்தில் இருக்க இணையங்களின் மூலமாக மருத்துவ ஆலோசனைகளும், சிகிச்சைகளும் நிகழ்கின்றன. இன்று உலகில் ஏற்படும் பல்வேறு நோய்களைக் கண்டறிய ஸ்கேன் எனப்படும் அதிநவீன டிஜிட்டல் தொழில்நுட்பமே பயன் படுத்தப்படுகிறது. சித்த வைத்தியம், ஆயுர்வேதம் போன்ற மாற்று மருத்துவமுறைகள்கூட சிகிச்சைக்கு முன்பு நோய்களை நுட்ப மாகக் கண்டறிய இதுபோன்ற ஸ்கேன் முறையை நம்ப வேண்டி யுள்ளது.

80களில் களங்களுக்குச் சென்று மக்களோடு நேரடியாகத் தொடர்பு கொண்டு சமூக மாற்றத்திற்காகப் போராடியவர்கள் எல்லாம் இன்று இணையங்கள் மூலம் தங்களைத் தாங்களே புகழ்ந்துகொண்டு ஒருவித சுய விளம்பரப் போதையில் திளைக்கும் போராளிகளாக மாறிவிட்டனர்.

–எம். சிவகுமார்

**செயல்பாடுகள்**

- கேக் எனும் தின்பண்டத்தில் ஒளித்துவைத்துக் கடத்தப்பட்ட திரைப்படம் பற்றிய சுவையான தகவலைத் துணுக்குச் செய்தியாக எழுதுக.
- அச்சு ஊடகங்களின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பது பற்றிச் சிறுகட்டுரை வரைக.
- திரைப்படங்கள் எண்ணியல் வடிவத்தில் (டிஜிட்டல்) வரத்தொடங்கிவிட்டன. இதனால் விளையும் நன்மைகளைப் பட்டியலிடுக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

௧௨

# ஒளியும் இருளும்



## கண்ணுக்குத் தெரியாத எதிரி

மனிதகுலம் முன்னேறவும், பல்வேறு தகவல்கள் உலகத்தில் உள்ள அனைவருக்கும் விரைவில் போய்ச் சேரவும்தான் சமூக வலைத்தளங்கள் தோன்றின. கூகுள், ஆர்கட், ஃபேஸ்புக், ட்விட்டர் வரிசையில் தற்போது மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் சமூக வலைதளங்களில் 'வாட்ஸ் அப்' முக்கிய பங்கு வகிக்கிறது. மற்ற சமூக வலைத்தளங்களைக் காட்டிலும் அதிகளவில் நண்பர்களை இணைப்பதில் 'வாட்ஸ் அப்' முன்னணியில் இருக்கிறது. வாட்ஸ் அப்பின் திடீர் அசுர வளர்ச்சியைக் கண்டு அசந்துபோன ஃபேஸ்புக், வாட்ஸ் அப்பை விலைக்கு வாங்கியது தெரிந்த தகவல். ஆனால், பல்வேறு வசதிகளைப் பயன்படுத்துவதற்கு எளிதாக இருந்தாலும், வழக்கம் போலப் பெண்களை அச்சுறுத்தும் காரியங்கள் வாட்ஸ் அப் வழியாகத் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

முகம் தெரிந்த நண்பர்களை மட்டுமே இணைக்கும் தளம் என வாட்ஸ் அப் கருதப்பட்டதால் தான் பெண்கள் வட்டத்திலும் வாட்ஸ் அப்பைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் வாட்ஸ் அப்பிலும் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பது சமீபகாலமாக நிரூபணம் ஆகிவருகின்றது. மற்ற வலை தளங்களைக் காட்டிலும் வாட்ஸ் அப்பில் தகவல் எளிதில் பரிமாறப்படுவதாலும், யார் தகவலை உருவாக்கினார்கள், எப்படிப் பரவியது என்பது குறித்து உடனடியாகப் போலீசாரால் கூடக் கண்டுபிடிக்க முடியாது என்பதாலும் பல்வேறு தவறான தகவல்கள் தொடர்ந்து வாட்ஸ் அப்பில் பரவி வருகின்றன.

ஒரு பெண்ணின் புகைப்படத்துடன், ஆடியோ ஒன்றும் வாட்ஸ் அப்பில் வலம் வருகிறது. அந்த ஆடியோவில் ஒருவர், நான் ஒரு பெண்ணின் புகைப்படத்தை உங்களுக்கு பகிர்ந்துள்ளேன். அந்தப் பெண் சென்னையில் பகல் வேளையில் தனியாகப் பெண்கள் இருக்கும் பல வீடுகளில் காஸ் இணைப்புப் பரிசோதனை செய்வதாக வீட்டில் சென்று காஸ் இணைப்பைப் பரிசோதனை செய்தபின் கைகழுவ வேண்டும் என்பார். அவருக்கு உதவும்போது அவர் தண்ணீரில் கைகளைக் கழுவிய பின்னர், குளோரோபார்ம் நனைக்கப்பட்ட கர்சீப் கொண்டு வீட்டில் இருக்கும் பெண்ணை மயக்கமடையச் செய்து வீட்டுக்குள் இருக்கும் நகைகளைத் திருடிச் சென்றுவிடுவார். இது போலப் பல வீடுகளிலும் கைவரிசை காட்டியிருக்கிறார். எனது போலீஸ் நண்பர் இந்தத் தகவலை எனக்குச் சொன்னார். நான் உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். இந்த போட்டோ மற்றும் ஆடியோவை உங்களுக்குத் தெரிந்தவர்கள் எல்லோருக்கும் அனுப்புங்கள். பெண்களுக்கு விழிப்புணர்வு குறைவு. நாம் தான் அவர்களை எச்சரிக்கை செய்ய வேண்டும் என நீளுகிறது அந்த ஆடியோ.

இது உண்மையா, பொய்யா, எனத் தெரியாமல் பலரும் தங்களது நண்பர்களுக்கு இந்தத் தகவல்களைப் பரப்பி வருகிறார்கள். இந்தத் தகவல் உண்மையாகவோ பொய்யாகவோ இருக்கலாம். ஆனால் இந்தச் சம்பவம் பல பாடங்களை நமக்குக் கற்று கொடுத்து இருக்கிறது. அது பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதே.

**ஏன் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை?**

வாட்ஸ் அப் மற்றும் இதர சமூக வலைதளங்களில் ஒரு பெண் தனது புகைப்படத்தைப் பதிவேற்றி இருக்கிறார் என வைத்துக்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

கொள்ளுங்கள். அந்தப் பெண்ணுக்கு விரும்பத்தகாதவர், அந்தப் பெண்ணை அவமானப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் அவரது போட்டோவை இணைத்துச் சில ஆடியோ, வீடியோக்களை உருவாக்கி அதனை எளிதில் வாட்ஸ் அப்பில் பரப்ப முடியும். இதனால் சம்பந்தப்பட்ட அந்தப் பெண்ணின் எதிர்காலமே கேள்விக்குறியாகும் அபாயம் உள்ளது.

பெண்கள் என்ன செய்ய வேண்டும்?

பெண்கள் எந்தவிதச் சமூக வலைதளங்களில் இருந்தாலும் முடிந்த வரை தங்களின் புகைப்படங்களைப் பதிவேற்றக் கூடாது. வாட்ஸ் அப்பில் நான் எனக்குத் தெரிந்தவர்களுடன் மட்டுமே தொடர்பில் இருக்கிறேன். எப்படி எனக்கு ஆபத்து வரும் என நீங்கள் நினைக்கலாம். வாட்ஸ் அப்பில் உங்களுக்குத் தெரிந்தவர்களை மட்டுமே நீங்கள் இணைத்தாலும் உங்கள் கைப்பேசி நம்பரை வைத்திருக்கும் எவரும் உங்களை கண்காணிக்க முடியும். நீங்கள் என்ன படத்தை ப்ரொபைல் படமாக வைத்திருக்கிறீர்கள்., என்னென்ன ஸ்டேட்டஸ் இடுகிறீர்கள், எப்போ தெல்லாம் வாட்ஸ் அப்பில் வருகிறீர்கள் என்பதன் மூலமாக உங்களை அவர்கள் தொடர்ந்து கண் காணிக்க முடியும். இவற்றில் இருந்து தப்ப ஒரே வழி நீங்கள் உங்களது வாட்ஸ் அப் செட்டிங்களை மாற்றவேண்டும். உங்களது கைப்பேசியில் இருக்கும் நபர்களுக்கு மட்டுமே உங்களது ப்ரொபைல் பற்றிய தகவல் தெரியவோ அல்லது யாருக்குமே உங்களது ப்ரொபைல் பற்றிய தகவல் தெரியாமல் இருக்கவோ அதற்கான ஆப்ஷன்களை வாட்ஸ் அப் தருகிறது. அவற்றை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.

முடிந்தவரையில் உங்களது புகைப்படம் மற்றும் நீங்கள் எந்தெந்த நேரங்களில் வாட்ஸ் அப்பில் வருகிறீர்கள் என்பதை முற்றிலுமாக அனைவரிடம் இருந்தும் மறைப்பது நலம். வாட்ஸ் அப் குழுக்களில் இணைவதில் நிறையப் பிரச்சனைகள் உள்ளன. எனவே உங்களுக்குத் தெரியாத நபர் இணையும் வாய்ப்பு உள்ள வாட்ஸ் அப் குழுக்களில் இருந்து விலகி விடுங்கள். உங்களுக்குத் தெரிந்த நெருங்கிய நண்பர்கள் மட்டுமே இருக்கக் கூடிய குழுக்களில் மட்டுமே இணையுங்கள். ஏனெனில் வாட்ஸ் அப் குழு மூலமாக

**வாட்ஸ் அப் என்றால் என்ன?**



வாட்ஸ் அப் என்பது ஒரு ஸ்மார்ட் போனில் பயன்படுத்தும் வகையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு மெசேஜிங் அப்ளிகேஷன். இதன் மூலம் எஸ்.எம்.எஸ்., வீடியோக்கள், குரல்வழி செய்திகள், லிங்ஸ் எனப்படும் இணைய சுட்டிகள் போன்றவற்றை ஸ்மார்ட் போன் மூலம் அனுப்ப முடியும். குறுஞ்செய்தி அனுப்புவதற்கு மாற்றாகக் கண்டுபிடிக்கப்பட இந்த அப்ளிகேஷன் மூலம் மேற்குறிப்பிட்ட அனைத்தையும் செயல்படுத்த முடியும்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

உங்களைப் பற்றிய விவரங்கள், உங்களது தொலைபேசி எண் சம்பந்தமில்லாத நபருக்கு சென்றடையும் வாய்ப்பும் அதை அவர்கள் தவறாகப் பயன்படுத்தும் வாய்ப்பும் அதிகமாக இருக்கிறது. ஒருதலைக்காதலில் பெண்களைப் பழிவாங்க அந்தப் பெண்ணை அவமானப்படுத்த வாய்ப்பு உள்ளது. எனவே யாரிடமும் உங்களது புகைப்படத்தைக் கண்டிப்பாகத் தராதீர்கள். வேலைவாய்ப்பு பற்றித் தகவல்களை உங்களுக்கு அளிப்பதாகக் கூறும் இணையதளங்களை நம்பி உங்களது புகைப்படங்களைக் கண்டிப்பாக இணைக்காதீர்கள்.

வாட்ஸ் அப்பில் இருப்பவர்கள் கவனத்துக்கு :

வாட்ஸ் அப்பில் தினமும் பல லட்சம் தகவல்கள் பரிமாறப்படுகின்றன. உங்களுக்கு வரும் ஒரு தகவல் உண்மையானது என 100 சதவிகிதம் தெரிந்தாலோ அல்லது பிரபல நிறுவனங்களின் இணையதளங்களில் உறுதியிட்டுக் கூறப்படும் தகவல்களை மட்டுமே பரிமாறுங்கள்.

சமீபத்தில் கேன்சர் நோய்க்கான மருந்து அடையாறில் உள்ள புற்றுநோய் மருத்துவனை ஒன்றில் இருப்பதாக ஒரு தகவல் வெளியானதையும் அந்தத் தகவலில் 100 சதவிகிதம் உண்மையில்லை என அடையாறு புற்றுநோய் மருத்துவமனை மறுத்ததையும், பிரபல நடிகர், ஜனாதிபதி ஆகியோர் இறந்ததாகப் பரவிய தவறான தகவல்களையும் நினைவில் நிறுத்துங்கள். எனவே உங்களுக்குச் சரியான தகவல் எனத் தெரியாத நிலையில் தகவல்களைப் பரப்பாதீர்கள்.

சமூக வலைத்தளங்கள் மனிதர்களை இணைக்க உருவாக்கப் பட்டவையே தவிர, சமூக விரோதிகள் தவறாகப் பயன்படுத்த உருவாக்கப்பட்டதல்ல என்பதை நெஞ்சில் நிறுத்துவோம்.

**பணிமனையில் உருவாக்கப்பட்டது**

**செயல்பாடுகள்**

- ✍ தற்போது அதிகப் பயன்பாட்டில் உள்ள சமூக வலைதளமான வாட்ஸ் அப்பைத் தவறாகப் பயன்படுத்துவதால் விளையும் தீமைகள் பற்றித் தலையங்கம் ஒன்று தயார் செய்க.
- ✍ சமூக வலைதளங்கள் பற்றி நடைபெறும் கருத்தரங்கில் வாசிக்க 'வலைதளங்கள் விரிக்கும் வலை' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## திரைவழி நுழையும் வன்கொடுமை

தெருக்கூத்து, நாடகங்கள் போன்ற மரபான நிகழ்கலைகளின் இடத்தையும், பிற சமூக நிகழ்வுகளின் இடத்தையும் தற்போது தொலைக்காட்சியும் திரைப்படமும் கைப்பற்றிக் கொண்டன. இவை பெருமுதலாளிகள் மற்றும் பன்னாட்டு முதலாளிகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஊடக உற்பத்தித் துறைகள். கலைஞர்களும் பங்கேற்பாளர்களும் இந்த முதலீட்டு வலையில் தாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பது அறியாமல் சிக்கிக் கொண்டிருப்பவர்கள். பார்வையாளர், பங்கேற்பாளர் என்ற நிலையைக் கடந்து நுகர்வு நோயாளிகளையும் காட்சி போதை அடிமைகளையும் உருவாக்குவதன் மூலம் இந்நிறுவனங்கள் லாபமடைகின்றன. பல லட்சம் கோடிகள் முதலீடு – லாபம் என்ற கணக்கீட்டில் சமூகப் பொருளாதாரத்தைக் கொள்ளையடிக்கும் புதிய வர்க்கமொன்று உருவாகி முன்பிருந்த முதலாளிகளுடன் இணைந்து இந்தியச் சமூகங்களை அழிவை நோக்கித் தள்ளுகிறது. “முதலாளிகள் மட்டும் வாழ்வது, மக்கள் முட்டாள்களாகச் சாவது” என்பதுதான் இவர்களின் மூலமந்திரம்.

உலகம் மற்றும் நாட்டு நடப்புகள், அறிவுப்பூர்வமான விவாதங்கள், சமூகக் கலாச்சார, மனித உரிமை மதிப்பீடுகளை வளர்க்கும் கலைகள் போன்றவற்றை மக்களுக்குக் கொண்டு செல்லும் ஊடகமாக இயங்க வேண்டிய தொலைக்காட்சி நிறுவனங்கள் சாதி, மதம், ஆண் – பெண் ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த இந்தியச் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கூர்மைப்படுத்தி, வெறுப்புணர்வைத் தீவிரப்படுத்தி வன்முறைகளைத் தூண்டும் கருவிகளாகச் செயல்படுவதுடன் உலகச் சந்தையில் குவியும் அனைத்து வகையான குப்பைகளையும் வாங்கித் தன் வீட்டை நிறைக்கும் நுகர்வு நோய் பிடித்த தலைமுறையையும் திட்டமிட்டு உருவாக்கு கின்றன. ஊடகப் பயங்கரவாதம் இன்று பலவடிவங்களில் இவற்றின் வழியாகப் பெருகிவருகிறது. 2012ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் தென்மாநிலங்களில் வடகிழக்கு மாநிலத்தின் மீது தொடர் வன்முறைகள் நடப்பதாக வதந்தியைப் பரப்பி ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற வேண்டிய நிலை உருவாக்கப்பட்டது. இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம், உத்திரபிரதேச மாநிலம் முசாபர் நகரில் நடந்த மதக் கலவரத்தில் 43 பேர் உயிரிழந்ததும் ஆயிரக் கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டதும் தொலைக்காட்சி ஊடகங்களின் பொறுப்பற்ற செயலாலும், அவற்றின் திட்டமிட்ட சதியாலும் என்று மனித உரிமை அமைப்புகள் கண்டிக்கின்றன.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

சமூக முன்னேற்றத்திற்கும் நல்லிணக்கத்திற்கும் தனது ஆக்கப்பூர்வமான கடமையை நிறைவேற்ற மறுக்கும் தொலைக்காட்சிகள் பெண்ணுரிமைக்கும் பெண்கள் நலனுக்கும் கூடுதலான தீமையை இழைக்கின்றன. உலக இந்திய முதலாளிகள் உற்பத்தி செய்யும் எந்தவகையான கழிவுகளையும் உள்வாங்கிக் கொள்ளும் குப்பைத் தொட்டிகளாக மக்களின் மனமும் உடலும் மாற்றப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாக சிந்தனை மற்றும் அறிவு மரபு மறுக்கப்பட்ட இந்திய வெகுமக்கள் சமூகத்தில் புதிய அரசியலையும் பகுத்தறிவு கல்வியையும் ஊடகம் வழியாகப் பரப்ப வேண்டியது இருபதாம் நூற்றாண்டின் தேவையாக இருந்தது. அது நடக்கும் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது. ஆனால் தற்போது காட்சி ஊடகங்கள் வெகுமக்களைச் சிந்திக்கவும் கேள்வி கேட்கவும் சமூக மாற்றங்களை ஏற்கவும் சக்தி அற்ற மந்தைகளாகவும் கும்பல் வன்முறையை விரும்பும் முகம் மறைத்த கூட்டங்களாகவும் உருவாக்கிக்கொண்டிருக்கின்றன.

நுகர்வுக் கலாச்சாரத்தை உள்வாங்கி, சிந்திக்க முடியாத தலைமுறையினரைப் பெற்றெடுத்து வளர்ப்பவர்கள் பெண்கள் என்பதால் பெண்களின் அடிப்படையான ஆளுமையையும் அடையாளத்தையும் சிதைப்பதிலிருந்து ஊடகங்கள், தம் வேலையைத் தொடங்குகின்றன. விளம்பரங்கள், தொடர்கள், கொண்டாட்டங்கள் அனைத்திலும் பெரும்பான்மை இந்தியப் பெண்களின் உடல் மற்றும் நடத்தை அடையாளங்கள் அவமானப்படுத்தப்படுகின்றன. இந்தியச் சமூகத்தின் பெரும்பான்மை மக்களின் நிறமான கருப்பு, பழுப்பு என்பவை மிகுந்த இழிவானவை என்பது போலவும் ஒரு நோய் என்பது போலவும் சித்தரிக்கப்படுவது இந்திய ஊடகங்களின் பொதுத்தன்மையாக இருக்கின்றன. திரையில் தோன்றும் சிறுமி முதல் முதிய பெண் வரை அனைவரும் வெளுத்த, சிவந்த தோல் நிறமுடையவர்களாகவும் காட்டப்படுகிறார்கள். வெண்மை, செம்மை நிறங்கள் உயர்வு, அதிகாரம், ஆளுமை, தூய்மை என்பவற்றின் உறுதியான குறியீடாக வைக்கப்படுவதால் இந்திய இனக்குழுப் பெண்களின் உருவம், தோற்றம் இழிவுப்படுத் தப்படுவதுடன் அவர்களின் பொது அடையாளம் சிறுமைப் படுத்தப்படுகிறது.

அழகு என்பது நோயற்ற உடல், தீமை வெறுக்கும் மனம், அறிவாற்றல், சிந்திக்கும் திறமை போன்றவையே என்பதை மறுத்துத் தோலின் நிறம் தொடங்கி முடியின் நீளம், வயது தெரியாத சருமம் என்ற நீண்ட பட்டியலைத் தரும் ஊடகங்கள் மனித உடலின் இயற்கையான மாறுதல் மீது வெறுப்பை



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

உருவாக்குகின்றன. இதன் காரணமாகப் பெண்களின் உளவியிலில் தாழ்வுணர்ச்சி, குற்றவுணர்ச்சி, சுயவெறுப்பு என்பவை உருவாக்கப் படுகின்றன. அழகு சாதனப் பொருட்கள் அனைத்தும் பெண்களின் தாழ்வுணர்ச்சி, குற்றவுணர்ச்சி, சுயவெறுப்பு என்னும் செயற்கைப் பொருள்களை கொண்டே உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த வகைப் பொருள்களைவிடப் பொருட்கள் பற்றிய ஓயாத காட்சியும் பேச்சும் பெண்மையின் தன்னம்பிக்கையை அழித்து ஒடுங்கிய மனநிலையை உருவாக்கும் ஆயுதங்களாகச் செயல்படுகின்றன. பெண்களிடம் பெண்மை பற்றிய சுயமதிப்பைக் கீழிறக்கம் செய்து, பெண் உடலாலும் உள்ளத்தாலும் அறிவாலும் குறைபட்டவள் என்ற பிம்பத்தைச் சமூகத்தில் கட்டியெழுப்பும் வன்கொடு மையைத் தொடர்ந்து செய்கின்றன பகுத்தறிவற்ற காட்சி ஊடகங்கள். தன்னை மறுக்கும் ஒரு பெண்ணின் மீது அமிலம் வீசிச் சிதைக்கும் மனநோயாளியின் உளவியலும் ஆணாதிக்க வன்முறையென்ற புள்ளியில் ஒன்றாக இணைகின்றன.



உறங்க ஒரு கூரையும், சுத்தமான குடிநீரும், கழிப்பிட வசதியின்றி இந்தியப் பெண் களின் பாதிபேர் வறுமைக்குப் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். ஊட்டச்சத்துக் குறைவால் ரத்த சோகையால் பீடிக்கப் பட்ட தினக்கூலிவேலை செய்யும் தாய்மார் தங்கள் மகள்களுக்குச் சுகாதாரமான நாப்கின்கூட வாங்கித் தர முடியாத நிலையில் உள்ளனர். ஆனால் பெட்டிக்கடையில் ஐந்து ரூபாய்க்குச் சிவப்பழகுக் கிரீம் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சிவப்பழகு என்ற ரத்தவெறி பிடித்த மிருகம். இந்தியப் பெண்களின் உழைப்பையும் உயிரையும் உறிஞ்சி நடைப்பிணமாக்கிக் கொண்டிருக்கிறது.

நுகர்வுக் கலாசாரப் போட்டி நிறைந்த இந்த உலகில் நடுத்தரவர்க்கப் பெண்கள் எல்லாவற்றுக்கும் சற்றுக் கூடுதல் விலை தர வேண்டும். பெண்களின் வெளிப்புறத் தோற்றத்தை மட்டும் வெண்மையாக்கும் கிரீம்கள். இவற்றைப் பயன்படுத்தினால் ஆண்களைக் கவரும் கலை வசப்படுமென்கிறது ஒரு தொலைக்காட்சி விளம்பரம். பெண்களைப் பாலியல் பண்டமாகச் சித்திரிக்கும் விளம்பரங்கள் ஒரு வகை. சில வகை கார்கள், பைக், வாசனைத் திரவியம், ஷேவிங் கிரீம், சோப், உள்ளாடைகள், சாக்லெட், மிட்டாய் போன்றவற்றை உபயோகிக்கும் ஆண்களைக் கண்டால் பெண்கள் கூட்டம் கூட்டமாகத் துரத்திச் செல்வார்கள் என்கின்றன சில விளம்பரங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

ஆணாதிக்கச் சமூக நிறுவனங்களின் லட்சியக் கனவும் பெண்ண டிமைத்தனமும் மீண்டும் மீண்டும் இதன் மூலம் உறுதிப்படுத்தப் படுகின்றன. பெண்களின் மீதான பாலியல் வன்கொடுமைகள் தொடங்குவது இங்கிருந்துதான் எனத் தெரியாமல் தூக்குத் தண்டனை வழிதான் பெண்களைக் காப்பாற்ற முடியும் என்கின் றன சில ஊடகங்கள்.

பெண்ணை வீட்டுவேலை செய்யும் எந்திரமாக இந்த விளம்பரங் கள் வரையறை செய்கின்றன. பெண்களின் கடமைகளைத்தானே விளம்பரத்தில் காட்டுகிறார்கள் என்று கேட்பவர்களிடம் வெளிப்படுவது அப்பாவித்தனம் அல்ல. குடும்பத்தின் வேலை களை ஆண்களும் ஏற்க வேண்டும் என்ற பெண்களின் மனித வுரிமைக் கோரிக்கைக்குக் கல்லறை கட்டிக் குடும்ப வேலைகள் என்றால் அது பெண்களின் துறை, ஆண்கள், ஆளப்பிறந்தவர் கள் என்பதை நேரடியாகப் பிரச்சாரம் செய்கின்றன இந்த விளம்பரங்கள். இதன் மூலம் பெண்கள் குடும்ப வேலையைச் செய்ய மட்டுமே தகுதியுடையவர்கள், இக்கடமைகளைச் செய்வதன் மூலம் பெண் முழுமையடைவாள் எனும் பொதுப் புத்தியை இவை உறுதி செய்கின்றன. பெண்கள் என்பவர்கள் சுய சிந்தனையுடைய, சுதந்திரமான, அறிவுடைய பெண்களாக யாரும் இருக்க முடியாது என்ற கற்பிதத்தை, கருத்து உருவாக்கத்தைத் திட்டமிட்டுப் பரப்புகின்றன இவ்விளம்பரங்கள்.

ஆபாசமும் வன்முறையும் வக்கிரமும் மலிந்த திரைப்படங் களையும் திரைப்பாடல்களையும் திரை நடனங்களையும் மெகா தொடர்களையும் வீட்டிற்குள்ளே கொண்டுவந்து நிறைத்துப் பாலியல் பேதலிப்பையும் வன்முறையையும் இளைஞர்களுக் கும் சிறுவர்களுக்கும் கற்றுகொடுக்கும் தொலைக்காட்சிகள் ஒரு புறம்; படிக்கும் வயதில் காதலித்த தவறுக்காக வயது குறைந்த ஒரு பெண்ணையும் அவள் குடும்பத்தினரையும் உலகத்திற்குக் காட்சிப்படுத்த மன அளவில் தண்டித்து ஒழுக்கத்தைப் போதிக்கும் மத அடிப்படைவாதிகளின் வேலையைச் செய்யும் தொலைக்காட்சிகள் இன்னொரு புறம். இரண்டுக்கும் இடையில் நசுங்கிக் கொண்டிருப்பவை தற்கால மனித மதிப்பீடுகள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

பெண்கள் மீதான பாலியல் வன்முறைகள் பெருகியதற்குக் காட்சி ஊடகங்களுக்குப் பிரதான பங்கிருக்கிறது. பாலியல் உணர்வு களைத் தூண்டும் நிகழ்ச்சிகளை எந்தவிதத் தணிக்கையுமின்றி வீட்டுக்குள் தொலைக்காட்சிகளே கொண்டு வருகின்றன. இந்திய இளைஞர்களுக்கு முறையான பாலியல் கல்வியும் மனிதவுரிமைக் கல்வியும் குடும்பமோ கல்வி நிறுவனமோ அளிப்பதில்லை. ஆனால் தொலைக்காட்சிகள் ஒளிப்பரப்பும் பாலியல் கிளர்ச்சியைத் தூண்டும் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் இளைஞர்களிடமும் சிறுவர்களிடமும் பாலியல் பற்றிய புரிதலற்று வக்கிரம் பிடித்த மனஅழுத்தம் உருவாகிறது. இவற்றுடன் பெண்களை நுகர்வுப் பொருளாகக் கட்டமைத்துள்ள மதிப்பீடுகளும் இணையும்போது முறையற்ற பாலியல் குற்றச்செயல்களை நோக்கி அவர்கள் உந்தப்படுகின்றனர்.

இந்திய அரசியல் சட்டம் பாலியல் வல்லுறவுக்கும் துன்புறுத்தலுக்கும் உள்ளான குழந்தைகளின், பெண்களின் அடையாளத்தை வெளியிடக் கூடாது, பெற்றோரின் அடையாளத்தையும் ஊரையும் பள்ளியின் பெயரையும்கூட வெளியிடக்கூடாது, ஊடகங்கள் பாதிக்கப்பட்டவர்களின் முகம் மறைத்துதான் காட்சிப்பட வேண்டுமென்கிறது. பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தை வெளியிடும் ஊடகங்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்கிறது உச்சநீதிமன்றம். இந்திய நீதிமன்ற வழிக்காட்டுதல்களையும் ஊடக அறத்தையும் பெரும்பான்மையான ஊடகங்கள் கடைபிடிப்பதில்லை.

மனிதவுரிமை அமைப்புகள் அவ்வப்போது தொலைக்காட்சி நிறுவனங்களின் மனிதவுரிமை மீறலைக் கண்டித்து வழக்குகள் போடுகின்றன, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு, விளம்பரங்களுக்கு, தணிக்கை அவசியம் என்று தேசிய அளவில் விவாதங்கள் நடக்கின்றன. உச்ச நீதிமன்ற நீதிபதிகள், ஆட்சியாளர்கள் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். இன்று அரசியல்வாதிகளும் பல ஆட்சியாளர்களும் தொலைக்காட்சி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு உருப்பெருக்கப்பட்டவர்களாக உள்ளனர். அவர்களை இயக்கும் கைக்கருவியை முதலாளிகள் தங்கள் கைகளில் வைத்துள்ளனர். ஆனால் தொலைக்காட்சிப் பெட்டியும்

**புதுக்கவிதை**

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதை அதன் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பல்வேறு மாற்றங்களுக்கு இடம் கொடுத்தது. தமிழ்க் கவிதையை இலக்கணக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கும் முயற்சி இக் காலகட்டத்தில் எழுந்தது. இவ்வாறு எழுந்தவை தான் புதுக்கவிதைகள். ந. பிச்சமூர்த்தி புதுக்கவிதை இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர். நகுலன், அப்துல் ரகுமான், மு. மேத்தா, சிற்பி, ஞானக்கூத்தன், நா. காமராசன், சி. மணி, கல்யாண்ஜி, கலாப்ரியா, மீரா போன்றோர் புதுமைக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். சல்மா, குட்டி ரேவதி, மாலதி மைத்ரி, சுகிர்தராணி, வெண்ணிலா, தமிழச்சி தங்க பாண்டியன் போன்றோர் பெண்ணியம் சார்ந்த கவிதைகள் படைப்பதில் சிறந்து விளங்குகின்றனர்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

அதைக் கட்டுப்படுத்தும் கைக்கருவியும் நம்மிடம்தான் இருக்கிறது. பார்ப்பதும் புறக்கணிப்பதும் நமது பொறுப்பு. பெண்களை அடிமைப்படுத்தினால் ஒரு நாட்டை அடிமைப்படுத்திவிடலாம். ஊடக முதலாளிகள் தொலைக்காட்சித் திரை வழியே நமது வீட்டுக்குள் வந்து நம் அனுமதியுடன், பெண்கள் மீதான வன்கொடுமைகளை நிகழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். நாம் அவற்றின் ஓயாத மறுஒளிபரப்புகளுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறோம்.

**– மாலதி மைத்ரி**

**மாலதி மைத்ரி**



பெண்ணியம் பாடவந்த இன்றைய புதுக்கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர். முதிர்ச்சியும் பக்குவமும் கலைநேர்த்தியும் இவரது கவிதைகளின் முத்திரைகள். நீலி, நீரின்றி அமையாது உலகு, எனது மதுக்குடுவை போன்றவை இவரது படைப்புகள்.

**செயல்பாடுகள்**

- நம் நாட்டு ஊடகங்கள் உடலாலும் உள்ளத்தாலும் அறிவாலும் பெண் குறைபட்டவள் என்ற பிம்பத்தைச் சமூகத்தில் கட்டியெழுப்புகின்றன எனும் கவிஞர் மாலதிமைத்ரியின் கருத்துகள் மீதான உங்கள் மதிப்பீடுகளை முன்வையுங்கள்.
- தொலைக்காட்சிகள் நடத்தும் மனித உரிமை மீறல்களுக்கு முடிவு காண்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து குறிப்புகள் எழுதுங்கள்.



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com

## சொல்லகராதி

அகண்டம் - பெருவெளி
அப்பளத்தாரை - மணல்மேடு
ஆயாசம் - மனச்சோர்வு
இகழ்தல் - நிந்தித்தல்
இரிதல் - அஞ்சியோடுதல்
இல்லோர் - தரித்திரர்
உப்பளத்தரை - உப்பு வயல், உப்பு விளைவிக்கும் இடம்
உலுத்தர் - பொருளாசைக்காரர்
உளவியல் - மனவியல்
என்பு - எலும்பு
கடிது - விரைவு
கலகம் - குழப்பம், சண்டை, சச்சரவு
கலம் - ஒரு வகை முகத்தலளவை
களி - மகிழ்
கானம் - வனம், காடு
கிள்ளை - கிளி
கிளைஞர் - உறவோர் உறவினர்
குறுவை - ஒரு வகை நெல்
கேண்மை - உறவு, நட்பு
கோடு - கொம்பு
சாளரம் - ஜன்னல், பலகணி
சிரசு - தலை
சுறவு - சுறாமீன்
செக்கர் வானம் - சிவந்த வானம்
செங்கதிரோன் - சூரியன்
சேவித்து - வணங்கி
தண்டலை - சோலை
தணிதல் - ஆறுதல், குறைதல், இளகுதல்
தாளடி - நெல் பயிரிடும் ஒரு பருவம்
திறவோர் - பகுத்தறிவு உள்ளவர்
துஞ்சி - மடிந்து, இறந்து
நரகன் - மாபாவி, தீயவன்
நித்திய - தினம்
நோதல் - துன்புறல்
பட்டோன் - இறந்தவன்
பரகதி - முத்தி, மோட்சம்
பித்து - தன் நிலை மறத்தல்
புடை - பக்கம்
புள் - பறவை
புளினம் - மணல்மேடுகள்
புன்கணீர் - கண்ணீர்
வந்தனை - ஆராதனை
வருணன் - மழைக்குரிய கடவுள்
வல்சி - உணவு, தானியம்
வலசை - இடம் பெயர்தல், இடம் பெயர்ந்து செல்லுதல்
வள்ளம் - சிறுதோணி
வளை - எலி போன்ற உயிரினம் வாழுமிடம்
வாளாவியிருத்தல்- சும்மா இருத்தல்
வெய்யோன் - ஆதவன், கதிரவன்
வேலி - நில அளவை
ஜகம் - உலகம்



Downloaded from https:// www.studiestoday.com

Downloaded from https:// www.studiestoday.com



Downloaded from https:// www.studiestoday.com